இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 98 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 20 சனிக்கிழமை 04.03.2017

## 2 நாள்களில் 29 பேருக்கு யாழில் டெங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் தொற்றுவது அதிகரித்துள்ளது. இந்த மாதம் 2 நாள்களில் மட்டும் 29 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.
பொதுமக்கள் டெங்குத் தொற்றிலிருந்து மிக அவதான >> 24

## திருகோணமலையில் தீவிரமாகும் டெங்கு

### பெண் ஒருவர் உயிரிழப்பு

மூதூர், மார்ச் 4
டெங்குக் காயச்சல் காரணமாக திருகோணமலைபொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 24 வயதுப் பெண் சிகிச்சை பயனின்றிக் கடந்த புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
கிண்ணியா 3ஆம் வட்டாரம் அண்ணல் நகரைச் சேர்ந்த பாத்திமா குசைனா என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.
பிரேத >> 24

## குடாநாட்டிலும் டெங்கினால் குடும்பப் பெண் நேற்றுச் சாவு

### தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சலால் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவர் காய்ச்சலுக்குத் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார். பின்னரே அவருக்கு ஏற்பட்டது டெங்கு என்பது தெரியவந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த நந்தகுமார் லக்கி (வயது - 34) என்பவரே உயிரிழந்தார். இவர் 9 மற்றும் 5 வயதுடைய பிள்ளைகளின் தாய். >> 24

## போராட்டங்களுக்கு மத்தியில் இன்று யாழ். வரும் மைத்திரி



யாழ்ப்பாணம், மார்ச் 4
காணாமற்போனோரின் உறவுகளின் போராட்டம், நில மீட்புக் கான போராட்டம், வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் என்றுவடக்கில் பலமுனைப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வருகை தரவுள்ளார். >> 04

## காணாமற்போனோர் செயலகம் அமைப்புக்கு எதிராக மனுத் தாக்கல்

கொழும்பு, மார்ச் 4
காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுவதைத் தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் அந்த அலுவலகம் >> 24



## வேலையற்ற பட்டதாரிகள் அரச தலைவரை இன்று யாழ்ப்பாணத்தில் சந்திப்பர்

யாழ்ப்பாணம், மார்ச் 4
வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகள் இன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை யாழ்ப்பாணத்தில் சந்திப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 04

## யாழ்ப்பாணத்தில் நேற்று அதி கூடிய மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றுப் பரவலாக பெய்த கடும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்ததுடன் உடைமைகளுக்குச் >> 04

## பொறுப்புக் கூறல் மற்றும் நிலைமாறு கால நீதி விவகாரங்களில்

# மந்தம்

### கொழும்பு மீது ஹுசைன் கடும் சாடல்




ஜெனிவா, மார்ச் 4
இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை மிக மிக மந்தகதியிலேயே முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் சாடியுள்ளார். கடந்த காலக் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறல் தொடர்பில் முழுமையான செயற்பாடு இன்மை, நிரந்தர சமாதானம், நல்லிணக்கம் உருவாவதைப் பாதிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை எதிர்வரும் 22ஆம் திகதி வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், அதன் முதல் வரைவு நேற்றுத் திடீரென வெளியிடப்பட்டுள்ளது. அதிலேயே மேற்படி விடயங்களை ஆணையாளர் கடும் சொற்களைப் பயன்படுத்திக் குறிப்பிட்டுள்ளார். >> 24

## இலங்கையின் மனித உரிமைகளை ஐ.நா. கண்காணிப்பது கட்டாயம்

### ஆணையாளரின் அறிக்கையில் பரிந்துரை

கொழும்பு, மார்ச் 4
இலங்கையின்மனித உரிமைகள்நிலையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும், நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை செயற்படுத்துவதற்கான உதவிகளை வழங்க வேண்டும் என்றும், >> 04

## கலப்பு நீதிமன்றுக்கு பொது வாக்கெடுப்பு நடத்துவது அவசியம்

### கூறுகிறார் தலைமை அமைச்சர்



கொழும்பு, மார்ச் 4
கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமானால் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய சட்ட வாரத்தின் தொடக்க நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
கலப்பு நீதிமன்றத்தை அமைப்பது அரசமைப்பு ரீதியாகச் சாத்தியமற்றது. அத்தகைய நகர்வை மேற்கொள்வதற்குப் பொது >> 23

## பெற்றோரை அச்சுறுத்திய புத்திரனுக்கு 6 வருடச் சிறை

### சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பு

சாவகச்சேரி, மார்ச் 4
பெற்றோரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட அருமை மைந்தனுக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார் >> 24

முச்சந்தி முரளி



என்னதான் சொன்னாலும் இவையளுக்கு செவிடன் காதில ஊதின சங்குதான் பாருங்கோ...

## ஐ.நா. மனித உரிமைப் பணியகத்தை இலங்கையில் அமைக்கப் பரிந்துரை

கொழும்பு, மார்ச் 4
இலங்கையைக் கண்காணிக்கவும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தை இலங்கையில் அமைப்பதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் பணியகத்துக்கு இலங்கை அரசு அழைப்பு விடுக்க >> 24

## கூட்டமைப்பு வரவேற்பு

கொழும்பு, மார்ச் 4
இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்கள் கொடுத்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் முன்வைத்துள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.
இவ்வாறு கூட்டமைப்பின் தலைவரும் >> 04



# பற்றைக்குள் இழுத்துச் சென்று பெண்ணுக்குக் கத்திக்குத்து

*சாந்தபுரத்தில் நேற்றுப் பயங்கரம்*
*ராணுவச் சிப்பாய் மீது சந்தேகம்*

கிளிநொச்சி, மார்ச் 4

இராணுவச் சிப்பாய் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகிய நிலையில், பெண் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சங்கிலியை அறுக்க முயன்றே அவர் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றார் என்று கத்திக்குத்துக்கு இலக்கான பெண் விசாரணையில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, சாந்தபுரம், 8ஆம் வீதிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றது. சாந்தபுரத்தை சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சாந்தபுரம் பகுதியில் மீன்பிடிக்க சென்றுகொண்டிருந்த பெண்ணை, அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிக் கொண்டிருந்த நபர், பற்றைக் காட்டுக்குள் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றார். பற்றைக் காட்டுப் பகுதியிலிருந்து வந்த அலறல் சத்தம் கேட்கவே அங்கு ஓடிச் சென்று பார்த்தார் குறித்த பெண்ணின் மகன். கழுத்துப் பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் தனது தாயார் கிடப்பதை அவர் அவதானித்தார். தாயை மீட்டு உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அவர் சேர்த்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

"சாந்தபுரம் கிராமத்தில் இருந்து இரணைமடுக் குளத்துக்கு நன்னீர் மீன் தொழில் நடவடிக்கைக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த போது பாதையின் இடையில் இரணைமடு இராணுவ தலைமையகத்துக்கு பின்புறமாக காட்டுக்குள் மறைந்திருந்த ஒருவர் திடீரென நான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டார். நான் அறுக்க விடாது தடுத்தேன். இதன் போதே அந்த நபர் கத்தியால் கழுத்தில் குத்தினார். குறித்த நபர் இராணுவ சிப்பாயாகவும் இருக்கலாம்" என்று காயமடைந்த பெண் தெரிவித்தார்.

"இரணைமடு குளத்துக்குச் சென்றுக்கொண்டிருந்தேன். அம்மாவை வரும் வழியில் கடந்தேன். ஐம்பது மீற்றர் தூரத்துக்கு நான் சென்ற நிலையில் அம்மாவின் அலறல் சத்தம் கேட்டது. சத்தம் கேட்டதன் பின்னர், பற்றைக்குள் இருந்து இராணுவச் சிப்பாய் ஒருவர் சிவில் உடையில் வேகமாக வந்தார். பற்றைக்குள் சென்று பார்த்த போது அம்மா குருதி வழிந்த நிலையில் காணப்பட்டார். சிவில் உடையில் வந்த இராணுவச் சிப்பாயே எனது அம்மாவை குத்தியிருக்க வேண்டும். அந்த இராணுவ சிப்பாயை என்னால் அடையாளம் காட்ட முடியும்" என்று கத்திக்குத்துக்கு இலக்கான பெண்ணின் மகன் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-6-21)

# நிதியமைச்சர் மீது சட்ட நடவடிக்கை

*மகிந்த தரப்பு தெரிவிப்பு*

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கூட்டு எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார். மகிந்த தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகச் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திறைசேரி முறிகளை வழங்குவதுடன், தொடர்புபட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட விவகாரத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குத் தொடர்புள்ளதாகக் குற்றம் சுமத்தியமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும். திறைசேரி முறிகள் வழங்கல் மோசடி விவகாரத்தில் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் மீது பழி போடுவதற்கும், அதனை மூடி மறைப்பதற்கும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவும், அரசும் முயற்சித்து வருகின்றனர்என்றார். (த-ஐ-10)

*புதிய அரசமைப்பு உருவாக்கம்*

# கூட்டு அரசின் எம்.பிக்களுடன் திங்களன்று ரணில் பேச்சு

கொழும்பு, மார்ச். 4

வழிநடத்தல் குழுவின் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கு முதல் நாள், கூட்டு அரசின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசவுள்ளார். புதிய அரசமைப்பு உருவாக்கப் பணி தொடர்பிலேயே கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கூட்டு அரசின் இரு முதன்மைக் கட்சிகளிடையேயும் கருத்துப் பிளவு ஏற்பட்டுள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதுடன் பொது வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறி வருகின்ற நிலையில், அரசமைப்பு மறு சீரமைப்பு மாத்திரமே மேற்கொள்ளப்படும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்து வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில், எதிர்வரும் 7 ஆம் திகதி வழிநடத்தல் குழுவின் 50 ஆவது கூட்டம் நடைபெறவுள்ளது. இதற்கு



முன்னதாக புதிய அரசமைப்புத் தொடர்பில் கூட்டரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசவுள்ளார். இதன் மூலம், அரசமைப்புத் தொடர்பான கருத்துப் பிளவுகள் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

# வவுனியாவில் புதிய சீனித் தொழிற்சாலை

*ஜப்பான் முதலீட்டில் அமைக்கத் திட்டம்*

கொழும்பு, மார்ச் 4

ஜப்பான் நாட்டு முதலீட்டில் இந்த வருடம் வவுனியாவில் சீனித் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்புக் கோட்டையில் அமைந்துள்ள பன்னாட்டு வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவர் உபுல் ஜயசூரிய இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குகிழக்கு மாகாணங்களில் பல்வேறு முதலீடுகளுக்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படவுள்ளன. இந்த வருடம் ஜப்பான் நிறுவனமொன்றின் முதலீட்டைக் கொண்டு வவுனியாவில் சீனித் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதுபோல வடக்குகிழக்குப் பகுதிகளில் பலதரப்பட்ட முதலீடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் செயற்பாடுகளை மூன்று நாடுகளின் கூட்டுப் பங்காண்மையின் கீழ் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்படி இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் இலங்கை கூட்டுச் சேர்ந்து பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கு முதலீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் அடுத்த கட்ட நகர்வுக்கு விவசாய அமைச்சு முட்டுக்கட்டையாக உள்ளது என்றார். (த-4)

# தமிழ் -முஸ்லிம் உறவு பலம் பெறவேண்டும்

*கிழக்கு முதல்வர் வலியுறுத்தல்*

செங்கலடி, மார்ச் 4



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இடையே ஒரு இணக்கப்பாடு உள்ள நிலையில் தமிழ்முஸ்லிம் உறவைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் ஒரு கோடி 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஏறாவூரில் அமைக்கப்பட்ட வாவிக்கரைப் பூங்கா நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்முஸ்லிம் உறவைப் பலப்படுத்தவேண்டிய தேவை எமக்கு உள்ளது. எங்களுக்குள் இருக்கும் சகல முரண்பாடுகளையும் மறந்து, எந்த சக்தி பிரிக்க முற்பட்டாலும் நாங்கள் பிரிந்திருக்க முடியாது என்ற செய்தியை அவர்களுக்குக் கூறவேண்டும்.

வருகின்ற காலங்களில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சு பெரும் பங்களிப்புக்களைச் செய்ய முடியும். காணிப் பிரச்சினைகளை முடிப்பதற்கு அமைச்சருடன் பேச்சுக்களை நடத்திவருகிறோம்.

கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளுக்கு வேலையில்லாப் பிரச்சினை காணப்படுகிறது. இது தொடர்பாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாகப் பேசியுள்ளேன். ஒரு குழு அமைக்கப்பட்டு ஒரு நல்ல தீர்வு காணப்படும் என்றார். (த-ய-47)

# என் மீதான சூடு குறித்து பொய்யான தகவல்கள்

*சைட்டம் நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 4

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தான் திட்டமிட்டு அரங்கேற்றியுள்ளதாக வெளியாகிவரும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை.

இவ்வாறு சைட்டம் தனியார் வைத்திய கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரி வைத்தியர் சமீர சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தன்னை இழிவுபடுத்தவும் பயமுறுத்தவும் பொய்யான குற்றச்சாட்டுக்களும் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சில ஊடகங்கள் வெளியிட்டு வரும் செய்திகள் வதந்திகளாகவும் எனக்கெதிரானதாகவும் உள்ளன.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நபர் எந்த வகையிலும் என்னுடன் தொடர்புடையவர் கிடையாது. நான் குற்றமற்றவர். இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸ் அதிகாரிகள் உண்மையான குற்றவாளியை விரைவில் கைதுசெய்வார்கள் என்று நம்புகின்றேன். குற்றவாளி கைது செய்யப்படும் பட்சத்தில் உண்மையை அனைவரும் அறியக்கூடியதாக இருக்கும்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அப்போது நானும் மேலதிக தகவல்களைப் பெறுவதற்குக் குறித்த இடத்துக்குச் சென்றேன். இதன்போது பொலிஸார் என்னிடமும் விசாரணை களை மெற்கொண்டனர். நானும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தேன்.

என்னைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொள்ளவில்லை. குறித்த விடயம் சைட்டம் நிறுவனத்துக்கும் பாதகத்தன்மை ஏற்படுகின்றது. குறித்த சம்பவம் தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் விசாரணைகள் நிறைவடையும் வரை விடுமுறையளிக்குமாறு நான் சைட்டம் நிறுவனத்தின் தலைவரிடம் வேண்டுகோள் விடுக்கத் தீர்மானித்தேன்.

தலைமை நிறைவேற்று அதிகாரி என்ற பதவியிலிருந்து தற்காலிகமாக விலகத் தீர்மானித்துள்ளேன். அதனைச் சில ஊடகங்கள் வேறு விதமாக சித்திரித்துச் செய்திகளை வெளியிடுகின்றன. அதுமாத்திரமின்றி எனக்கு எதிராகச் செயற்படும் நபர்கள் மற்றும் அமைப்புகள் எனது கல்வித் தகுதிகள் தொடர்பில் பொய்யான வதந்திகளை மேற்கொண்டு வருகின்றனர்என்றார். (த-4)

# கொடிகாமம் ரயில் நிலையம் மூலமும் பொதி விநியோகம்

## நேற்று முதல் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
கொடிகாமம் ரயில் நிலையம் இயங்க ஆரம்பித்து இரண்டரை வருட காலத்தின் பின்னர், பொதிகள் விநியோகச் சேவை நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் எடுத்த முயற்சிகளை அடுத்து இந்த வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.
காங்கேசன்துறை - கொழும்புக்கு இடையிலான ரயில் சேவை 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள சகல ரயில் நிலையங்களிலும் பொதிகள் விநியோகச் சேவை நடைபெற்றாலும் கொடிகாமம் ரயில் நிலையத்தில் நடைபெறவில்லை. மக்கள் இதனால் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர்.
கொடிகாமம் ரயில் நிலை யத்தில் பொதிகள் விநியோகம் தொடர்பான சேவைகளை வழங்குவதற்கு ஊழியர்கள் இல்லாத காரணத்தினாலும், உரிய இயந்திர வசதிகள் இல்லாத காரணத்தினாலும் பொதிகள் சேவைகள் நடைபெறாமல் இருந்தது.
இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில், யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டியிருந்தார்.
இதனையடுத்து நேற்றுக் காலை தொடக்கம் பொதிகள் சேவை கொடிகாமம் ரயில் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, ரயில் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (த-5)

## பட்டதாரிகள் பிரச்சினைக்கு இந்த மாத இறுதிக்குள் தீர்வு

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4
பட்டதாரிகளுக்கான பிரச்சினைகளுக்கு இந்த மாத இறுதிக்குள் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார்.
வடக்கில் யாழ்ப்பாணத்தில் தொடங்கி கிழக்கில் திருகோணமலை வரை விரிவடைந்துள்ள பட்டதாரிகளின் போராட்டம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
அந்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இன்று யாழ்ப்பாணத்தில் பட்டதாரிகளால் சுழற்சி முறைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றது .இது கிழக்கிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பட்டதாரிகளினால் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டம் குறித்து அரச தலைவருக்குத் தெரியப் படுத்தியுள்ளேன். இதன் அடிப்படையில் அரச தலைவர் நாடளாவிய ரீதியான பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய உறுப்பினர்களை இந்த மாதம் சந்தித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக் கலந்துரையாடலுக்கான திகதியையும் அவர் கொடுத்துள்ளார் .
இந்த மாதம் நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தின் அமர்வில் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்படும்-என்றார். (த-10)

## கிழக்கு இளைஞருக்கு பன்னாட்டு தங்கவிருது



எருவில், மார்ச் 4
பிரிட்டனின் 'எடின்பரோ கோமகன்' பன்னாட்டுத் தங்கவிருதுக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் இளைஞர் நாடாளுமன்றஉறுப்பினர்ஏ.எல்.எம்.றிசான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
நாளை மறுதினம் திங்கட்கிழமை அலரிமாளிகையில் நடைபெறவுள்ள 'எடின்பரோ கோமகன்' பன்னாட்டு விருது வழங்கும் விழாவில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவினால் இந்த விருது வழங்கப்படவுள்ளது.
இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டபடிப்பு பீடத்தில் மனித உரிமைத்துறையில் உயர்கல்வி கற்றுவருகிறார். (த-ய)

## பேராதனைப் பகிடிவதை; 15 மாணவர்கள் மறியலில்

கொழும்பு, மார்ச் 4
பகிடிவதை புரிந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 15 மாணவர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் புதிய மாணவர்கள் எட்டு பேரைத் துன்புறுத்திப் பகிடிவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாகப் பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து, பகிடிவதை புரிந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 15 மாணவர்களைப் பேராதனைப் பொலிஸார் அண்மையில் கைது செய்திருந்தனர். (த-10)

## கீத் நொயார் மீதான தாக்குதல்; படையினரின் மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 4
ஊடகவியலாளர் கீத் நொயார் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 இராணுவத்தினரின் விளக்கமறியல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
ஊடகவியலாளர் கீத் நொயார் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்பட்டு குறித்த 5 இராணுவ அதிகாரிகளும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கைது செய்யப் பட்டிருந்த னர்.
ஊடகவியலாளர் கீத் நொயார் 2008 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து தாக்குதலுக்குள்ளானார். அது பற்றிய விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில் அண்மையில் அது பற்றிய விசாரணை துரிதப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து குறித்த இராணுவத்தினர் 5 பேரும் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## 1 1/2 கோடி பெறுமதியான போலி கிறீம்கள் பறிமுதல்

கொழும்பு, மார்ச் 4
வெளிநாடுகளிலிருந்து பரல்களில் எடுத்துவரப்பட்டு இங்குள்ள பிரசித்தி பெற்ற நிறுவனங்களின் பெயர்களில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்த 45ஆயிரம் போலி கிறீம் பைக்கெற்றுக்கள் சிக்கியுள்ளன.
கொழும்பு- வெல்லம்பிட்டிப் பிரதேசத்திலுள்ள நிறுவனம் ஒன்றிலிருந்து இவை மீட்கப்பட்டுள்ளன.
நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் இந்த நிலையம் சுற்றிவளைக்கப்பட்டது என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஹசித்த திலகரட்ன தெரிவித்தார்.
ஒவ்வொரு பைக்கெற்றுக்களிலும் தலா 350 ரூபா விலை பொறிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் தற்போது சீல் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## அபிவிருத்திச் சட்ட விவாதம் 8 ஆம் திகதி

கொழும்பு, மார்ச் 4
வடக்கு மாகாண சபை நிராகரித்த நிலைபேறு அபிவிருத்தி சட்டவரைவு மீதான விவாதம் எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
நாடாளுமன்றத்தில் இந்த மாதம் நடைபெறவுள்ள அமர்வுக்கான நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில், எதிர்வரும் 7 ஆம் திகதி ஏற்றுமதி, இறக்குமதிச் சட்டவரைவு தொடர்பில் விவாதம் நடத்தப்பட்டு மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.
8 ஆம் திகதி நிலைபேறு அபிவிருத்தி சட்டவரைவு தொடர்பில் விவாதம் இடம்பெறும். மேற்படி சட்டவரைவுக்கு 7 மாகாண சபைகள் அங்கீகாரம் வழங்கியுள்ளன. வடக்கு மாகாண சபை நிராகரித்துள்ளது. கிழக்கு மாகாண சபை அவகாசம் கோரியுள்ளது.
மறு நாள் 9 ஆம் திகதி, சர்ச்சைக்குரிய மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது. (த-5)

## யாழ்ப்பாணத்தில் பிரச்சினை இல்லையென ஜெனிவாவுக்கு காட்டவே வருகிறார் மைத்திரி

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை என ஐ.நாவுக்குக் காட்டவே அரச தலைவர் மைத்திரிபால இங்கு வருகிறார் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் குற்றம் சாட்டியுள்ளார்.
யாழ்பாடி விடுதியில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு நடக்கும்வேளையில் இந்தப் பயணம் இடம்பெறுகின்றது.
வடக்கில் தற்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், நிலத்தைப் படையினரிடம் பறிகொடுத்துக் காத்திருந்து பொறுமையிழந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.
இதனை ஒரு சாதாரண விடயம் என்பது போன்று காண்பிக்கும் வகையில் மைத்திரிபாலவின் இந்தப் பயணம் அமைகிறது.
எனவே இன்று காலை 10 மணிக்குக் காணாமற்போனோரின் உறவுகள், நிலத்தை இழந்துள்ள மக்கள் மட்டுமன்றி சமூக ஆர்வலர்கள், மத அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் என சகலரும் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டு எமது நிலப்பாட்டைத் பன்னாடுகளுக்கு எடுத்துக் கூற வேண்டும்- என்றார்.
(த-10-137)

## 'சிங்க லே' அமைப்பின் புதிய தலைவர் இரோன்

கொழும்பு, மார்ச் 4
இனவாதச் சிந்தனையுடையவராக வர்ணிக்கப்படும் "சிங்க லே" அமைப்பின் புதிய தலைவராக, மனிதப் படுகொலைகள் புரிந்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்து வந்த எஸ். எப். லொக்கா எனப்படும், பாதாள உலகக் குழுத் தலைவராக அடையாளப்படுத்தப்படும் இரோன் ரணசிங்க செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அவர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுச் செயற்படுகின்றமையானது, இனவாதத்துடன் வன்முறையையும் இணைத்து, நாட்டில் அமைதி இன்மையை ஏற்படுத்த அடிப்படைவாதிகள் முன்னெடுக்கும் ஒரு நடவடிக்கையா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகப் பலராலும் கூறப்படுகிறது.
அனுராதபுர பிரதேசத்தில் அமைந்துள்ள இரவு விடுதி ஒன்றின் உரிமையாளரான கராட்டி வசந்த என அழைக்கப்படும் வசந்த சொய்சாவை, இரவு விடுதியின் உள்ளே நுழைந்து வெட்டிப் படுகொலை செய்தமை, மனிதப் படுகொலைகள், கப்பம் பெறுதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுடன் தொடர்புள்ளவராக லொக்கா என்ற நபர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அந்தக் குற்றச்சாட்டில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-ஜ-4)



## முன்னர் பெற்ற காணிகளையும் வீட்டையும் மீளளிக்கவேண்டும்

### பிலக்குடியிருப்பு மக்களுக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு

முல்லைத்தீவு பிலக்குடியிருப்புப் பகுதி மக்களின் நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு முன்பு வழங்கப்பட்ட காணிகளை 6 மாத கால அவகாசத்துடன் மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலருக்குப் பாதுகாப்பு அமைச்சின் »24

## புதிய அரசமைப்பை வலியுறுத்தி பரப்புரை

### சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் கொழும்பில் 15ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 4
புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டிய தன் அவசியமும், அதற்காகப் பொது வாக்கெடுப்பு நடத்துவதன் நியாயப்பாட்டையும் வலியுறுத்திச் சிவில் அமைப்புக்கள் எதிர்வரும் 15ஆம் திகதி பரப்புரை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளன.
இதன் ஆரம்ப நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவும் கலந்து கொள்ளவுள்ளனர். »24

## மழைக்கு மத்தியிலும் தொடரும் போராட்டம்

### புதுக்குடியிருப்பில் ஒரு தொகுதி காணிகள் இன்று விடுவிக்கப்படும்



முல்லைத்தீவு, மார்ச் 4
கொட்டும் மழையிலும் புதுக்குடியிருப்பு மக்கள் நேற்றும் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அவர்களது காணிகளில் ஒரு தொகுதி இன்று »23

## கிளிநொச்சி ம.வி. காணியில் 3/4 ஏக்கர் மட்டுமே அளவீடு

### எஞ்சிய காணி விடுவிக்கப்படுமா எனப் பாடசாலைச் சமூகம் சந்தேகம்

கிளிநொச்சி மகா வித்தியாலயக் காணி முழுமையாக விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதில் முக்கால் ஏக்கர் காணி மாத்திரமே அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் எஞ்சிய காணி விடுவிக்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகப் பாடசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் காணி விடுவிப்புக் கள் தொடர்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுக்களின்போது கிளிநொச்சி மகா வித்தியாலயக் காணியையும் விடுவிக்கு மாறு கோரிக்கை விடுத்திருந்தார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இதற்கு இணங்கியிருந்தார்.

கிளிநொச்சி மாகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான இராணு வத்தின் பிடியில் உள்ள மைதானம் கடந்த இரண்டு தினங்க ளுக்கு முன்னர் அளவீடு செய்யப்பட்டது.

பாடசாலைக்குச் சொந்தமான 2 ஏக்கரும் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், முக்கால் ஏக்கர் மாத்திரமே நில அளவை செய்யப்பட்டுள்ளது. இதனால் எஞ்சிய காணி விடுவிக்கப்படுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (த-5-101)

## இலவச சட்ட உதவி சேவைகள் யாழ்ப்பாண நீதிமன்றில் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் சட்ட உதவி தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப. 3 மணி வரைக்கும் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் இலவச சட்ட உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சட்டத்தரணிகளினதும் சட்ட உதவி ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகங்களில் பணிபுரியும் சட்டத்தரணிகளினதும் பங்களிப்புடன் இந்த நிகழ்வு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

'வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் அனைவரும் கலந்து கொண்டு சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை பெறமுடியுமென்பதுடன் உரிய பிரச்சினைகள் தொடர்பில் நீதிமன்றங்களில் இலவசமாக வழக்குகளும் தொடரப்பட்டு நடத்தியும் கொடுக்கப்படும்.

சட்ட உதவியைப் பெற விழைவோர் அனைவரும் தாம் வறுமைக் கோட்டுக்குட்பட்டோர் என்பதைத் தத்தமது கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

பராமரிப்பு, மணநீக்கம், குடும்ப வன்முறை போன்ற வழக்குகளைத் தொடர வேண்டியிருப்பின் திருமணப் பதிவுச் சான்றிதழ், 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் நிழல் பிரதிகளைக் கொண்டு வர வேண்டும்.

வேறுவிடயங்கள் தொடர்பில் ஆலோசனை பெறவருவோர் பொருத்தமான ஆவணங்களின் நிழல் பிரதிகளைக் கொண்டுவரவேண்டும்' என்று யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்க தலைவி அரச தலைவர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார். (வ)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம் - கொக்குவில், ஸ்தான.சி.சி.த.க பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலை நிர்வாகம் அறிவித்தது.

விளையாட்டுப் போட்டி இன்று இடம்பெறும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் நேற்றுப் பொழிந்த மழை காரணமாக போட்டி இடை நிறுத்தப்பட்டுள்ளது. மெய்வன்மைப் போட்டி இடம் பெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்று பாடசாலையின் நிர்வாகம் மேலும் தெரிவித்தது. (வ-21)

### போராட்டங்களுக்கு...

இதன்போது காங்கேசன் துறையில் 238 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிப்பதற்கான அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'அரச தலைவருக்குத் தெரிவியுங்கள்' அலுவலகத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 4 மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். பலாலி வான்படைத் தளத்தை காலை 9.30 மணிக்கு வந்தடைவார். ஓய்வுபெற்ற படையினரைக் கௌரவிக்கும் நிகழ்வு அங்கு நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ளும் அரச தலைவர் முற்பகல் 11 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு வருகை தருவார். ஆளுநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள, 'அரச தலைவரிடம் தெரிவியுங்கள்' அலுவலகத்தைத் திறந்து வைப்பார். ஆளுநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடையில் நிகழ்வுகள் நடைபெறும்.

இதன்போது நல்லிணக்கபுரத்தில் குடியேற்றப்பட்ட மக்களுக்கான வீடுகள், பலாலி வடக்கில் மீள்குடியேற்ற அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், வளலாயில் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறும். இதன் பின்னர், காங்கேசன்துறை மாங்கொல்லையில் 238 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான அறிவிப்பை அரச தலைவர் மைத்திரிபால வெளியிடுவார். (த-5)

### கூட்டமைப்பு...

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து 17 பக்கங்களைக் கொண்ட அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ளார். அதில் பல பரிந்துரைகளையும் இலங்கை அரசுக்கு அவர் முன்வைத்துள்ளார்.

பொதுமக்களின் நடவடிக்கைகளில் இராணுவத் தலையீட்டை நிறுத்தல், காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கல் ஆகிய விடயங்களில் திருப்தி இல்லை என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். இவற்றை நாமும் பல தடவைகள் இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தோம்.

சித்திரவதைகள், பலவந்தமாக காணாமல் போகச்செய்தல், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்களை பன்னாட்டு சட்ட எல்லையின் கீழ் விசாரணை செய்ய வெளிநாட்டு நீதி பதிகள் அடங்கிய கலப்புநீதிமன்றத்தை இலங்கை அரசு உடன் அமைக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இதனை நாமும் பல தடவைகள் இலங்கை அரசிடம் வலியுறுத்தி வந்திருந்தோம்.

எனவே, இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில், இந்தப் பரிந்துரைகளை அரசு கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும். இதனூடாக நீண்டகால இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (வ-5)

### இலங்கையின்...

ஐ.நா.வுக்கும், ஐ.நா மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளில், ஐ.நாவுக்காக சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கு, தொடர்ந்து தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை இலங்கைக்கு வழங்க வேண்டும். பன்னாட்டுத் தர நியமங்களுக்கு ஏற்ப, நிலைமாறு கால நீதி தொடர்பான ஆதரவை தொடர்ந்து ஒருங்கிணைக்க வேண்டும்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அமைதி காப்பு, இராணுவ பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் போது, கடுமையான ஆய்வு செயல்முறையைப் பின்பற்ற வேண்டும்.

அதேவேளை, உறுப்பு நாடுகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில், இலங்கை அரசுடன் தொடர்ந்து நெருக்கமான தொடர்புகளை பேணுவதுடன், நாட்டின் முன்னேற்றங்களையும் ஐ.நா. மனித உரிமைகள் சபை கண்காணிக்க வேண்டும்.

சித்திரவதை, காணாமலாக்குதல், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று குற்றம்சாட்டப்படுபவர்கள், எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம், உலகளாவிய அதிகார வரம்புக்குட்பட்ட வகையில் விசாரிக்கப்பட்டு, தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காணும் வகையில், பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்க முறைமைகளை உருவாக்கும் இலங்கை மக்களின் முயற்சிகளுடன், தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டும் என்றுள்ளது. (வ-5)

### வேலையற்ற...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளிடம் வாக்குறுதியளித்ததன்படி வடக்கு மாகாண ஆளுநருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்புக் கோரி யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாகக் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுமுன்தினம் நேரில் சென்று சந்தித்தார். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளின் கோரிக்கைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் கலந்துரையாடப்படும் என்று அவர் வாக்குறுதியளித்தார்.

அந்த வாக்குறுதிக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் றெனிேனால்ட் குரேயை நேற்று அவரது அலுவலகத்துக்குச் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சந்தித்தார். இந்தச் சந்திப்பை அடுத்து வடக்கு மாகாண ஆளுநர் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை நேற்று மாலை நேரில் வந்து சந்தித்தார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் உடன் சென்றிருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஆளுநர் அலுவலகத்தில் வைத்து சந்திப்பதற்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள் சார்பில் 3 பிரதிநிதிகளுக்கு ஏற்பாடு செய்து தருவதாக ஆளுநர் றெஜினோல்ட் குரே உறுதியளித்தார்.

இது தொடர்பில் வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் பேசி முடிவை அறிவிப்பதாக ஆளுநரிடம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்தனர். இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகள் சார்பில் 3 பிரதிநிதிகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை இன்று யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பார்கள் என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. (வ-21)

### யாழ்ப்பாணத்தில்...

சேதங்களும் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரையான காலப்பகுதியில் 49.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. ஒரு நாளில் பெய்த மழைவீழ்ச்சியின் பதிவுகளின் படி இது கூடியளவானது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை திடீரென ஆரம்பித்த மழை சிறிது நேரம் ஓய்ந்திருந்து மதியத்துக்குப் பின்னர் கடும் மழையாக பொழிந்தது. பருவம் மாறி பொழிந்த இந்த மழையால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகள் மேலும் பாதிப்படைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் பெய்த கடும் மழை காரணமாக யாழ் நீதிமன்ற வளாகத்துக்குள் அமைந்திருந்த வாகனத் தரிப்பிடம் முறிந்து விழுந்து கடும் சேதத்துக்கு உள்ளானது. இதனால் தரிப்பிடத்துக்குள் நிறுத்தப்பட்டிருந்த நீதிமன்ற உத்தியோகத்தர்களின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் போன்ற வாகனங்களும் நீதிமன்றில் சான்றுப்பொருள்களாக ஒப்படைக்கப்பட்டிருந்த வாகனங்களும் கடும் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி-103)

## கைவிடப்பட்ட சைக்கிள் சாவகச்சேரி பொலிஸில்

சாவகச்சேரி, மார்ச் 4

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் கடந்த 3 மாதங்களாக உரிமை கோரப்படாத நிலையில் காணப்பட்ட பெண்கள் துவிச்சக்கரவண்டி நேற்று வைத்தியசாலை நிர்வாகத்தால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் வைத்திய சாலையில் சிகிச்சை பெறவந்த ஒருவர் பூட்டு இல்லாத பெண்கள் ரக துவிச்சக்கர வண்டியைக் கைவிட்டு சென்றுள்ளார். எனினும் அவர் நேற்றுமுன்தினம் வரை வந்து பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் பாதுகாப்பு நிலையத்தை நடத்துபவர் கடந்த 3 மாதங்களாக சங்கிலியால் பூட்டி பாதுகாப்பாக வைத்திருந்துள்ளார்.

நீண்ட நாட்களாக எவரும் துவிச்சக்கர வண்டியைப் பெற்றுக்கொள்ள முன்வராததால் அது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அவர் அறிவித்துள்ளார். இதனையடுத்து துவிச்சக்கர வண்டியை மீட்டு வைத்தியசாலை பொலிஸ் அலுவலர் ஊடாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வைத்திய சாலை நிர்வாகம் அனுப்பி வைத்தது. (வ-9)

## சான்றோர்களை நினைவு கூரும் நிகழ்வு நாளை

கிளிநொச்சி, மார்ச் 4

தமிழ் வளர்த்த தனிப் பெரும் சான்றோர்களை நினைவு கூரும் நிகழவு கரைச்சி பொது நூலக மண்டப கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு இடம்பெறும் என்று கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் அறிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கமும் கரைச்சி பிரதேச அவை பொது நூலகமும் இணைந்து இந்த நிகழ்வை நடத்துகின்றன.

நிகழ்வில் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், மொழிஞாயிறு தேவநேச மாப்பாணர், தமிழ் ஆய்வாளர் ஞானப்பிரகாசம் அடிகள் ஆகிய ஆன்றோர்கள் நினைவு கூரப்படவுள்ளனர்.

மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தமிழ் தாத்தா உ.வே.சாமிநாதையர் பற்றி கிளிநொச்சி கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரேமா மதுரநாயகமும் தேவநேய மாப்பாணர் பற்றி கிளிநொச்சி மூவேந்தனும் தமிழ் ஆய்வாளர் ஞானப்பிரகாசம் அடிகள் பற்றி நல்லூர் உயர் நிலைப் பாடசாலை ஆசிரியை திருமதி ச.மங்கையர்திலகம் ஆகியோர் உரையாற்றுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-9)

# வடக்குக்கு இதுவரை வழங்கிய திட்டங்களை ஆராய்கிறது கூட்டு அரசு

### கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகளால் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.4

வடக்கு மாகாணத்தில் கொழும்பு அரசின் மீள்குடியேற்ற அமைச்சின் நிதிஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பிரதேச செயலக மட்டத்தில் ஆய்வு செய்யும் பணி நேற்று ஆரம்பமானது. இதற்காக அதிகாரிகள் குழு கொழும்பிலிருந்து நேற்றைய தினம் வருகை தந்தது.

கூட்டு அரசின் ஆட்சிக் காலத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள், கழிப்பறை வசதிகள், கிணறு அமைத்தல், பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் வாழ்வாதார உதவிகள் போன்ற திட்டங்களையே இவ்வாறு ஒரே நேரத்தில் பார்வையிட்டு ஆய்வு செய்யும் வண்ணம் அதிகாரிகள் குழுவொன்று வடக்குக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டச் செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்கள் மட்டத்தில் தமது பணிகளை முன்னெடுக்கின்றனர். பிரதேச செயலக அலுவலர்கள், திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட இடங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகளை நேரில் அழைத்துச் சென்று காண்பிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பார்வையிடும் அதிகாரிகள் குழு மாவட்டச் செயலாளர்கள் ஊடாக அமைச்சுக்கு தமது அறிக்கைகளை முன்வைப்பாரைகள் என்று கூறப்பட்டது.

இந்த ஆய்வுகள் தொடர்பில் வடக்கின் 5 மாவட்ட மாவட்டச் செயலர்களுக்கும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இன்று மாலை 5 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## அர்ப்பணம் சிலுவைகளைச் சிறகுகளாக்கும்

வாழ்வா? சாவா? எதை நாம் தேர்ந்தெடுக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் வாழ்வையும், நன்மையையும் தேர்ந்து கொள்ள வேண்டுமென்பது கடவுளின் விருப்பம். வாழ்வைத் தெரிந்துகொள்பவன் தன்னை இழக்கத் தயாராக வேண்டும். தனது சுயநலங்களைச் சாகடிக்க வேண்டும். குறிக்கோளை முன்னிறுத்திச் செயற்படும் போது எதிர்கொள்ளும் சவால்களையும் அதனால் ஏற்படும் துன்பங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவின் வார்த்தைகளைப் பின்பற்றுவதில் நிலையாய் இருக்க வேண்டும். இதுபெரும் சிலுவைச் சுமையாகத் தேன்றலாம்.

ஆனால் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் (லூக்கா 9 . 23) இது தான் இயேசு தரும் நிலைவாழ்வுக்கான அழைப்பு. எமது குடும்ப, சமூக உறவுகள் ஒவ்வொன்றும் பல்வேறு விதத்தில் சிலுவைகளாக அமையலாம். அவற்றைச்சுமந்து கடமைகள், பொறுப்புக்களை, நிறைவு செய்யும் போது, இயேசுவின் சிலுவைப் பாதையில் நாமும் பங்காளிகளாகலாம்.




கரைவதற்காக காற்றைத்தேடும் கற்பூரம் போல, உருகுவதற்காகவே ஒளியைத்தேடும் மெழுகுவர்த்திபோல, ஆடை தருவதற்காக தற்கொடையாகும் பட்டுப்பூச்சி போல எம்மை அர்ப்பணித்து வாழ்வோம். அப்போது சிலுவைகள் அன்பின் சிறகுகளாக மாறும் எம் முகவரிகள் இயேசுவின் சீடர்களாக எழுதப்படும்.

எஸ்.யேசுதாஸ்

# மகளிர் தினப் போட்டிகளுக்கு ஆக்கங்களை அனுப்ப முடியும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நல்லூர் பிரதேச செயலகத்தால் பன்னாட்டு மகளிர் தினத்துக்கான திறந்த போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறி அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாது:

முற்காலத்தையும் அறிந்தவள் பலத்தால் வெற்றி கொள்வாள் என்னும் தலைப்பில் கவிதை, சிறுகதை, கட்டுரை என்பன அமைதல் வேண்டும்.

நல்லூர்ப்பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 20 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். நல்லூர்ப் பிரதேச செயலகத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

அனுப்பப்படும் ஆக்கங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் கிளையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் என்றுள்ளது. (வ-10)

# சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிப்பு

வரணி, மார்ச் 4

வரணி கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த லயன் ஜெயசங்கர் மலர், சமூக சேவைக்கான சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். எவ்.எம். நிறுவனத்தால் பெப்ரவரி 5ஆம் திகதி தபால் திணைக்களத் தலைமையக அலுவலகத்தில் வைத்து இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

தபால் சேவைகள் முஸ்லிம் விவகார முன்னாள் அமைச்சர் அப்துல் ஹலீம் சுகாதாரப் பிரதி அமைச்சர் பைசல் ஹாசிம் ஆகியோர் இணைந்து இந்த விருதை அவருக்கு வழங்கினர்.

இவர், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் தலைவரும் தேசிய தேசோதய சபையின் யாழ்.மாவட்டச் செயலாளரும் இலங்கை சமாதான நீதிவான்கள் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளராகவும் இருப்பதுடன் பொதுமக்களுக்கான வினைத்திறனான சேவையை வழங்கியமைக்காக தேசமான்ய தேசபந்து சமூக ஜோதி, தேசோதய தீபம் சைவ சமய பிரியன் சைவசமய நெறியாளன் போன்ற பல விருதுகளைத் தேசியரீதியில் பெற்றுக் கொண்டவர்.

லயன் ஜெயசங்கர் மலர், அகில இலங்கை சமாதான நீதிவானும் அழகு தமிழ் எழுத்தாளரும் மூத்த தொழிற்சங்கவாதியும் ஆவார். (வ-122)

# ஒளிப்பட விருதுக்கு விண்ணப்பம் கோரல்

கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒளிப்படக் கலையை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒளிப்பட விருது வழங்கும் விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளது. அதற்கான கலைஞர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்தார்.

இந்த நிகழ்வுக்கான சுற்றறிக்கையையும் விண்ணப்பப் படிவத்தையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## நெல் கொள்வனவு

வரணி, மார்ச் 4

தரமான நெல் கொள்வனவு செய்யப்படும் என்று தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

நெல் விற்பனை தொடர்பில் விற்பனையாளர்கள் 077 8330043, 077 98990 56 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (வ-122)

**வேலைஆள் தேவை**

திருக்கோயில்கள் பற்றிய ஆவணப்படம்
தயாரிக்க சிறந்த நேர்முக
வர்ணனையாளர் முழு நேரமாக
பணியாற்றத் தேவை.
தொடர்பு:0778014704

**காணி விற்பனைக்கு**

மல்லாகம் - கட்டுவன் றேட்டுக்கு அருகில்
மேற்குப் பக்கமாக, பத்தொன்பது(19)
பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.
கல்லுக் கிளறி தோட்டமும்
செய்யக்கூடியது.
077 742 2201, 077 551 8002

**கடை வாடகைக்குண்டு**

யாழ் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில்,
சேர் பொன். இராமநாதன் வீதியிலுள்ள
கடைத்தொகுதியில் 228 ஆவது இலக்கமுடைய
சகலநவீன வசதிகளும் கொண்ட கடை
வாடகைக்குண்டு.
077 783 3807
(காலை 8.00- மு.ப.10.00 மணி வரை)

**உடனடி வேலைவாய்ப்பு**

- வரவேற்பாளர்
- கணக்கீட்டு அறிவுடைய களஞ்சியக் காப்பாளர்
- JCB சாரதி (அனுபவம் வாய்ந்த)

தகுதியுடையவர்கள் சுயவிவரக்
கோவையுடன் நேரில் வரவும்

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் இன்
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2829/ 077 221 5167

**மணமக்கள் தேவை**

*77 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 25 ½ பாவமுடைய பட்டதாரி ஆசிரியைக்கு பட்டதாரி மணமகன் தேவை.
*82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 15 ½ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகளுக்கு அரச பணிபுரியும் மணமகன் தேவை.
*71 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 42 ¾ பாவமுடைய பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
*76 இல் பிறந்த 6 இல் சூரியனும் செவ்வாயும் 26½ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணி புரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
*79 இல் பிறந்த 6 இல் சூரியனும் செவ்வாயும் 62 பாவமுடைய சொப்வெயர் இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
*76 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 34 பாவமுடைய அரச நிறுவனத்தில் TO ஆக பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
*86 இல் பிறந்த 8 இல் செவ்வாய் M.Sc. QS முடித்து 92 ¾ பாவமுடைய கட்டாரில் பணிபுரியும் மணமகனுக்கு B.Sc,M.Sc பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:- கமலக்கண்ணன் திருமண சேவை
இல 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862

**ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்**
**வருடாந்த பொதுக்கூட்டம் - 2017**

மேற்படி ஆலயத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 19.03.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும். பிரேரணைகள் இருப்பின் 10.03.2017 இற்கு முன்பாக அங்கத்தவர்களால் பிரேரிக்கப்பட்டும், அனுமதிக்கப்பட்டும் எழுத்து மூலம் செயலாளரிடம் கையளிக்க வேண்டும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர், பரிபாலன சபை

(ajacs/1364)(11.18)

# வேவிலந்தை முத்துமாரிக்கு சதசண்டி யாகம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் மகா சதசண்டி யாகம் அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் நான்காவது முறையாக கடந்த புதன் கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த யாகம் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை வரை 11 தினங்கள் இரவு பகலாகத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. மகா சதசண்டியாகத்தை ஒட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு தினமும் 100 முறை சண்டிபராயணம், 10 முறை சண்டி யாகம், மகா யாகம், இலட்சார்ச்சனை என்பனவற்றுடன் காலை, மாலை சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு மாயாவரத்தைச் சேர்ந்த சிவாகம கலாநிதி சிவப் பிரம்ம ஸ்ரீ ஏ.வி. ரவி சுவாமி நாத சிவாச்சாரியார் தலைமையில் இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த 14 சிவாச்சாரியார்கள் இணைந்து இந்த மகா யாகத்தை நடத்தி வருகின்றனர். யாகத்தின் போது மாயாவரம், சிவபுரம் பாடசாலை மாணவர்கள் வேதபாராயணங்களை ஓதி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ.173)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியர்
**திரு.ஜெ.ஜெயகணேஷ்** அவர்களின் தாயார்
**சீதாலட்சுமி ஜெயபாலரட்ணம்**
அவர்கள் 02.03.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆன்மா சந்தியடைய பிரார்த்திப்பதுடன் இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் ஆசிரியரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்,**
**யா/புனித பத்திரிசியார் கல்லூரி.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



கடந்த 02.02.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர் இராசையா சிவராசா**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.03.2017) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தோடு தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**திருவெண்பாதி, வதிரி.** **குடும்பத்தினர்.**


## துயர் பகிர்கின்றோம்



எமது நண்பன்
**ஜெ.ஜெயகணேஷ்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி சீதாலட்சுமி ஜெயபாலரட்ணம்**
அவர்கள் 02.03.2017 அன்று காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

HNDA 2004/2007
**நண்பர்கள் (ATI)**

## மரண அறிவித்தல்



**பர்னாந்து இம்மனுவேல் (கர்த்தர்குலம்)**

38.மவுன்கார்மல் வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பர்னாந்து இம்மனுவேல் (கர்த்தர் குலம்) 27.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பர்னாந்து-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மனவல் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகராசா (இத்தாலி), யோகராணி (கனடா), சூரியன் (இத்தாலி), தங்கராணி, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் செல்வராசா (இத்தாலி), காலஞ்சென்ற செல்வராணி மற்றும் புஸ்பராணி, சூரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆன் கத்தரின், தாசியஸ் றெஜி, ஆன் டயானா (கவிதா), வஸ்ரியாம்பிள்ளை ஜெயராசா, யெறின், செல்லா, செல்லக் குமார் கிங்கன், சீனித்தம்பி செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (04.03.2017) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து யாழ்.புனித மரியன்னை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**38,மவுன்கார்மல் வீதி,** **தகவல்**
**குருநகர், யாழ்ப்பாணம்.** (GA/C3/1567)(11.18) **குடும்பத்தினர்.**

# புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம்.மார்ச் 4
நெல்லியடி மூத்தவிநாயகர் கோவிலடி தமிழ்ரசுக் கட்சிக்கான மூலக்கிளையின் நிர்வாக சபைக் கூட்டம் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெற்றது. தலைவராக கரணவாய் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் கா. இராமஜெயமும், செயலாளராக ந. கந்தசாமியும், பொருளாளராக ந.சுதாகரும் ஐந்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வரி,26)

# நயினை அம்மன் வழிபடுநர் மகாசபைக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வழிபடுநர் மகா சபைக் கூட்டம்ஆலய கல்யாண மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய அறங்காவலர்களுடன் மரபு வழி அறங்காவலர்களும் இணைந்து புதிய அறங்காவலர்களைத் தேர்ந்தெடுத்தனர். புதிய அறங்காவலர்களில் தலைவராக யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதனும், செயலாளராக ஓய்வுநிலை பெரும்பாக உத்தியோகத்தர் நா.யோகநாதனும், பொருளாளராக பிரதேசசபை வருமானப் பரிசோதகர் இ.பேரின்பநாதனும், மரபு வழி அறங்காவலர்கள் 3பேரும், அறங்காவலர்களாக 6 பேரும் தெரிவு செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ,10)

# தேர்த் திருவிழா

கொழும்புத்துறை,மார்ச் 4
கொழும்புத்துறை ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் திருக்கோயில் வருடாந்தத் திருவிழா கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகும் முழுக்கு மற்றும் கொடிமர வழிபாட்டைத் தொடர்ந்து 8 மணிக்கு தேரில் சுவாமி வலம் வருவார் மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ.135)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வெள்ளாந்தெரு நல்லதண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய துர்முகி வருட அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.இந்த உற்சவ காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு மதுரகவி காரை எம்.பி.அருளானந்தனின் தொடர் தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறும். சொற்பொழிவாளரால் ஆலயத்துக்குத் தினமும் வருகை தந்து சொற்பொழிவில் கலந்துகொள்ளும் மாணவர்களிடையே சமய அறிவுப்போட்டி நடத்தி நூல்கள் பரிசில்களாக வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (வ.10)

## மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 08 . 1932



மறைவு
01 . 03 . 2017

**திருமதி மாசிலாமணி வரப்பிரகாசம்**

பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மாசிலாமணி வரப்பிரகாசம் 01.03.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரப்பிரகாசத்தின் அன்புமனைவியும் இராசநாயகம் (கனடா), மேரிவசந்தா, அக்னெஸ்ராணி(பிரான்ஸ்), ஜெபநேசன் (கனடா), றெஜினா (கனடா), டெனிஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஞானரூபி, அன்னராஜசிங்கம், லேனாட்றொய்ஸ், ஜேம்ஸ்பாலச்சந்திரன், நபுர்தா, ஞானமணி, மேரிஇந்திரா, லில்லி மெற்றலின், ஆசீர்வாதம், ஜேசு தாசன், பீற்றர்போல் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.03.2017 திங்கட்கிழமை மு.ப 10.30 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டு கோரியடி றோமன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**2ஆம் குறுக்குத்தெரு,** **தகவல்**
**பருத்தித்துறை.** **குடும்பத்தினர்.**

**077 397 5634/ 077 394 9820**

## மரண அறிவித்தல்



**குமரேசு செந்திவேல்**


| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08.12.1941 | 28.02.2017 |

யாழ். துன்னாலை வடக்குக் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் சுகாதாரத் திணைக்களத்தின் கணக்குப் பரிசோதகர் குமரேசு செந்திவேல் 28.02.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு - சின்னம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், மல்லிகாதேவியின் (இளைப்பாறிய தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவயோகம், உருக்குமணி, கந்தசாமி, மனோன்மணி, வீரவாகு, வெற்றிவேல், வடிவேல், புதுநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவிகா (ஆஸ்திரேலியா), ரூபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (ஆஸ்திரேலியா), கதிர்கமலன் ஆகியோரின் அன்பு மாமனும், சங்கரி, சரனியா (ஆஸ்திரேலியா), சம்பூர்ணி, சர்வோத்தமன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மகிந்த மலர்ச்சாலையில் (இல.591, காலி வீதி, கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் மதியம் 12.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காகக் கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
"Rasika Tower"
No. 32- 6/1, Madangahawatte Lane,
Wellawatte. Tel: 0094 112 366 475



# கேப்பாப்பிலவில் சாலையை மறித்து மக்கள் போராட்டம்

## "எங்கள் காணிகளை விட்டு வெளியேறுங்கள்"

## என்று ஒப்பாரி வைத்தும் அழுதனர்

முல்லைத்தீவு, மார்ச்.4

கேப்பாபிலவு இராணுவ முகாம் முன்பாக காணி விடுவிப்புக்காகப் போராடி வரும் மக்கள் நேற்றுத் திடீரென, இராணுவ முகாம் முன்பாக சாலையை மறித்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்போது தாய் ஒருவர் "எங்கள் காணிகளை விட்டு வெளியேறுங்கள்" என்று ஒப்பாரி வைத்து அழுதார்.

கேப்பாபிலவில் உள்ள தங்கள் பூர்வீக நிலங்களை விடுக்கக் கோரி முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தலைமையகத்துக்கு முன்னால் தொடர்ந்து மூன்றாவது நாளாக இரவு பகலாக தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள், நேற்று இராணுவ முகாமுக்கு முன்னால் ஒன்று கூடி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"கேப்பாபிலவை பூர்வீகமாகக் கொண்ட நாங்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றோம். கடந்த காலங்களில் உணவு தவிர்ப்புப் போராட்டங்கள், கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடத்தியிருந்தோம். மூன்று மாதத்தில் முடிவுகள் தரலாம், ஆறு மாதத்தில் முடிவுகள் தரலாம் எனச் சொல்லப்பட்ட போதும் எங்களுடைகாணிகளில் ஓர் அங்குலம் கூட விடுபடப்படவில்லை.

கேப்பாபிலவு கிராமத்தில் அறுதி உறுதி உடைய குடும்பங்கள் 18, காணி அனுமதி உடைய குடும்பங்கள் 93, மத்திய வகுப்புக்குள் 24 மீனவக்குடும்பங்கள் அடங்கலாக சுமார் 450 ஏக்கர் காணிகள் இதுவரைக்கும் விடவே இல்லை. "இது இராணுவ முகாம் இதற்குள் வரவேண்டாம் "என போட்டிருக்கின்றார்கள். ஆனால் "இது எங்கள் பூர்வீக பூமி' என்று கேப்பாபிலவில் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்த மக்கள் இராணுவ முகாமுக்கு முன்னால் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்த சமயம், சம்பவ இடத்துக்கு வருகை தந்த முள்ளியவளைப் பொலிஸார் 'உங்கள் எதிர்ப்பை காட்டுங்கள் அதற்கு சாலையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவேண்டாம். காணி விடுவது தொடர்பாக இவர்கள் முடிவெடுக்க முடியாது. அதற்கு உயர் அதிகாரிகளே பொறுப்பு. எனவே இடையூறுகள் ஏற்படாத வண்ணம் உங்கள் போராட்டத்தை முன்னெடுங்கள்' எனத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து கேப்பாபிலவு காணி உரிமையாளர்கள் தாம் அமைத்த தகரக் கொட்டிலில் இருந்தவாறு தமது அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

"இராணுவ முகாமைப் படம்பி டிக்க ஊடகவியாளர்களுக்கு அனுமதியில்லை" என்று இராணுவ முகாமுக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை படம் பிடித்த ஊடகவியலாளர்களை அழைத்த முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, "மக்களின் போராட்டத்தை எடுங்கள், இராணுவ முகாமைப் படம் பிடிக்க வேண்டாம்" என்று தெரிவித்தார்.

தங்கள் காணிகள் விரைவில் விடுபட வேண்டும். நாங்கள் எங்கள் காணிகளுக்குள் செல்ல வேண்டும். அதற்கு நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர். (ஐ-7)

# பன்னாட்டு மனித உரிமைகள் கலந்துரையாடல் களம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 4

சமகால பன்னாட்டு விவாதங்கள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் களம் இல. 62, கே.கே.எஸ். சாலை கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இறுதிக் குறிக்கோள் நிலைச் சமுதாயம் வரலாற்றில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் இந்தக் களம் நடைபெறவுள்ளது.

இதில் தொடக்கவுரையை ச. தனுஜனும், அறிமுக உரையை அகிலன் கதிர்காமரும் ஆற்றவுள்ளனர். சாமுவேல் மொய்னால் எழுதப்பட்டு ஹார்வார்ட் பல்கலைக்கழகப் பதிப்பகத்தால் 2010 இல் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பற்றி ஆராய்கின்ற நூலின் சாரம்சமும், மனித உரிமைகளின் வரலாறு தொடர்பாகவும், தற்கால பன்னாட்டு மனித உரிமைகள் இயக்கத்தின் பண்புகள் தொடர்பாகவும், இன்றைய இலங்கையில் மனித உரிமைகள் எதனைப் பற்றியதாக இருக்கிறது என்பது பற்றியும் கலந்துரையாடல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## மன்னார் நகர சபை பொது அறிவித்தல் - 2017

மன்னார் நகர சபைசபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்கள்/தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் இந் நடைமுறை களை பின்பற்ற தவறுவோர்மீது நகர சபை கட்டளைச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் அத்தியாயம் 255இற்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**1) ஆதன வரி செலுத்துதல்-2017**

எமது சபையில் இதுவரைகாலமும் அறவிடப்பட்ட ஆதன வரியானது 1989ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டு அதில் 16% தினை ஆதனவரியாக அறவிடப்பட்டு வந்தது தற்போது 2016ஆம் ஆண்டு ஆதனவரியானது மீள் மதிப்பீடு செய்யப்பட்டு 2017ஆம் ஆண்டு முதல் 6% மாக ஆதனவரியினை அறவிட தீர்மானிக்கப்பட்டுள் ளது. இதனடிப்படையில் 2017.03.31 ஆம் திகதிக்கு முன் ஆதன வரியை செலுத்து மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். செலுத்த தவறின் வசிப்பிடங்களுக்கு 15% தண்டமும் வரியும், வர்த்தக நிலையங்களுக்கு 20%தண்டமும் வரியும் அறவிடப் படும்.

**2) வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2017**

சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் 2017 ஆம் ஆண்டுக்கான வியாபார வரியைச் செலுத்தி அனுமதிப்பத்திரத்தை 2017.03.31ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**3) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2017**

1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதி திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்.

**4) வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**

i) மன்னார் நகர சபை எல்லைக்குள் புதிய கட்டடங்கள் அமைத்தல், எல்லைச் சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், கிணறுகள், குழாய்க்கிணறுகள் அமைத்தல், கட்டிடங்கள் விரிவாக்கல், திருத்துதல், புதுப்பித்தல் மலசலகூடம் அமைத்தல் என்பன நகர சபையின் அனுமதி பெற்று செயற்படுத்தப்படல் வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக் கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.

ii) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப் படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

iii) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத் தந்து உரிய கட்டட அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5) துவிச்சக்கரவண்டி உரிமம் பெற்றுக்கொள்ளல் -2017**

2017 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமத்தினை 2017.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளவேண்டும்.

**6) விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலா·கவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம் பரங்களிற்கு நகர சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளு தல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர் கள் / நிறுவனங்கள/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்.

**7) முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் நகர சபையில் வருடாந்த கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப் படலும் வேண்டும்.

**8) மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**

மன்னார் நகர சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**9) படவரைஞரைப்பதிவு செய்தல் / புதுப்பித்தல்-2017**

2017 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்க னவே எமது சபையில் படவரைஞராக பதிவு செய்தவர்களும் 2017.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு-களை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக் கொள்ள முடியும்

**10) பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள் ளது. பொது மக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருள்களை சேகரித்து, கழிவகற்றும் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையில் உரிய கட்டணத்தை செலுத்தினால் கழிவுகள் அகற்றப்படும் என்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**11) பொது சுகாதாரம் பேணல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் பற்றை-களைத் துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், காணி கள் சபையால் கையேற்கப் படும்.

**12) பொது மயானம்**

சபைக்குட்பட்ட பொது மயானத்தில் உடலங்கள் அடக்கம் செய்வதற்கும், எரிப்பதற்கும் கட்டணமாக ரூபா.200.00 உம் விசேடமாக கட்டடங்களை அமைப்பதாயின் ரூபா. 3000.00 உம் செலுத்துதல் வேண்டும்.

**13) களியாட்ட வரி**

நகர சபைக்குட்பட்ட சினிமா திரையரங்குகளுக்கான களியாட்ட வரியாக நுழைவு சீட்டின் 6% உம். விசேடமாக நடத்தப்படும் நிகழ்வுகள் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்வுகள், கண்காட்சிகள் ஆகியவற்றிற்கு கட்டணங்கள் அறவிடப்படின் அதற்காக வழங்கப்படும் நுழைவு சீட்டின் மொத்த பெறுமதியில் 6% செலுத்துதல் வேண்டும்.

**நகர சபையால் வழங்கப்படும் சேவைகள்**

**1) கனரக வாகன சேவைகள்**

JCB, கலிபௌசர், றோலர், தண்ணீபௌசர், போன்ற கனரக வாகன சேவை களை பெறுவதற்கு காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவை-களை பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**மன்னார் நகரசபை**
**மன்னார்** **03.03.2017**

## மானிப்பாயில் நாளை குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குருதிக் கொடை முகாம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

## இலக்கியக் கருத்தாடல் வேலணையில் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 4
இலக்கியக் கலந்துரையாடலும் குறும் திரைப்பட விமர்சனமும் வேலணை ஐயனார் சனசமூக முன்பள்ளி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். வேலணையூர் தாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய இலக்கியச் செயற்பாடுகள் எனும் கருப்பொருளில் கலந்துரையாடலும் இடம்பெறும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-10)

# டெங்கு நோய்த் தொற்று வடமராட்சியில் தீவிரம்

## பெப்ரவரியில் மட்டும் 77 பேர் பாதிப்பு

கரவெட்டி, மார்ச் 4
வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 77 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர். டெங்கு நோய்த் தொற்று அதிகரித்து வருவதையடுத்து பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.
"வடமராட்சியில் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளான 77 பேரில் 52 பேர் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவையும் 25 பேர் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவையும் சேர்ந்தவர்கள்.
டெங்கு நோய்த் தொற்று அதிகரித்து வருவதனால் 2 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.
கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடந்த 28ஆம் திகதி முதல் கிராம அலுவலர்கள், பொலிஸ் அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினரால் கிராமங்கள் தோறும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின் றன .
இது வரை கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு, நெல்லியடி கிழக்கு போன்ற கிராமங்களில் உள்ள அனைத்துக் குடியிருப்பு களையும் டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவினர் நேரில் சென்று பார்வையிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்" என்று சுகாதாரத் துறையினரால் தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
வடக்கு மாகாண முன்னாள் பிரதித் தபால்மா அதிபர் என். இரத்தினசிங்கத்தின் பிரிவுபசார விழா நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்டபத்தில்நாளை ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று வடக்கு மாகாண உப தபாலதிபர்கள் தெரிவித்தனர்.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாண அகில இலங்கை தமிழ்பேசும் உப தபாலதிபர்கள் சங்கத் தலைவர் ச.க.சதீபன் தலைமை தாங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## "குணமாலை" நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 4
சாவகச்சேரி சித்தி விநாயகர் கலைமன்றத்தினர் அமரத்துவமடைந்த தென்மராட்சி பிரதேசத்தின் நாடக நடிகர் கணபதிப்பிள்ளை குணராசாவின் நினைவான ' குணமாலை ' என்னும் நிகழ்வு பெரியமாவடி சித்திவிநாயகர் கலை அரங்கத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
மன்றத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ' சமயச் செயற்பாடுகளும் குணமும் ' என்னும் தலைப்பில் சாவகச்சேரி சப்பச்சிமாவடி பிள்ளையார் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் யோ.ஜெயக்குமாரும் ' சமூக அக்கறையும் குணமும் ' என்னும் தலைப்பில் தென்மராட்சி இலக்கிய அணித் தலைவர் கவிஞர் த.நாகேஸ்வரனும் ' மன்ற வளர்ச்சியும் குணமும் ' என்னும் தலைப்பில் சித்திவிநாயகர் கலை மன்ற உறுப்பினர் ச.மார்க்கண்டுவும் நிகழ்த்துவர் .
நிகழ்வில் அமரர் க.குணராசா நடித்த நாடகங்களின் காட்சிகள் காண்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# கெற்பேலிக் கிராமசாலைகளுக்கு எப்போதுதான் விடிவு கிடைக்கும்?

## நீண்டகாலமாக எதிர்பார்த்திருக்கும் மக்கள்

தென்மராட்சி, மார்ச் 4
தென்மராட்சி கிழக்கு கெற்பேலி கிராமத்தின் சாலைகள் நீண்ட காலமாக சீரமைக்கப்படவில்லை. மணல் சாலைகளைப் பயன்படுத்தும் அவல நிலை அங்குள்ள 547 குடும்பங்களுக்கும் ஏற்பட்டுள்ளன. கிராம மக்கள் விவசாயத் துறையிலும் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
"விவசாயப் பொருள்கள் மற்றும் கடலுணவுகள் கொள்வனவு செய்ய தினமும் பெருமளவானோர் வாகனங்களில் வருகின்றனர்.
கெற்பேலி மேற்கில் பாடசாலை சாலை, சங்கக்கடை சாலை, மடத்தடி சாலை, தென்பி சாலை, நாகலிங்கம் சாலை, நாவலடி சாலை, கெற்பேலி மத்தியில் மான்தூக்கி விவசாய சாலை, செல்லப்பா சாலை, வீரபத்திரர் சாலை, கெற்பேலி கிழக்கில் புதுவாழ்வுத் திட்ட சாலை போன்றவை மக்களின் பயன்பாட்டில் உள்ளன. அவை அனைத்தும் நீண்ட காலமாக மணல் சாலைகளாகவே காணப்படுகின்றன.
இந்தச் சாலைகளைத் தார் வீதிகளாக மாற்றி சீரமைக்குமாறு அனைத்துத் தரப்பினரிடமும் ஒவ்வொரு வருடமும் மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் இது வரை ஒரு சாலைகூட தார் போட்டு சீரமைக்கப்படவில்லை என்று" கெற்பேலி கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மா.கணேசமூர்த்தி விசனத்துடன் தெரிவித்தார்.
தேர்தல் காலங்களில் பரப்புரைக்கு வருவோர் வாக்குறுதிகளை வழங்கிவிட்டுச் செல்வர்.பின்னர் கிராமப் பக்கமே வருவதில்லை என்றும் அவர் கவலை வெளியிட்டார்.
இந்த சாலைகளை கச்சாய், கிளாலி செல்லும் மக்கள் பயன்படுத்துகின்றனர். கடற்கரை வரையான சாலை சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் உள்ளது. "கெற்பேலி, 3 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய கிராமமாகும். இந்தப் பகுதியில் உள்ள சாலைகள் அனைத்தும் மணல் சாலைகளென சபை பதிவேடுகளில் உள்ளன. ஒவ்வொரு சாலையும் நீளம் கூடியதாக காணப்படுவதால், அவற்றினைச் சீரமைக்க பெருமளவு நிதி தேவைப்படுகிறது.
இந்த சாலைகளைச் சீரமைக்கக்கூடிய நிதிவளம் சபையிடம் இல்லை. அரச நிதி கிடைக்கும் பட்சத்திலேயே தார் சாலைகளாக அவற்றை மாற்ற முடியும். சாவகச்சேரி பிரதேச சபையானது பெருமளவு இடப்பரப்பைக் கொண்ட சபையாகும். இங்குள்ள ஆறு உப அலுவலகப் பிரிவுகளிலும் பெருமளவு சாலைகள் மணல் சாலைகளாகவே உள்ளன. அரசால் வழங்கப்படும் நிதி பிரதேசத்தின் ஒன்று அல்லது இரண்டு சாலைகளுக்கு மட்டும் தார் இடுவதற்கு முடியும்.
கெற்பேலிக் கிராம சாலைகள் நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாதுள்ளன என்று முன்னைய பிரதேச சபை ஆட்சியின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் ஒருவர் கோரிக்கை முன்வைத்தார்.
அதனையடுத்து கடந்த 2015ஆம் ஆண்டு கிராமத்தில் உள்ள 5 சாலைகளுக்கு சபை நிதியில் தலா நான்கு லட்சம் ரூபா செலவில் கிரவல் இடப்பட்டன. அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை முழுமையாக மேற்கொள்வதாயின் 10 சாலைகளுக்கும் தார் இடப்படவேண்டும். அதற்குப் பல மில்லியன் ரூபா நிதி தேவைப்படும். அரசால் வழங்கப்படும் நிதியை முன்னுரிமை அடிப்படையில் அனைத்து உப அலுவலகப் பகுதிகளில் சீரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு" என்று சாவகச்சேரி பிரதேச சபையின் அலுவலர் தெரிவித்தார். (வ 9)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட மாணவர்கள் உதயன் பத்திரிகை அலுவலகத்தை நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர். (வ10)

## அவதார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றம் நடத்தும் அருள் திருப்பங்காரு அடிகளாரின் 77ஆவது அவதாரப் பெருமங்கல விழா 156, ஜீ.பி.எஸ்.சாலையில் அமைந்துள்ள கல்வியங்காடு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

## "ஞானரதம் மலர்" அறிமுக விழா நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 4
மருத்துவர் தி.ஞானசேகரனின் பவள விழாவும் "ஞானரதம்" மலர் அறிமுகமும் நாவலர் கலாசார மண்டத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப.3 .30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
விழாத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வரவேற்புரையை கலாநிதி எஸ்.பத்மராஜா, வாழ்த்துரைகளை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோரும், அறிமுக வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும் நயப்புரைகளை கவிஞர் சோ.பத்மநாதனும், கவிஞர் த.ஜெயசீலனும், கவிஞர் வேல். நந்தகுமாரும் நிகழ்த்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## திண்மக் கழிவுகளை சேகரிக்கும் நிலையம் கோப்பாயில் வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 4
கோப்பாய் இராச பாதையில் கிருஷ்ணன் கோயில் சந்திக்கு அருகில் திண்மக் கழிவுகளை கொட்டுவதற்குரிய இடவசதி ஒன்று விரைவில் ஒதுக்கப்படும் என்று வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.
"இந்தப் பகுதியில் பராமரிப்பு இன்றிக் இருந்த காணி ஒன்றில் திண்மக் கழிவுகளை சிலர் கொட்டி வந்தனர். வாகனங்கள் மூலம் இரவு வேளைகளில் கழிவுகள் எடுத்துவரப்பட்டு இந்தக் காணியில் கொட்டப்பட்டதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. வலி. கிழக்கு பிரதேசசபை இந்தக் காணியில் கழிவுகளைக் கொட்ட வேண்டாம் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்தது. கொட்டப்படும் கழிவுகளை, சபை கழிவகற்றும் வாகனம் மூலம் அகற்றியும் வந்தது.
பராமரிப்பு இன்றிக் காணப்பட்ட இந்தக் காணியை உரியவர்கள் பொறுப்பேற்காத நிலையில் சபை தற்போது காணியை பொறுப்பேற்றுள்ளது.
இந்தக் காணியை துப்புரவு செய்யும் பணி முன்னெடுக்கப்படு கிறது.
தற்போது இந்தக் காணியில் திண்மக் கழிவுகளை சேகரிக்கும் நிலையம் அமைக்கவும் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
மக்கள் கழிவுகளைத் தரம் பிரித்தே இந்த நிலையத்தில் ஒப்படைக்க முடியும்" என்று வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (வ-17)

# பெண்களின் உரிமைகள் தொடர்பில் இலங்கைக்கு அக்கறையில்லை

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

ஜெனிவா, மார்ச் 4

பெண்களின் உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு உரிய கவனம் செலுத்துவதில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 34ஆவது அமர்வுகளுக்குச் சமாந்தரமாக பக்க அமர்வுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான அமர்வுகளில் இலங்கைப் பெண்களின் உரிமைகள் குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு அரச தரப்பு உரிய பதில்களை வழங்கத் தவறியுள்ளது.


அரசின் பிரதிநிதிகள் இந்த அமர்வுகளின் போது ஆயத்தமாக வரவில்லை அல்லது கேள்விகளை உதாசீனம் செய்திருந்தனர் என்று மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அட்ம்ஸ் தெரிவித்துள்ளார்.

திருமணச் சட்டங்கள், காணி, வாழ்வாதாரப் பிரச்சினைகள், பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களை வலுப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடங்கள் தொடர்பில் இலங்கை உரிய பதிலளிக்கத் தவறியுள்ளது. உண்மையைக் கண்டறிந்து கொள்வதற்கான தற்போதைய முனைப்புக்களில், பெண்களின் பங்களிப்பு குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு இலங்கை அரசின் பிரதிநிதிகள் பதில் எதனையும் தெரிவிக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ-5)

# அமெ. இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுடன் மங்கள சந்திப்பு

கொழும்பு, மார்ச் 4

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயர் அதிகாரிகளுடன், இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, ஜெனிவாவில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.



இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் ஆற்றலைக் கட்டியெழுப்பும் விவகாரங்கள் குறித்து அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக மங்கள சமரவீர தகவல் வெளியிட்டார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தின் சிறப்பு இணைப்பாளர் ரொட் எவ் புஜ்வால்ட் மற்றும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அனைத்துலக அமைப்புக்கள் விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலர் எரின் பார்க்லே ஆகியோருடனேயே இந்தப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பான அடுத்த கட்டநகர்வுகள் மற்றும், அமெரிக்காவின் ஈடுபாடு தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ஐ-10)

# கூட்டு எதிர்க் கட்சி சு.கவுடன் இணையும்

## டிலான் பெரேரா நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 4



சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் முன்னாள் சபாநாயகர், சமல் ராஜபக்ச கலந்துகொண்டுள்ளமையானது கூட்டு எதிர்க் கட்சி எம்முடன் இணைய முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச தலைவர் தனது பிரதான பங்காளிக் கட்சியுடன் பச்சை அட்டையைக் காட்டிச் செயற்பட்டு வருகின்றார். அவர் திடீரென சிவப்பு அட்டையைக் காட்டி அரசிலிருந்து நீங்கிக் கொள்ளவும் இடமுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

# 6 மாணவர்களை கடத்திக் கொன்ற வழக்கில் 2 கடற்படையினர் கைது

கொழும்பு, மார்ச் 4

கொழும்பில் பன்னாட்டுப் பாடசாலை மாணவர்கள் 6 பேரைக் கடத்திக் கப்பம் கோரி, கொலை செய்த குற்றச்சாட்டில், இலங்கைக் கடற்படை அதிகாரிகள் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது.

கொமடோர் சுமித் ரணசிங்க, லீடிங் சீமன் லக்ஷ்மன் உதயகுமார ஆகிய கடற்படை அதிகாரிகளே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வெவ்வேறு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். 2008 ஆம் ஆண்டு இந்தக் கொலை இடம்பெற்றது. கல்வி கற்பதற்காக பிரிட்டன் செல்லும் தமது நண்பனின் பிரியாவிடை விருந்தில் பங்கேற்று விட்டுத் திரும்பிய போதே, குறித்த மாணவர்கள் கடத்தப்பட்டனர். கொழும்பிலும், திருகோணமலையிலும், வசதியான குடும்பங்களைச் சேர்ந்த 28 மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இந்தக் குற்றங்களுக்கு இலங்கைக் கடற்படைப் புலனாய்வுப் பிரிவின் குறிப்பிட்ட அதிகாரிகளே பொறுப்பு என்று கண்டறிந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், குற்றப் புலனாய்வுப் பிரிவு, தற்போது 6 மாணவர்கள் கடத்தப்பட்ட வழக்குத் தொடர்பாகவே விசாரித்து வருகின்றது என்றும் தெரியவருகிறது. (ஐ -4)

# குற்றவாளிகளின் பாதுகாப்பு தொடர்பாக அடுத்த வாரம் சிறப்புக் கலந்துரையாடல்

கொழும்பு, மார்ச் 4

குற்றவாளிகளை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் போது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பிலான சிறப்புக் கலந்துரையாடலொன்று எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

கொலை அச்சுறுத்தல் உள்ளவர்களையும், பெரும் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட கைதிகளையும் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் போது, அவர்களுக்கு பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ - 10)


# மரண அறிவித்தல்



## திருமதி பகவதி முத்துலிங்கம்

**தோற்றம்**
**06.10.1933**

**மறைவு**
**01.03.2017**

4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும்கொண்டதிருமதிபகவதிமுத்துலிங்கம்01.03.2017புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் -அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- காசுபேத்தி தம்பதிகளின்அன்புமருமகளும், காலஞ்சென்றவர்களானநடேசு, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் பாசமிகு மனைவியும்,காலஞ்சென்றவர்களானநாகேஸ்வரி,இராஜேஸ்வரி,புவனேஸ்வரி மற்றும் விமலேந்திரன் (இந்தியா), பாலேந்திரன் (ஜேர்மனி), குலேந்திரன் (ஜேர்மனி), கணேஸ்வரி (இந்தியா), கேதீஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற திருச்செல்வம், காலஞ்சென்ற இராஜரட்ணம் கணேசலிங்கம் (யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி (இந்தியா), பாக்கியலட்சுமி (ஜேர்மனி), கலா (ஜேர்மனி), தமிழ்ச்செல்வன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், புவனேந்திர குமாரி (சுவிஸ்), செல்வகுமாரி (கொழும்பு), சந்துரு (லண்டன்), கௌதம் (இந்தியா), சௌபா (கனடா), ராஷ்மி (இந்தியா), ஜென்சி , ஜெனுசன், ஜெனீபன், ஜெனார்த்தன் (கொழும்பு), சுவேதன், பானுஜன் (ஜேர்மனி), சியான், கௌசி, ஸ்நேகா (ஜேர்மனி), சுஜீபன், கௌசிகன், கௌசல் (இந்தியா), சைனுகா (கனடா), சியானுகா (கனடா), சுவஸ்திகா (கொழும்பு) ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், திஷான், திவ்யன், திவிசன் (சுவிஸ்), கிஷாந்த், டனுஷாந்த், ரஷ்மிகா (கொழும்பு), ஆயுஷி (கனடா) ஆகியோரின் ஆருயிர்ப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை சென்னையிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சி.தமிழ்ச்செல்வன் (கொழும்பு 15), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**077 653 1099, 0091 988 495 8156**

இந்தோனேசியாவில் அகதித் தஞ்சம் கோரி

# ஈழத்தமிழர்களின் போராட்டம் ஐந்தாவது நாளையும் கடந்தது

## மூவர் மருத்துவமனையில் சேர்ப்பு



கொழும்பு, மார்ச்.4

இந்தோனேசியாவில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நிலையில், உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஈழத்தமிழர்கள் மூவரின் உடல் நிலை மோசமடைந்து, அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனினும் ஈழத்தமிழர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் பின்னர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இந்தோனேசியாவில் ஈழ தமிழர்கள் சிலர் அகதிகளாகத் தஞ்சம் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வன்னி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 350 ஈழத்தமிழர்கள் குடும்பங்களாகவும், தனி நபர்களாகவும் இந்தோனேசியாவின் மெடான் பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்களின் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இலங்கைக்குத் திருப்பிய னுப்பப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டால் கொலைசெய்யப்படலாம் அல்லது காணமல் ஆக்கப்படலாம் என்ற அச்சம் நிலவுகின்றது.

அதனால் தம்மைத் திருப்பி அனுப்பவேண்டாம் எனவும், அகதி அந்தஸ்து வழங்கி வேறு நாடுகளில் தம்மை மீள்குடியமர்த்து மாறும், உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஈழ அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ10)

# பழிவாங்கவே சிறைச்சாலை பஸ் மீது தாக்குதல் நடத்தினர்

## பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

பழிவாங்கும் நோக்கிலேயே இரு பாதாள குழுத் தலைவர்களான 'அங்கொட லொக்கா' மற்றும் 'கம்புறுபிட்டி மதுஷ்' ஆகியோரால் களுத்துறை சிறைச்சாலை பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது 'எங்கிருந்தாலும் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் கொல்லப்படுவாய். கவனமாக இரு' என்று நுகேகொட லொக்காவுக்கு கொலை செய்யப்பட்ட 'சமயங்க' எனப்படும் அருண தமித் உதயங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த எச்சரிக்கையின் பின்னரே பதிலடி கொடுக்கும் வகையில் களுத்துறை சிறைச்சாலை பேருந்து மீதான தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் களுத்துறை வடக்குச் சிறைச்சாலையில் இருந்து கடுவலை நீதிவான் நீதிமன்றுக்கு பாதாள உலகக் கோஷ்டி சந்தேக நபர்களை




ஏற்றிச் சென்ற சிறைச்சாலை பேருந்து மீது களுத்துறை, மல்வத்த எத்தனமடல பகுதியில் வைத்து சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பேருந்தில் இருந்த பிரபல பாதாள உலகக் கோஷ்டியின் தலைவரான சமயங்க எனப்படும் அருண தமித் உதயங்க பத்திரண உள்ளிட்ட 5 கைதிகளும் இரண்டு சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 10 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களைக் கைது செய்ய ஐந்து விசேட பொலிஸ் குழுக்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளன.

எனினும் குறித்த நபர்கள் தொடர்ந்து இடமாறிக் கொண்டு இருக்கின்றனர். இதனாலேயே அவர்களைக் கைது செய்ய முடியாமல் உள்ளது. இதே வேளை குறித்த சந்தேக நபர்கள் நாட்டை விட்டு வெளியேற முயற்சி செய்து வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அதனால் கட்டுநாயக்க, மத்தல விமான நிலையங்கள் மற்றும் கடலோரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. என்றனர். (ஐ10)

# முன்னைய அரசு செய்த பாவத்தால் தற்போதைய அரசுக்கு கடும் கடன்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

இலங்கையில் முன்னைய அரசு செய்த பாவத்தால், தற்போதைய அரசு அதிக பட்சக் கடன் மட்டத்தை அண்மித்துள்ளதாக பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில், 135 ஆகக் காணப்பட்ட இலங்கை ரூபாவின் பெறுமதி 150 ஆக மாறியுள்ள நிலையில், அதனை அந்த மட்டத்தில் பேண வேண்டிய தேவை உள்ளது. மொத்த தேசிய உற்பத்தியின் ஏற்றுமதி குறைவடைந்துள்ளது. அதனால் மீண்டும் சமநிலையை ஏற்படுத்த வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

கடன் பெறுவதில் உள்ள எல்லை எமக்கு புலப்படுகின்றது. முன்னைய அரசு செய்த பாவச் செயல்களாலேயே இந்த நிலை தோன்றியுள்ளது. என்றார். (ஐ-10)

# ஓட்டோவின் சில்லுக்குள் சிக்குண்டு 4 வயதுச் சிறுவன் சாவு

கொழும்பு, மார்ச்.4

கலவான ரத்தெல்ல பகுதியில் ஓட்டோவிருந்து தவறி விழுந்த நான்கு வயதுச் சிறுவன் அந்த ஓட்டோவின் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பாலர் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் குறித்த ஓட்டோவில் இருந்த சிறு வன் தவறி வீதியில் விழுந்தான். அதன் போது சிறுவன் ஓட்டோவின் சில்லுக்குள் சிக்குண்டான்.

குறித்த சிறுவன் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தான் என்றும், ஓட்டோவின் சாரதியைக் கைது செய்துள்ள தாகவும் பொலிஸார் தெரி வித்தனர். (ஐ-10)

# கைவினைப்பொருள் படைப்பாளர்களுக்கு சில்ப அபிமானி விருதுகள் வழங்கி வைப்பு

கைவினைப்பொருள் படைப்பாளர்களுக்கு சில்ப அபிமானி விருதுகள் வழங்கி வைப்பு

கொழும்பு, மார்ச்.4

'சில்ப அபிமானி 2016' கைவினைப்பொருள் விருது வழங்கும் விழா அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கண்டி கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நாட்டின் கைவினைப் பொருள் கைத்தொழிலின் வளர்ச்சி, வலுப்படுத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தேசிய கைவினைப்பொருள் சபையுடன் இணைந்து, இந்த நிகழ்வை ஒழுங்கு செய்தது.

இது தொடர்பில் அரச தலைவரின் ஊடகப்பிரிவால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தேசிய மட்டத்தில் சிறந்த படைப்புக்களை முன்வைக்கும் படைப்பாளர்களை கௌரவப்படுத்துவதற்காக கைவினைப் பொருள் கைத்தொழில் அரச தலைவர் விருது வழங்கும் விழா ஒழுங்கு செய்யப்படுவதுடன், கைவினைப்பொருள் தொழிற்துறையின் பெருமை, அபிமானம் மற்றும் தேசிய அடையாளம் என்பவற்றை மேம்படுத்தல் அதன் குறிக்கோள்களாகும்.

21 பிரதான கைவினைத் துறைகள் மற்றும் 57 உப துறைகளின் கீழ் சில்ப அபிமானி கைவினைப் பொருள் கண்காட்சி மாகாண மட்டத்தில் நடத்தப்படுவதுடன், அதில் வெற்றியீட்டும் படைப்புக்கள் தேசிய மட்டப் போட்டிக்கு முன்வைக்கப்படும்.

அதற்கேற்ப வருடாந்த கைவினைப்பொருள் போட்டி மற்றும் கண்காட்சி 2015 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. 2016 ஆம் ஆண்டு முதல் அந்தப் போட்டிகள் அரச தலைவர் கைவினைப் பொருள், கைத்தொழில் போட்டி மற்றும் கண்காட்சி எனப் பெயரிடப்பட்டு நடத்தப்படுகின்றன. இதில் வெற்றி பெறுபவர்களுக்கு விருது, கேடயம், சான்றிதழ் மற்றும் பணப் பரிசு என்பன அரச தலைவரால் வழங்கப்படுகின்றன.

அதற்கமைவாக இந்த வருடமும் பாரம்பரியக் கைவினை முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் கலாசார உரிமைகளைப் பாதுகாத்து, தமது சுய படைப்பாற்றல்களை சரியான முறையில் வெளிப்படுத்தும் வண்ணம் நிர்மாணங்களை முன்வைத்த பல படைப்பாளர்கள் தங்க விருதுகள் மற்றும் வெள்ளி விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் சம்பிக பிரேமதாச, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, தேசிய கைவினைப்பொருள் சபையின் தலைவர் திருமதி ஹேஷானி போகொல்லாகம உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். என்றுள்ளது. (ஐ10)

கைதிகளுக்கு நட்டஈடு வழங்கும் விவகாரம்

# உண்மையான குற்றவாளிகளை மூடி மறைக்க முயல்கிறது அரசு

## சட்டத்தரணி சேனக்க பெரேரா கருத்து

கொழும்பு, மார்ச். 4

2012 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலை யில் ஏற்பட்ட மோதல்களின் போது சாவடைந்த கைதி களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதன் மூலம், சம்பவத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்களை மூடி மறைக்க அரசு முயற்சித்து வருகிறது என்று சிறைக் கைதிகளின் உரிமைகளை காக்கும் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

வெலிக்கடைச் சம்பவத்தின் போது, உயிரிழந்த 16 பேரின் குடும்பத்தினருக்கு தலா 20 லட்சம் ரூபாவும், காயமடைந்த 20 பேருக்கு தலா 5 லட்சம் ரூபாவும் நட்ட ஈடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது குறித்து சிறைக் கைதிகளின் உரிமைகளைக் காக்கும் அமைப்பின் தலை வர் சட்டத்தரணி சேனக்க பெரேரா தெரிவித்ததாவது

நட்டஈடுகளை வழங்கு வதன் மூலம் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க முடியாது. பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு காரணமாகவே கைதிகள் கொலை செய்யப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் கடந்த ஆட்சிக் காலத்தில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக கடமையாற்றிய உயரதிகாரிகள் மீதும், குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள அரசு தவிர்த்து வருகின்றது.

மேலும், நட்டஈடுகளை வழங்குவதன் முலம் உண்மையான குற்றவாளிகளை மூடி மறைக்க அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பொறுப்புக் கூறவேண்டிய குற்ற வாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் மட்டுமே பாதிக்கப்பட்ட வர்களுக்கு நியாயத்தை வழங்க முடியும்.

தற்போது ஜெனிவா மனித உரிமைகள் சபையின் மாநாடு நடைபெற்று வருகின்ற காரணத்தால் அரசு நட்டஈடு வழங்கும் திடீர் முடிவை எடுத்துள்ளது. இவ்வாறான செயல்களின் மூலம் உண்மைகளை மூடி மறைக்க முடியாது என்றார். (ஐ-5)

# சுகதேகியான மக்களைக் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்

## அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 4

**"சிறைச்சாலைகளை மூடிவிட்டு** பாடசாலைகளைத் திறக்கும் ஒரு நாடு உருவாக வேண்டும். அதே போன்று மருத்துவமனைகள் குறைந்து சுகதேகியான மக்கள் அதிகமாக வாழும் நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும்".

இவ்வாறு அரசதலைவர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

கேகாலை புனித மரியாள் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என அரச தலைவரின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"உலகில் மனித சமுகத்தின் பயணத்துக்குத் தடையாகவுள்ள முக்கிய அம்சம் நல்ல மனிதர்களின் அமைதியும், வெற்று மனிதர்களின் கோஷமும் ஆகும்" என்று மாட்டின் லூதர்கிங் கூறியுள்ளார். அது போல் வெற்று மனிதர்களின் கோஷங்களைக் குறைப்பதற்கு கல்விமான்கள் நாட்டில் அதிகமாக உருவாக வேண்டும்.

கேகாலை புனித மரியாள் கல்லூரி விவிலியம் மற்றும் குர்ஆனை அடிப்படையாகக்கொண்டது. இது தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாகும்.

1867ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கேகாலை புனித மரியாள் கல்லூரி, அப்போது நாட்டில் உள்ள கத்தோலிக்க மிசனரிப் பாடசாலைகளில் ஐந்தாவது பாடசாலையாகும். 150 ஆவது வருடத்தை நிறைவு செய்திருக்கும் இந்தக் கல்லூரி கத்தோலிக்க சமயத் தலைவர்களின் பின்னர் பல்வேறு அதிபர்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு உள்நாட்டில் மட்டுமன்றி பன்னாட்டு ரீதியாகவும் புகழ்பெற்று விளங்குகிறது. என்றுள்ளது.

(ஐ-10)

# வடமாகாண கல்வியமைச்சு தனித்து இயங்க வேண்டும்

## ஏனைய துறைகளை நீக்க வலியுறுத்துகிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

**" கல்வியில் பின்னடைவு ஏற்படுவதற்கு ஒரு காரணம், கல்வி அமைச்சோடு இதரதுறை அமைச்சுக்களும் இணைந்து இருப்பது தான். இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தியுள்ளது.**

யாழ்ப்பாணம், மார்ச்.4

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி அமைச்சுடன் இணைந்துள்ள ஏனைய துறைகள் நீக்கப்பட்டு, கல்வி அமைச்சு தனியாக இயங்க வேண்டும். கல்வியில் தொடரும் பின்னடைவை நீக்க இந்த மாற்றம் வேண்டும்".

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கல்வியில் பின்னடைவு ஏற்படுவதற்கு ஒரு காரணம், கல்வி அமைச்சோடு இதரதுறை அமைச்சுக்களும் இணைந்து இருப்பது தான். இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் மத்திய கல்வி அமைச்சு தனி ஒரு அமைச்சின் கீழும், உயர்கல்வி அமைச்சு தனியொரு அமைச்சின் கீழும் நிர்வகிக்கப்படுகின்றன.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி அமைச்சோடு கலாசாரம், பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரம் என்று பல துறைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் கல்வித்துறைசார் பணிகளுக்குத் தனியான முக்கியத்துவம் கொடுக்க முடியாதுள்ளது. கல்வி குழந்தைகளின் எதிர்காலம் என்பதற்கு அப்பால் மனித இனத்தின் விழுமியங்களோடு இணைந்த வாழ்க்கையின் முக்கிய அம்சம். 40 வருடங்களுக்கு மேலாக சீர்குலைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி வீழ்ச்சி என்பது இனிமேலும் வரக்கூடாது. உலகமயமாக்கலில் இருந்து எமது குழந்தைகள் விலகிச் செல்வது மட்டுமன்றி உயர்வான கல்விப் பாரம்பரியத்தை மறந்து உதவாக்கரைகளாக மாறிவருவதாகப் பலரும் குறைகூறி வருகின்றனர். எனவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி அமைச்சு தனி யொரு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டு, மாணவர்களின் கல்வியில் அதீத கவனம் செலுத்தி, கல்வியால் உயர்ந்த நாடுகளின் கல்விக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு எமது மாகாணம் முன்னிலை பெறவேண்டும்.

இதனை இரண்டு மாகாணங்களின் முதலமைச்சர்களும் சிந்தித்து தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் -என்றுள்ளது.

(ஐ-4)


# மரண அறிவித்தல்



## திருமதி செல்வரத்தினம் வேலுப்பிள்ளை

பருத்தித்துறை, ஓடக்கரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் வேலுப்பிள்ளை 28.02.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - இராசரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்சின்னாச்சிப்பிள்ளைதம்பதியரின்மருமகளும்காலஞ்சென்றவர்களானஏரம்பமூர்த்தி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, செல்வராஜா, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி (டென்மார்க்), தங்கராஜா (கனடா), யோகராஜா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற அன்ரனி யோகராஜா மற்றும் சாந்தகுமாரி, சௌந்தரராஜா, காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் வீணா(கனடா), ஷாமினி(கனடா) ஆகியோரின் மாமியாரும் செல்வகுமார்(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம் - துணுக்காய்), யாழினி(மக்கள் வங்கி - வல்வெட்டித்துறை), மாதவன்(ஆசிரியர், கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம்), வாமினி, தமிழினி, கோகுலன், லோசியன், மதனீகா, ராகினி, பிறேம்(டென்மார்க்), மீரா(டென்மார்க்), நந்தகுமார் (டென்மார்க்), வர்ஷிகா (கனடா), வர்ணிகா (கனடா), விதுஷனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 9 மணியளவில் பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஓடக்கரை,**
**பருத்தித்துறை.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

**0771081232**


# கனடாவின் பூகோள விவகாரக்குழு இலங்கைக்குப் பயணம்



கொழும்பு, மார்ச் 4

கனடாவின் பூகோள விவகாரங்களுக்கான திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளது.

அரசியல், வர்த்தக மற்றும் அபிவிருத்தி சார்ந்த விவகாரங்களைக் கையாளும் கனடாவின் பூகோள விவகாரங்களுக்கான திணைக்கள அதிகாரிகள், இலங்கைப் பயணத்தின் போது பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் புலமையாளர்களையும் நேற்று முன்தினம் இந்தக் குழுவினர் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்புகளில் இருதரப்பு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. இலங்கைக்கான கனடியத் தூதுவரும் இந்தச் சந்திப்புகளில் பங்கேற்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

# அனைத்து நீதிமன்றங்களுக்கும் சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச்.4

இலங்கையிலுள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் மேலதிக சிறப்புப் பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் ஆலோசனையின் பிரகாரம், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு - கல்கிசை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் இருந்து நேற்று முன்தினம் சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி ஒன்றும், ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

நீதிமன்றவளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சோதனை நடவடிக்கையால் சுமார் மூன்று மணிநேரம் நீதிமன்றச் செயற்பாடுகள் பாதிக்கப் பட்டிருந்தன.

குருநாகல் பொலிஸ் நிலையத்தில் சேவையிலிருந்த அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்ற குற்றச் சாட்டில் இரத்மலான பகுதியில் செயற்படுகின்ற பாதாள உலகக் குழுவின் தலைவரான ரோஹா என்பவர் கைதாகி கொழும்பு மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் நீதி மன்றத்துக்கு அழைத்து வரப்பட்டபோது, அவரைப் படுகொலை செய்வதற்கு இந்த ஆயுதங்களைப் பயன்படுத்த பாதாள உலகக்கும்பல் திட்டமிட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த நிலையில் நீதி மன்றங்களின் பாதுகாப்புத் தொடர்பான சர்ச்சை ஏற்பட்டிருக்கும் நிலையில், நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களினதும் மேலதிக பாதுகாப்புக்காகப் பொலிஸார் களமிறக்கப் பட்டுள்ளனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ஐ-10)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# பிரதேசசெயலரின் வீட்டில்அதிகாலை பெரும்கொள்ளை

20 பவுண் நகை, 3 லட்சம் பணம் பறிபோனது
ஓமந்தையில் கொள்ளையர்கள் கைவரிசை

வவுனியா, மார்ச். 4
வவுனியா, ஓமந்தையில்அரசஊழியர்களின் வீடுகள் அமைந்துள்ள பகுதியில் நேற்று அதிகாலை 20 பவுண் நகைகளும், 3 லட்சம் ரூபா பணமும் திருட ப்பட்டுள்ளன.
முல்லைத்தீவுமாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலராகக் கடமையாற்றும் குணபாலனின் வீட்டிலேயே இந்தக்கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் வீட்டுஉரிமையாளரான பிரதேச செயலர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் விசாரணை நடத்தினர். மோப்பநாயின்உதவியுடனும் தேடுதல் நடத்தினர். இருப்பினும் சந்தேகநபர்கள்எவரும்கைது செய்யப்படவில்லை.
'கொழும்பில் நேற்று முன்தினம் கலந்துரையாடலில் பங்குபற்றிவிட்டு இரவு 11.30 மணிக்கே வீடு திரும்பினேன். அரைமணி நேரத்தில் நித்திரைக்குச் சென்றேன். வீட்டுக்கதவுகள்அனைத்தையும்பூட்டிய தோடு, சாமி அறையின் திறப்பைத் தலையணையின் கீழ் வைத்து விட்டுப்படுத்துவிட்டேன். அதிகாலை 5 மணியளவில் எழுந்து பார்க்கும் போதுதான் கொள்ளை இடம்பெற்றதை அறிய முடிந்தது' என்று வீட்டு உரிமையாளர் குணபாலன் குறிப்பிட்டார்.
'வீட்டு யன்னல் கதவை உடைத்து, அதில்இருந்த கிறில்கம்பிகளைகழற்றி அதனூடாக வீட்டினுள் நுழைந்துள்ளனர். வீட்டில்இருந்தவர்கள்விழித்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக ஒருவகைத் திரவத்தைக் கொள்ளையர்கள் விசிறியுள்ளனர். நிலத்தில்தமதுகால்தடம் பதிந்துவிடக்கூடாது என்பதற்காக உடைகளை நிலத்தில் விரித்து அதன் மீது நடந்து சென்றுள்ளனர். பிரதேச செயலரின் தலையணையின் கீழ் இருந்த திறப்பை எடுத்து ஏனைய அறைகளைத் திறந்து நகைகளையும், பணத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.
சகல அலுமாரிகளையும் சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-5101)

# ஒரு ஏக்கர் நிலத்தில் 5 மூடை நெல்கூட விளைச்சலில்லை

## வறட்சியால் மோசமான நிலைமை என கிளிநொச்சி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, மார்ச் 4
கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாக ஓர் ஏக்கர் வயல் நிலத்தில் 5 மூடை நெல்லைக்கூடப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தட்டுவன் கொட்டியைச் சேர்ந்த விவசாயி ஐயம்பிள்ளை பத்மநாதன் தெரிவித்தார்



கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகச் செய்கை அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தது.
இரணைமடுக் குளப் புனரமைப்புக் காரணமாக மாவட்டத்தின் ஏனைய சிறிய குளங்களை நம்பியே இம்முறை காலபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் தொடர்ச்சியாக மழை இல்லாத காரணத்தால் சுமார் 30,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்கள் பகுதியளவிலும் முழுமையாகவும் பாதிப்படைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது
இம்முறை ஏற்பட்ட வறட்சி, அதனால் விவசாயிகள் எதிர்கொண்ட பாதிப்பு தொடர்பாகக் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த தட்டுவன் கொட்டி கிராமத்தில் 14 ஏக்கர் விதைப்பில் ஈடுபட்ட ஐயம்பிள்ளை பத்மநாதனிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.
"இந்தக் காலபோகச் செய்கை மிகவும் பாதிப்பான செய்கையாக அமைந்துள்ளது. காரணம் வழமையாக நான் 38 ஏக்கர் நிலத்தில் நெல் விதைப்பவன். இந்தக் காலபோகத்தை 14 ஏக்கர் நிலத்தில் மேற்கொண்டேன். பெரும் விளைச்சலை எதிர் பார்க்க முடியவில்லை. ஏக்கருக்கு 5 மூடை நெல் தான் இம்முறை கிடைத்தது. வழமையாக நான் ஓர் ஏக்கருக்கு 25 தொடக்கம் 27 மூடைநெல்லை வெட்டி எடுப்பேன். ஆனால் இந்த முறை ஏற்பட்ட வறட்சி மற்றும் எமது கிராமத்தில் உள்ள முறையற்ற சில செயற்பாடுகளால் தான் அழிவடைந்துள்ளது.
இங்கு வயல்கள் கடற்கரையோரங்களில் இருக்கின்றன. எமது பிரதேசத்தில் தேங்குகின்றநீர்சுண்டிக்குளத் தொடுவாய் வெட்டி விடப்படுவதால் கடலுக்குச் சென்று மீண்டும் எமது பிரதேசத்துக்குவருகின்றது. வருகின்ற நீர் உவர் நீராகக் காணப்படுவதால் அந்த நீரை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. கடல் நீர் வருவதைத் தடுப்பதற்கு ஓர் அணை அமைக்க வேண்டும். குறைந்தது 5 அடியாவது இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறான அணை இல்லாத காரணத்தால் பிரதேசத்தில் உள்ள நன்னீருடன் உவர் நீர் சேருகின்றது. இதனை விவ சாயத்துக்கோ அல்லது கால்நடைகள் குடிப்பதற்கோ பயன்படுத்தமுடியாமல் உள்ளது.
ஒரு ஏக்கர் வயல் விதைப்பதற்குக் குறைந்தது 32,500 ரூபா செலவு ஏற்படுகின்றது. இந்த 14 ஏக்கர் நிலத்தை விதைத்து அதற்குச் செலவு செய்த பணத்தில் அரைவாசியைக் கூட இம்முறை பெற முடியாமல் போயுள்ளது. நான் ஏக்கருக்கு 5 மூடை நெல்லையாவது அறுவடை செய்தேன். சிலர் ஒரு மூடையைக் கூட அறுவடை செய்யவில்லை"என்றார் - பத்மநாதன். (த- 6)

# விளம்பல் உறுதி ஆதனங்களுக்கு நிபந்தனையுடன் பெயர் மாற்றம்

## வடக்கு முதலமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4
விளம்பல்(வெளிப்படுத்தல்) உறுதியைச் சமர்ப்பித்து ஆதனங்களுக்கு பெயர் மாற்ற விண்ணப்பிப்பவர்களுக்கு, நிபந்தனையுடன் பெயர்மாற்றிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சிச் சபைகளுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஊடாக அறிவித்துள்ளார். அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற பல இராணுவ நடவடிக்கைகளினால் பொதுமக்களின் காணி உறுதிகள் பல இழக்கப்பட்டுவிட்டன. தாய் உறுதிகளைப் பெறமுடியாமல் விளம்பல் உறுதிகளைச் சமர்ப்பிக்கின்றனர். தாய் உறுதி இல்லாமல் எழுதப்பட்ட உறுதிகளை உள்ளூராட்சி மன்றங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் மன்றத்திலுள்ள ஆதனப் பதிவேட்டில் ஆதனங்களை தங்களின் பெயருக்கு மாற்ற முடியாமல் உள்ளனர். அதன் காரணமாக கட்டட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப் படுவதில்லை. அதனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வீட்டுத் திட்டங்களும் கிடைக்காமல் போகின்றன.
எனவே விளம்பல் உறுதியுடன் குறித்த காணியின் உரித்தாளிகள் தாங்களே என்பதை அந்தந்தப் பிரதேச கிராம சேவகர் மூலம் உறுதிப்படுத்திய சான்றிதழுடன் விண்ணப்பிப்பவர்களின் பெயர்களை ஆதன இடாப்பில் பெயர் மாற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
விளம்பல் உறுதியில் காணியின் முழு விவரங்களும் தற்போதைய உரித்தாளிகள் உரிமை பெற்றது எப்படி என்பது பற்றிய விவ ரங்களும் தரப்படவேண்டும். மேலும் விண்ணப்பதாரியுடன் உள்ளூராட்சி மன்றம் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.
ஒப்பந்தத்தில் இந்த பெயர் மாற்றத்தால் ஏற்படும் சகல விளைவுகளுக்கும் ஏற்படும் நட்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரியே பொறுப்பாவார் என்றும், கொடுக்கப்படும் தகவல் பொய்யானது எனக் கண்டறியப்பட்டால் பெயர் மாற்றத்தை இரத்துச் செய்து பழைய பெயருக்கு மாற்றப்படத் தான் சம்மதிப்பதாகவும் குறிப்பிடப்படல்வேண்டும்.
மேலும் பத்திரிகை மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டு இந்தப் பெயர் மாற்றம் சார்பாக ஒரு மாத கால அவகாசத்திற்குள் ஆட்சேபனை ஏதும் இருப்பின் தெரிவிக்குமாறு விளம்ப ரப்படுத்தல் வேண்டும். இதற்கான விளம்பரச் செலவீனம் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளிடம் காலத்திற்குக் காலம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். 2017.12.31 வரையுமே இந்த சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்என்றுள்ளது. (த- 4,9)

# பெரும் சத்தமாக பாட்டைப் போட்டவருக்கு நீதிமன்றில் ரூ. 2,500 தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வாகனத்தில் பெரும் சத்தமாகப் பாட்டுப் போட்டுக் கொண்டு சென்றவருக்கு 2ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.
இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாண நீதிவான் மன்றுக்கு விசாரணைக்காக வந்தது. இதன்போது குற்றவாளி மன்றில் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து யாழ்ப்பாண நீதிவான் மன்றின் நீதிபதி சதீஸ்தரன் குற்றவாளிக்கு 2ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்ததுடன், இனிமேல் இப்படியான செயலைச் செய்யக்கூடாது என்று எச்சரித்து விடுதலை செய்தார். (த-ரி)

# நிலங்கள் அபகரிப்பால் ஏற்று நீர்ப்பாசனத்தை முன்னெடுப்பதில் சிக்கல்

## கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திடம் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மார்ச் 4
கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள ஏற்று நீர்ப்பாச னத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளமையால் அந்தத் திட்டத்தை முன்னெடுப்பதில் இடர்பாடுகள் காணப்படுவதாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இரணைமடுக் குளத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் பங்குதாரர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தலைமையில் இடம்மெற்றபோதே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.
இது குறித்துக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள ஏற்று நீர்ப்பாசனத்துக்கான படிகள் தற்போது ஆரம்பித்துச் செயற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு செயல்படுத்தும் பிரதேசங்களில் ரிவரேசன் காணிகளாக ஒதுக்கப்பட்டிருந்த நிலங்களை அதன் அருகில் வசிப்பவர்கள் ஆக்கிரமித்து விட்டனர் . இதனால் திட்டத்தை முழுமை செய்ய முடியவில்லை.
இந்தப் பகுதிகளில் இலங்கை மின்சார சபையினரும் மின் கம்பங்களை நாட்டியுள்ளனர். அவற்றையும் பின் நகர்த்தித் தருவதோடு இங்கே கடந்த 25 ஆண்டுகளாக மரங்கள் வளர்ந்து இன்று பெரும் மரங்களாகக் காட்சி தருகின்றன. அவற்றை வனவளப் பகுதியினர் அகற்றித் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.
இரணைமடுக்குளத்தின் வலது கரை வாய்க்காலில் சுமார் 9 அடி உயரத்துக்குச் சேறு நிறைந்துள்ளமையால் குளத்தில் குறைந்த நீர் உள்ள சந்தர்ப்பத்தில் வாய்க்காலில் நீர் பாய்ச்ச முடியவில்லை.
எனவே அதனையும் அகற்றிச் சிமெந்தின் மூலம் சுவர் அமைத்துத் தருமாறு விவசாயிக ளினால் கோரிக்கை முன்வை க்கப்பட்டது.
வலது கரை வாய்க்காலை அமைக்க இணக்கம் தெரிவித்ததோடு வாய்க்கால் பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ள தனியார் அதனை உடன் விடுவிக்கவேண்டும். அதனைவிடுவிக்கும் முயற்சியை மாவட்டச் செயலகம் விவசாய சம்மேளனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தும். மின்கம்பங்களை பின் நகர்த்துவதற்கு மின்சார சபையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.
மரங்களை அகற்ற வனவளத் திணைக்களத்தினரும் இணக்கம் தெரிவித்தனர் என்று மாவட்ட மேல திக மாவட்டச் செயலர் தெரிவித்தார். (த-101,6)

# 16 மாணவருக்கு வகுப்புத் தடை

மூதூர், மார்ச்03
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஊழியர்களைத் தடுத்து வைத்தார்கள் என்று இனங்காணப்பட்ட 16 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணையை மேற்கொண்ட கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் இந்தத் தடையை அறிவித்துள்ளது.
மேற்படி சம்பவத்தைக் கண்டித்து புதன்கிழமை முதல் நிர்வாக உத்தியோகத்தர்களும் விரிவுரையாளர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.
மூன்றாவது நாளாக நேற்றும் போராட்டம் தொடர்ந்த நிலையிலேயே மேற்படி மாணவர்களுக்கான வகுப்புத் தடை விதிக்க ப்பட்டுள்ளது. (த- ய.40)

## புற்றுநோய் விழிப்புணர்வு 3

கருப்பைக் கழுத்துப் புற்று நோய் பற்றி கவனம் கொள்வோம்.
அறிகுறிகளாவன;
✝ மாதச் சக்கரங்களுக்கிடையில் குருதிப் போக்கு ஏற்படல்.
✝ மாத ஓழி காலம் (Meno Pause) அடைந்ததன் பின்னரான குருதிப்போக்கு.
✝ தாம்பத்திய உறவின் பின்னரான குருதிப்போக்கு ஏற்படல்.
✝ தாம்பத்திய உறவின் போது வலி ஏற்படல்.
✝ பிறப் புறுப்பினூடாக ஏற்படும் அசாதாரண குருதிப் போக்கு.

## பெண்கள் தின நடைபவனியில் பேஸ், கைபேசிகள் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 4
அனைத்துலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பமான நடைபவனியில் இரு பேஸ் மற்றும் ஒரு கைத்தொலைபேசி என்பன திருடப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பெண்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வோம் எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வு நடைபயணத்தின் ஆரம்பத்தில் கலந்து கொண்டவர்களுக்குத் தொப்பி, ரீசேட் என்பன விநியோகிக கப்பட்டன.
இவ்வாறு விநியோகித்த பொருள்களைப் பெறுவதற்காக அங்கு கூடியிருந்தவர்களுடன் பேருந்து நிலையத்தில் நின்றோரும் முண்டியடித்தனர்.
இதன்போது ஏற்பட்ட சில நிமிட நெரிசலைப் பயன்படுத்தி இரு பேஸ்களும், ஒருவிலை உயர்ந்த கைத்தொலைபேசியும் களவாடப்பட்டன. (து-101)



# இந்திய மீனவர்கள் ஐந்து பேர் கைதாகி விளக்கமறியலில்

கொழும்பு, மார்ச் 4
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 5 பேர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டது.
இராமநாதபுரம் பாம்பன்மடு ஆரோக்கியநகர் மற்றும் பிரான்சிஸ்நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5 மீனவர்கள் இழுவைப்படகு ஒன்றின் மூலம் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, கடல்சுற்றுக் காவலில் ஈடுபட்ட கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் விசாரைணையின் பின்னர் நேற்றுக்காலை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்திய பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அதன்போதே விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.
இராமநாதபுரம் பாம்பன்மடு ஆரோக்கியநகர் மற்றும் பிரான்சிஸ்நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சார்ளஸ் அஸ்கரிஸ்(வயது30), அருளானந்தம் அருள் கிறிஸ்தோப்பர்(வயது 26), ஜோசப் மெஸ்கரின்(வயது30), அந்தோனிமரியரூபன் (வயது23), அடைக்கலம் பிரகாஸ்(வயது 23) ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.
இதேவேளை, கடந்த புதன்கிழமையும் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-456)

## இந்திய மீனவர்கள் நிற்கும் இடங்களை சொன்னால் நாங்கள் வந்து பிடிப்போம்

### உள்ளூர் மீனவர்களிடம் கூறினர் முல்லைத்தீவுக் கடற்படையினர்

முல்லைத்தீவு, மார்ச் 4
இந்திய இழுவைப் படகுகள் நிற்கும் இடங்களை எங்களிடம் சொல்லுங்கள். நாங்கள் வந்து பிடிக்கின்றோம் என முல்லைத்தீவு கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
முல்லைத்தீவில் நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்ற கடற்தொழிலாளர்கள் இந்திய இழுவைப் படகுகள் கடலில் அதிகமாகக் காணப்பட்டதால் தொழிலுக்குச் செல்லாது கரைக்குத் திரும்பினர்.
இந்திய இழுவைப் படகுகளின் வரவைக் கட்டுப்படுத்துமாறு முல்லைத்தீவுக் கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்துப் பிரதிநிதிகளும் நேற்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள உதவிப் பணிப்பாளரிடம் நேரில் சென்று முறையிட்டனர்.
கடற்தொழிலாளர்களின் கோரிக்கையை அடுத்து வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்குக் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் நேரில் சென்றார். அவருடன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் சென்றுள்ளனர்.
இந்திய இழுவைப் படகுகளைத் தாம் கட்டுப்படுத்துவதாக உதவிப் பணிப்பாளரிடம் கடற்படை அதிகாரி தெரிவித்தார்.
கடற்படை அதிகாரியுடன் தாமும் நேரில் கதைக்க வேண்டும் என மீனவர்கள் கோரினர். இதனையடுத்து அதிகாரியுடன் கதைப்பதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
இந்திய இழுவைப் படகுகளை நீங்கள் அவதானித்தால் எங்களிடம் தெரியப்படுத்துங்கள் எனக் கடற்படை அதிகாரி மீனவர்களிடம் கூறியுள்ளார்.
உங்களிடம் ராடர்கள் இருக்கின்றன தானே. அதில் அவதானித்துக் கட்டுப்படுத்தலாம் அல்லவா என மீனவர்கள் அதிகாரியிடம் திரும்பக் கூறினர்.
"தற்போது மழை காரணமாக ராடர்கள் சரியான முறையில் தொழிற்படுவதில்லை. எம்மிடம் தற்போது மூன்று படகுகள் தான் உள்ளன. இருப்பினும் இனி வரும் நாள்களில் கூடிய கவனம் எடுப்போம் எனக் கடற்படை அதிகாரி கூறினார்" என முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (து-7)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய டிப்பர் சிக்கியது

கிளிநொச்சி, மார்ச் 4
கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மக்கேணிப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி வெள்ளை மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்துடன் அதன் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.
பளை தர்மக்கேணிப் பகுதியில் மணல் கொள்ளை இடம்பெறுவதாக கிராம மக்கள் தெரிவித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு அங்கு அனுமதிப் பத்திரம் இன்றி வெள்ளை மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் மடக்கியுள்ளனர். அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.
விசாரணைகளின் பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 8 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது. (து-6)

## இயற்கை விவசாயத்தில் வடக்கு முன்னிலை அடையவேண்டும்

### மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 4
இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள எமது விவசாயிகள் முன்வர வேண்டும். ஏற்கனவே குறைந்த எண்ணிக்கையானோர் இயற்கைவழி விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த எண்ணிக்கை அதிகரித்து இலங்கையில் இயற்கை விவசாயத்தில் வடக்கு மாகாணம் முன்னிலை என்ற இலக்கை எட்டவேண்டும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.
கனடா நாட்டின் 24 மில்லியன் ரூபா நிதி உதவியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட, இயற்கை விவசாயத்துக்குரிய இடுபொருள்களை உற்பத்தி செய்யும் கிறீன் விஸ்வா என்ற நிறுவனம் நேற்று முன்தினம் பண்டத்தரிப்பு, விளாவெளிவீதியில் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிறுவனத்தை திறந்து வைத்து அமைச்சர் பொ. ஐங்கரநேசன் உரையாற்றினார்.
இது குறித்து அமைச்சின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இயற்கைவிவசாயத்தால் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு உணவு படைக்க முடியாதென்று விவசாய இரசாயனங்களை உற்பத்தி செய்துவரும் பன்னாட்டு நிறுவனங்களும், கலப்பின விதைகளுக்கும் மரபணுமாற்று விதைகளுக்கும் காப்புரிமைபெற்றுவைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களும் பரப்புரை செய்து வருகின்றன.
ஆனால், கியூபா ஏற்கனவே இயற்கைவிவசாயத்தைவெற்றிகரமாகச் செய்து காட்டியுள்ளது. இந்தியாவில் சீக்கிம் மாநிலம் முற்றுமுழுதாகச் சேதன விவசாயத்துக்குத் திரும்பியிருக்கிறது. கோவா மாநிலமும் ராஜஸ்தான் மாநிலமும் சேதன விவசாயத்துக்கென மிக அதிகளவு நிலப்பரப்பை ஒதுக்கியுள்ளன.



பூச்சிக்கொல்லி இரசாயனங்கள் பயிர்களுக்குக் கெடுதல் செய்யும் பூச்சிகளை மாத்திரம் அழிக்கவில்லை. இயற்கையாகவே பீடைகளைக் கட்டுப்படுத்தி உழவருக்கு நன்மை செய்து வரும் சிலந்திகளையும், மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்தும் பூச்சிகளையும் அழித்து வருகின்றன. நன்மைதரும் பூச்சிகள் அழிந்துவரும் அதேநேரம் பீடைப் பூச்சிகள் இரசாயனங்களால் பாதிக்கப்படாதவாறு மேலும் மேலும் விஸ்வரூபம் பெற்று வருகின்றன.
இரசாயனங்களை நம்பிய விவசாயம் உழவர்களை மட்டும் பாதிக்கவில்லை. நுகர்வோர் அனைவரினதும் பிரச்சினையாக மாறியுள்ளது. விவசாய இரசாயனங்கள் நிலத்தடி நீரை நச்சுப்படுத்தி வருகின்றன. விவசாய இரசாயனங்கள் உணவின் மூலம் எமது உடலின் உள்ளே குவிந்து வருகின்றன. நாம் இன்று அனுபவித்து வரும் புதிய புதிய நோய்களுக்கு உணவின் சத்துக்குறைபாட்டை விட உணவில் அதிகமாக ஊறிப் போயிருக்கும் நச்சு இரசாயனங்களே காரணமாகும். இந்தப் பாதிப்புகளில் இருந்து விவசாயிகளும் உலகமும் மீண்டெழுவதற்கு இயற்கை வழி விவசாயத்துக்கு திரும்புவது காலத்தின் கட்டாயம் ஆகும் என்றார்.
இந்த நிகழ்ச்சியில் கனடாவின் இலங்கை அபிவிருத்தித் திட்டத்துக்கான பணிப்பாளர் குளோறியா வைஸ்மன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான உதவிப் பணிப்பாளர் இரா. கணேசராஜா, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன், பேராசிரியர் கு. மிகுந்தன், விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர் எஸ். ஜே. அரசகேசரி, வலிமேற்கு பிரதேச செயலர் அ. சோதிநாதன், வலி தென்மேற்கு பிரதேச செயலர் உ. யசோதா, விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (து-10)

# குருதி ஆறுகள் சீனாவில் பாயும்

## ஐ.எஸ்.ஐ.எஸ். மிரட்டல்



பக்தாத், மார்ச் 4
சீனாவில்குருதிஆறுபெருக்கெடுத்து ஓடும் என்று ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினர்எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிரியாவை தலைமையிடமாகக்கொண்டுசெயற்படும்ஐ.எஸ். ஆயுததாரிகள், உலகம் முழுவதும் இருந்து தங்கள் அமைப்புக்கு ஆள்களைச் சேர்த்து வருகின்றனர். அவ்வாறு ஐ.எஸ். அமைப்பில்இணையும்இளைஞர்கள் அவரவர் சொந்த நாடுகளில் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பாணியில்ஐரோப்பாமற்றும்அமெரிக்காவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதே பாணியில் சீனாவிலும் தாக்குதல் நடத்துவோம் என்று அந்த அமைப்பு முதல்முறையாக எச்சரித்தது.

**உய்குர் முஸ்லிம் பிரச்சினை**

சீனாவின்வடமேற்குபகுதியில் தன்னாட்சி அதிகாரம் பெற்ற ஜின்ஜியாங் மாகாணம் உள்ளது. திபெத்தைப் போன்று கடந்த 1949 ஆம் ஆண்டில் ஜின்ஜியாங் பகுதியை சீன கம்யூனிச அரசு ஆக்கிரமித்தது. இதைத் தொடர்ந்து அந்த மாகாணத்தில் சீனர்கள் பெரும்பான்மையாக குடியேறினர். அங்கு பூர்விகமாக வசித்த உய்குர் முஸ்லிம்கள் சிறுபான்மையினமாயினர். கடந்த 1990 ஆம் ஆண்டில்உய்குர்முஸ்லிம்கள், தனி நாடு கோரி தெருக்களில் இறங்கி கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்தக் கிளர்ச்சியை சீனராணுவம் ஒடுக்கியது. இதில் நூற்றுக்கணக்கானோர்கொல்லப்பட்டனர் என்று குச்சாட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டில்உய்குர்முஸ்லிம்களுக்கும் சீனர்களுக்கும் இடையேவன்முறை வெடித்தது. இதில் 200க்கும்மேற்பட்டமுஸ்லிம்கள் உயிரிழந்தனர். ஆரம்பத்தில் அல் கொய்தாவுடன் இணைந்திருந்த உய்குர் கிளர்ச்சியாளர்கள் தற்போது ஐ.எஸ். ஆயுததாரிகளுடன்கைகோத்துள்ளனர். இதன்படி சிரியா, ஈராக்கில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவின்முகாம்களில்உய்குர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களை மையமாக வைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் புதிய காணொலியை வெளியிட்டுள்ளனர். சுமார் 30 நிமிடங்கள்ஓடும்அந்தக்காணொலியில்சீனாவுக்குபகிரங்கமாக எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. உய்குர் முஸ்லிம்களின் விருப்பத்தை சீன மக்கள் புரிந்து கொள்ளவில்லை. நாங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் மாவீரர்கள். விரைவில் சீனாவுக்கு வருவோம். அப்போது ஆயுதங்களால் உங்களோடு பேசுவோம். சீனாவில் குருதி ஆறு ஓடும். எங்களை அடக்க நினைப்பவர்களைப் பழிவாங்குவோம்என்றுஅந்தக்காணொலியில்குறிப்பிடப்பட்டது. (ம)



ஸ்பெய்னில் வருடாவருடம் கொண்டாடப்படும் மோமோட்ஸ்ரோறோ சட
தர்களைப்போல்வேடமிட்டுஇந்தச்சடங்கில்மக்கள்கலந்துகொள்வார்கள். நட
பங்குபற்றினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

### பன்டாக்களைப் பாதுகாப்பதற்கு சீனாவில்பூங்கா

பன்டாக்களை பாதுகாப்பதற்காக, 27 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் அளவிலான தேசிய வனப்பகுதியை ஒதுக்கியுள்ளதாக சீன அரசு அறிவித்தது. 33 வகையான, வன பன்டாக்களை பாதுகாக்க சன்சி, சச்சுவான் மற்றும் கேன்சூ ஆகிய மாகாணங்களில் பூங்காக்கள் அமையவுள்ளன. சரணாலயங்களுக்கு வெளியே வாழும் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்ட சீன வன பன்டாக்களை பாதுகாக்க இந்த புதியதேசிய பூங்காக்கள் முயற்சிகளை மேற்கொள்ளும். இவ்வாறு அழிவில் இருக்கும் உயிரினங்களான சைபீரியப் புலிகள், திபெத்திய ஆண்டிலோப் மற்றும் ஆசிய யானைகள் ஆகியவற்றை பாதுகாக்க பெரிய பூங்காக்களை அமைக்கும்திட்டங்களையும் பரிசீலித்து வருவதாக சீன அரசு மேலும் குறிப்பிட்டது. (ம)

# தாமிரபரணிக்கு இளைஞர்கள் மே




சென்னை, மார்ச் 4
தாமிரபரணி ஆற்றில் இருந்து குளிர்பான ஆலைகள் தண்ணீர் எடுக்கவிதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை நீக்கப்பட்டதை அடுத்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தாமிர பரணி ஆற்றுப்பகுதியிலும்சிலர் ஆற்றுக்குள் இறங்கியும் போராட்டங்களில்ஈடுபட்டனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபாகர் என்பவர் குளிர்பான ஆலைகள் தாமிரபரணி ஆற்றில் இருந்து தண்ணீர் எடுக்க தடை விதிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற மதுரை கிளை, கடந்த நவம்பர் மாதம் மு
எடுக்கக
களுக்கு
தடை வி
அதனை
பான ஆ
முறை
அதில், த
இருந்து
மேலதி
பயன்ப
என்றும்,
ணீர் எடு

# எரிவாயு பெறுவதற்கான ஏற்பாடுகள் முழுவதுமாக அகற்றப்படவேண்டும்

## நெடுவாசல் மக்கள் நேற்று வலியுறுத்தல்

சென்னை, மார்ச் 4
இயற்கை எரிவாயு எடுப்பதற்கு தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம்நெடுவாசல்கிராமத்தில்இந்திய மத்திய அரசு வழங்கிய அனுமதியை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி பல்லாயிரக் கணக்கானமக்கள்இணைந்து17 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அனுமதி உத்தரவை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி வந்த மக்கள், எரிவாயு பெறுவதற்கு இதுவரை



செய்யப்பட்டுள்ளஏற்பாடுகளை முழுமையாக அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நேற்று முன்வைத்தனர்.

தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு எடுப்பதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டால் நெடுவாசல் கிராமத்தின்நீர்வளம், விவசாயநிலங்கள் ஆகியன பாழாகும் என்ற அச்சம் உள்ளதால் திட்டத்தை திரும்பப் பெறவேண்டும்என்றுவலியுறுத்திபல்லாயிரக்கணக்கானமக்கள்இணைந்து தொடர்ந்து இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சுழற்சி முறையில் உணவு ஒறுப்பும் நடைபெற்று வருகிறது.


விவசாயிகள்கலப்பைகள், மண்வெட்டிகள், மாட்டுவண்டில்கள் ஆகியவற்றுடன் போராட்டத்தில் கலந்து கொண்டு வருகின்றனர். (ம)



டங்கு அண்மையில் கொண்டாடப்பட்டது. வரலாற்றுக்கு முந்தைய மனி
டப்புவருடத்துக்கானசடங்கில்பல்லாயிரக்கணக்கானமக்கள்ஆர்வத்துடன் (ம)

# இரவு பகலாக தொடர்கிறது சண்டை மேற்கு மோசூலில் பாதிப்பகுதி மீட்பு

பக்தாத், மார்ச் 4
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் ஈராக் அரச படைக்கும் இடையே மேற்குமோசூலில்தற்போதுகடும் போர் நடைபெற்று வருகிறது. மேற்கு மோசூலின் பாதிப்பகுதி ஈராக் இராணுவத்தால் மீட்கப்பட்டதுஎன்றுபன்னாட்டுஊடகங்கள் செய்திவெளியிட்டன.



ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒருதனிநாடுஎன்றுஅறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்தஅமைப்பின்பிடியில்இருந்த பல நகர்கள் மீட்கப்பட்டுவிட்டன. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் ஐ.எஸ்ஸின் பிடியிலேயே இருந்தது. இதன் கிழக்குப் பகுதி முழுவதுமாக மீட்கப்பட்டு விட்டது. மேற்குப் பகுதியைக் கைப்பற்றும் போர் கடந்த இரு வாரமாக நடைபெற்று வருகிறது.
ஈராக் அரசபடை தொடர்ந்து முன்னேறி வருகிறது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் மேற்கு மோசூலில் பாதிப்பகுதி மீட்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன.
போர் இடம்பெறும் இடங்களில் தற்காலிக மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு காயமடைந்த பொதுமக்கள்மற்றும்இராணுவச் சிப்பாய்களுக்குமருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. இது வரை கிட்டத்தட்ட 30 ஆயிரம் மக்கள் மீட்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# தள் இறங்கி போராட்டம்



ம் முதல் தண்ணீர்
கதுளிர்பானஆலை
க்கு இடைக்காலத்
விதித்தது.
னை எதிர்த்து குளிர்
ஆலை கள் சார்பில்
றயிடப்பட்டது.
, தாமிரபரணியில்
ந்து வெளியாறும்
திக நீரைத்தான்
ன்படுத்துகிறோம்
றும், இதனால் தண்
எடுக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. இதை ஏற்று நேற்று முன்தினம் காலை தடை நீக்கப்பட்டது.
தடை நீக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று முன்தினம் மாலையும் நேற்றுக் காலையும் இளைஞர்கள் போராட்டங்களில்ஈடுபட்டனர். (ம)

## ஐ.எஸ்ஸுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இளம்பெண்கள் கைது

பாரிஸ், மார்ச் 4
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நான்கு இளம் பெண்கள் பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் கைது செய்யப்பட்டனர். பிரான்ஸ்நாட்டின் தலைநகரான பாரிஸில் கடந்த தாண்டு நடந்த குண்டு வெடிப்பில்அதேநாட்டைச்சேர்ந்தராச்சித் காஸ்சிம் என்ற நபர் தேடப்பட்டுவரும் குற்றவாளியாக இருக்கிறார்.
ஈராக்கில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புடன்இணைந்துஇயங்கி வரும் நிலையில், பிரான்ஸை சேர்ந்தஇளம்பெண்ஒருவர்காஸ்சிமின் அலைபேசிக்கு ரகசியமாக குறுஞ்செய்திகள் அனுப்பி வந்துள்ளார். அந்தப் பெண்ணைக் கைதுசெய்த பொலிஸார் அவரிடம் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் மேலும்மூன்றுபெண்களையும் கைது செய்தனர். கைதான நான்குபெண்களும்18முதல்20 வயதுக்குஉட்பட்டவர்கள்என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)





# கைதிகளைச்சித்திரவதை செய்கிறதுபிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸ்சிறைச்சாலைகளில்கைதிகள் துன்புறுத்தப்படுகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் ஒளிப்படங்களுடன்செய்தி வெளியிட்டன.
பிலிப்பைன்ஸின்செபுசிறைச்சாலையில் கடந்த28ஆம்திகதிநூற்றுக்கணக்கான கைதிகள் ஆடைகள் இன்றி நிர்வாணமாக்கப்பட்டு அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்என்றுகுற்றச்சாட்டுமுன்வைக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல்காரர்கள்,பயன்படுத்துவோர்,முகவர்கள் ஆகியவர்களை எவ்வித சட்ட நடவடிக்கைகளும் இல்லாமல் பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே கொலை செய்து வருகிறார் என்று ஏற்கனவே குற்றச்சாட்டுள்ளது. இந்த நிலையில் மற்றொரு பிரச்சனையாக கைதிகள் விவகாரம் வந்தமைந்தது. (ம)

## கிம் ஜோங் நாமின் உயிரிழப்பு கொலையில்லையாம்

வடகொரிய அதிபரின் சகோதரர் கிம் ஜோங் நாம் கொல்லப்படவில்லை. அவர் மாரடைப்புக்காரணமாகவே இறந்தார் என்று தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் சபைக்கான வடகொரியாவின் முன்னாள் பிரதிநிதி ரீ டாங் இல்.
மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்தில், கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங்நாம் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹவாங், வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல் நால்வரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர். ஆய்சா மற்றும் ஹவாங் இருவரும் தடை செய்யப்பட்ட இரசாயனம் ஒன்றை நாமின் முகத்தில் விசிறி அவரைக் கொல்வது தொடர்பான காணொலியும் வெளியிடப்பட்டது. இந்த நிலையில் நாம் கொல்லப்படவில்லை. குருதி அழுத்தம், இருதய நோய் ஆகியன அவருக்கு ஏற்கனவே இருந்தன. இதனால் அவர் மாரடைப்பாலேயே இறந்திருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான வடகொரியாவின் முன்னாள் பிரதிநிதி ரீடாங் இல் தெரிவித்தார். (ம)

## மரண அறிவித்தல்



திருமதி
**அபிதகுசலாம்பிகை தியாகேந்திரன்**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நைஜீரியா, இலங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அபிதகுசலாம்பிகை தியாகேந்திரன் கடந்த (28.02. 2017) செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலியா மெல்பனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா பத்மநாதன் - அன்னலட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற தியாகராஜா தியாகேந்திரனின் அன்பு மனைவியும், திருவாளர்கள் சோதிலிங்கம், தேவலிங்கம், திருமதி பத்மலோஜினி சிவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. அஜந்தன் தியாகேந்திரன் (இங்கிலாந்து), மருத்துவ கலாநிதி (திருமதி) சசிகலா அனுரதன் (மெல்பன் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தாயும், திரு. கணேசன் அனுரதன், திருமதி சுதாஷினி அஜந்தன் ஆகியோரின் அன்புமாமியும், செல்வன்கள் அருண் அஜந்தன், அர்ஜுன் அஜந்தன், செல்வி அனீஷா அஜந்தன், செல்வி சுவேதா அனுரதன், செல்வன் சந்தோஷ் அனுரதன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரையில் மெல்பனில் Bunurong Memorial Park Stratus Chapel (790,Frank-ston-Dandenong Road, Bangholme-) (Dandenong South) இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

கணேசன் அனுரதன் (மருமகன்)
0061(03)83152936 (Home) / 0061 (0)432287423 (Mobile)
0061 (0) 438 090 973 (Mobile)

# மொத்த தேசிய உற்பத்தியின் ஏற்றுமதி குறைவடைந்துள்ளது



## பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

மொத்தத் தேசிய உற்பத்தியின் ஏற்றுமதி குறைவடைந்துள்ளதுடன் மீண்டும் அவற்றுக்கிடையேயான சமநிலையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதான கருத்துக்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

'ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகக்கொள்கை மற்றும் இலங்கைக்கான வாய்ப்புக்கள்' எனும் தொனிப்பொருளின் கீழான கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற மாநாடு தொடர்பில் தெளிவூட்டலை வழங்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

தவிர,அரசுகடன்பெறுவதில்கொண்டுள்ளஎல்லைதமக்கு புலப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், முன்னைய அரசு செய்துகொண்ட அதீத கடன் சார் செயல் விளைவுகளே இதற்கான காரணமாக அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

எமக்குசிலதடைகள்காணப்பட்டன. அதன்பின்னணியாக சிரமமான காலங்கள் இருந்தன. இதன்காரணமாக அரசு பின்நோக்கிப் பயணிப்பதாகக் கருதக்கூடாது. நாம் ஒரு திசையில் பயணிப்பதாக எண்ணிக்கொள்ள முடியும். ஆனாலும்நாம்வர்த்தகத்தில்ஈடுபடுகின்றோம். வர்த்தகத்தில் ஈடுபடவேண்டிய துறைகளை கவனத்தில் கொள்ளாமைதற்போதுள்ளபிரச்சினையாகஇருக்கிறது. சந்தைக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைந்துள்ளன. ஆகவே மீண்டும் நுகர்வோர் வர்த்தக பேண்தகு சமநிலையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வாய்ப்புக்கள்வழங்கும்செயற்பாடுகளினூடாக வர்த்தகச்செயற்பாடுகளுக்குநிதிவழங்கவேண்டிய தேவையுள்ளது. எவ்வளவு காலங்களுக்கு கடன்பெறுகைக்காக டொலர்களை விற்று ரூபாவைக் காப்பாற்ற முடியும். டொலர்களை கடனாகப்பெற்று அரசு வழங்குகின்றது. அதனை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்துரூபாய்களைபாதுகாக்கின்றோம். எனினும்கடன் பெறுவதில் எல்லை ஒன்று உள்ளது. அந்த விடயங்கள் அரசு என்ற ரீதியிலே எமக்குப் புரிகிறது. கடன்களை மீளளிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. இவை அனைத்தும்தற்போதைய அரசுசெய்தவை அல்லமுன்னைய அரசு செய்துகொண்ட பாவச்செயல் - என்றார்.

*"அரசு அதிகபட்ச கடன் மட்டத்தை அண்மித்துள்ளது. அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் 135 ஆகக் காணப்பட்ட இலங்கைரூபாவின் பெறுமதியானது 150 ஆக மாறியுள்ளது. இந்த சமனிலையை தொடர்ந்தும் அதே மட்டத்திலேயே பேண வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது."*




## பிரதேச அபிவிருத்தி வங்கியின் நடமாடும் வங்கிச் சேவைகள் ஆரம்பம்





யாழ்ப்பாணம் பிரதேச அபிவிருத்தி வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை இலகுபடுத்தும் விதமாக நடமாடும் வங்கிச் சேவைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வங்கியில் சேமிப்பை மேற்கொள்ளும்வாடிக்கையாளர்களுக்கான குறைந்த வட்டியுடன் கூடியதான சுயதொழில்கடன் பெறுதிகளைவங்கிமுன்னுரிமையோடுவழங்கிவருகிறது.

இதன்பிரகாரம்யாழ்ப்பாணகார்ச்சங்க பிரதிநிதிகள் 10 பேருக்கான குறைந்த வட்டியுடன் கூடியதான சுயதொழில் கடன் தொகை மதிப்பீடாக தலா ஒரு லட்சம் ரூபா வங்கியின் முகாமையாளர் சோமசுந்தரம் சுரேசினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நுகர்வோர் சட்டங்கள் தொடர்பில் மக்கள் அபிப்பிராயம் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பம்

நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயத்தை கேட்டறியும்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாககைத்தொழில்மற்றும்வணிக விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதானமாக நுகர்வோரின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சிந்தக லொக்குஆராச்சி தெரிவித்துள்ளார்.

அதேவேளை கட்டுப்பாட்டு விலையை விடக் கூடுதல் விலையில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கைதுசெய்வதற்கான திடீர் சோதனை நடவடிக்கைகள் நாடு முழுமையுமாகமுன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கருத்துரைத்துள்ளார்.

தவிர நாட்டின் எந்தவொரு இடத்திலும் திடீர் சோதனைகளை மேற்கொள்ளும் வகையில் பிராந்திய சுற்றிவளைப்புப் பிரிவுகளுக்கு மேலதிகமாக புதிய சிறப்புப் பிரிவொன்றை ஆரம்பிக்கவும் நுகர்வோர் விவகார அதிகார நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பார்வையற்றோருக்கான புதிய கைபேசிச் செயலி அறிமுகம்

## 'ஐபொலி' நிறுவனத் தயாரிப்பாக வெளிவந்துள்ளது

தொழில்நுட்பத்தின் வளர்ச்சிப்போக்கு உயர்நிலையை அடைந்துள்ளது. அதன் வெளிப்பாடுகள் மனிதநடைத்தைகள் சார்ந்து பயனுறுதி உடையதாக வெளிப்படத் தொடங்கியுள்ளன. அந்தவகையிலே மனித உடலியல் சார் விளைவுகளையும் உணர்திறனாக்கும் செயலிகள் உலக சந்தைகளில் விற்பனைக்கு பரப்பிவிடப்பட்டுள்ளன.

குறிப்பாககைபேசிகளின் உதவி கொண்டு இவ்வுலகைக் கைக்குள் கொண்டுவர முடியும் என்றால் அங்கு செயலிகளின்பங்கு மிகவும்முக்கியம்வாய்ந்ததாக இருக்கிறது. நாளுக்கு நாள் புதிய செயலிகள் வெளிவருகின்றன.

அந்த வரிசையிலே தற்போது பார்வையற்றவர்களுக்கான புதிய செயலியொன்றை ஐபொலி (Aipoly) நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

இந்தச்செயலியைபார்வையற்றவர்கள்பயன்படுத்துவதற்கானகைபேசிகளில்பதிவிறக்கம்செய்துகொள்வதன் மூலமாக அவர்கள் தங்களுக்கு எதிரே இருக்கக் கூடிய பொருள்என்னஎன்பதையும், தாங்கள்அறியவிரும்பும் பொருளின் பெயரையும் அவை சொல்லக் கேட்டு அறிந்துகொள்ள முடிகிறது.

இவை எதிரே இருக்கும் பொருளை ஸ்கான் செய்துகொண்டு அதனுடைய பெயரைத் துல்லியமாக வெளிப்படுத்தும் ஆற்றலோடும் 7 மொழிகளில் பொருள்களின் பெயரைச் சொல்லும் வகையிலும் வடிவமைப்பைப்



பெற்றுள்ளன.

தொழில்நுட்ப கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக்கூடியதான இந்தப் புதிய செயலியானது பார்வைக் குறைபாடு உடையவர்கள் மத்தியில் நல்லவரவேற்பை பெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது.

தவிர, தற்போது ஐ.ஓ.எஸ் இயங்குதளம் கொண்ட கைபேசிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இந்தச் செயலியானது விரைவில் அண்ட்ரோய்ட் இயங்குதளத்திற்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ள தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரியாலையூர்
செல்லக்கண்டு செல்வராஜா

# கல்வியின் இன்றைய தேவை

பாடசாலைகளில் நாம் கற்றுக் கொள்பவை எம் வாழ் நாள் பூராகவும் நீடிப்பதாக அடிக்கடி சொல்லப்படுவதுண்டு. இதனால்கல்வியின்உள்ளடக்கம் மிக மிக முக்கியமானதென சுட்டிக் காட்டப்படுகின்றது. இது எமக்கு மட்டுமல்ல எமது எதிர்காலச் சந்ததிக்கும் கூட முக்கியமானதாகும்.

இவ்வாறு சாங் சேய்ங் "ஒன்றாக வாழ்தல் ஒருவருக்கொருவர் உதவுதல்" எனும் சஞ்சிகையின் 46ஆவதும் 2016ஆம் ஆண்டின் நிறைவு இதழில் ஆசிய பசுபிக் நாடுகளின் பன்னாட்டுப் புரிந்துணர்வுக்கான கல்வி எனும் யுனெஸ்கோ கிளை அமைப்பின் பணிப்பாளர் உடாக் சுங் தெரிவித்துள்ளார். அவர்மேலும் கூறுகையில்.

**வகுப்பறையில் என்ன நடக்கின்றது?**

"எனினும் பாடசாலைகளில் எமது பிள்ளைகள் எவற்றைக் கற்கிறார்கள் என்பதிலும் வகுப்பறையில்என்ன நிகழ்கின்றது என்பதிலும் எம்மவரில் பெரும்பாலானோர் பரிச்சயமற்றவர்களாகவே உள்ளனர். இந்த நிலையில்கற்றல்வெளியீடுஅல்லது விளைவு(Out Come) பற்றிய அளவிடல் முக்கியத்துவம் பெறுகின்றது. தற்போதைய கல்வி முறைமையில் பெறுபேறு அல்லது விளைவு அளவிடலில் ஒரு தீர்க்கமான உத்தி அல்லது தந்திரோபாயம் ஸ்தாபிக்கப்படுதல் அவசியமாகின்றது. தற்போதையகல்விக்கொள்கைகள் எமது வழிகாட்டல்கள் எவ்வாறு மேம்படுத்தப்பட வேண்டுமென்பதை அடையாளம் காண பொருத்தமான மதிப்பீட்டு முறையே உதவும். சமாதானத்தின் பெறுமானம். சகிப்புத் தன்மை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றைக் கற்பவர்கள் அடையத்தக்கதாகப்பொருத்தமானகல்விவழங்குதல் எமதுகடமையாகும்என்றும்அவர்தெரிவித்துள்ளார்.

கல்வியில் புதிய நடைமுறைகளைக் கொண்டுவர உத்தேசித்து அதற்கானமுயற்சிகளில்இறங்கியுள்ளஎமதுநாட்டுக்கும்இது பொருத்தமானதாகும். கல்விச் சீர்திருத்தம் அதோ இதோ என்று அடிக்கடி ஓங்கி ஒலிப்பதும்பின்னர்அடங்கிஒலிப்பதும்எம்நாட்டின் அன்றாட அவதானமாகும்.

அல்லாமலும் நீடித்த சமாதானத்துக்கும் நிலைபேறான அபிவிருத்திக்குமாக நல்லாட்சி நடத்த உத்தேசித்துள்ள எமது நாட்டு அரசும் உடாக் சுங்கின் கருத்தில் கவனம் செலுத்துவதும்அதற்கேற்றவிதத்தில்பொருத்தமான நடவடிக்கைகளில் இறங்குவதும் சாலப் பொருத்தமாகும்.



தற்போதைய கல்விக் கொள்கைகள் எமது வழிகாட்டல்கள் எவ்வாறு மேம்படுத்தப்பட வேண்டுமென்பதை அடையாளம் காணப் பொருத்தமான மதிப்பீட்டு முறையே உதவும். சமாதானத்தின் பெறுமானம். சகிப்புத் தன்மை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றைக் கற்பவர்கள் அடையத்தக்கதாகப் பொருத்தமான கல்வி வழங்குதல் எமது கடமையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கல்வியில் புதிய நடைமுறைகளைக் கொண்டு வர உத்தேசித்து அதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ள எமது நாட்டுக்கும் இது பொருத்தமானதாகும்.



**பொருத்தமான கல்வி**

சமாதானத்தின் பெறுமானம் சகிப்புத் தன்மைமற்றும்நிலைபேறானஅபிவிருத்தி என்பவற்றை கற்பவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக பொருத்தமான கல்வி வழங்குதல்அவசியமெனச்சுட்டிக்காட்டும்உடாக் சுங்கின் கருத்து வளர்ச்சியுறத் துடிக்கும் அல்லதுசிங்கப்பூரைப்போலவரவிரும்பும் ஒருநாட்டுக்குஇன்றியமையாததேவையாகும்.

நாட்டின்அனைத்துப்பிரச்சினைகளுக்கும் ஆங்கிலேயக் கல்வி முறைதான் காரணமென அவ்வவ்போது சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. பின்னர்சிலதடவைமுற்றுமுழுதாகவும்சிலதடவைகள்பகுதியளவிலும்கல்வி மாற்றங்களும்சீர்திருத்தங்களும்கொண்டு வரப்பட்டன. ஆயினும் புரையோடிப் போயுள்ளபலநோய்களுக்குஅதுமருந்தாக அமைந்ததாகக் காணோம். இந்த நிலையில்நல்லிணக்கம், சமாதானம், நல்லாட்சி என்று கூறுபவர்கள் அவற்றை உருவாக்கவும்நிரந்தரமாக அவை பேணப்படவும் கல்வியையும் ஒரு பயனுள்ள கருவியாகப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

பன்னாட்டுப் புரிந்துணர்வுக்கான கல்வி Education for International Underatanding (EIU) மற்றும் நிலைபேண் அபிவிருத்திக்கான கல்வி Education for Sustainable Development (ESD) என்கின்ற விடயம் யுனெஸ்கோவால் ஆசிய பசுபிக் நாடுகள் பலவற்றில்நடைமுறைப்படுத்துவதற்கான அல்லது இந்தப்பிராந்திய நாடுகளின் கல்வி அமைப்பில் சேர்ப்பதற்கான கற்றல் கற்பித்தல் உருப்படிகள் விடயங்கள் பல தேர்ந்தெடுக்கப்பட்டு. உலகக்கல்வியியலாளர்களால் நூலுருவாக்கப்பட்டுள்ளது. பல நாடுகளில் அவை பொருத்தமான மாற்றங்களுடன் பரீட்சித்தும் பார்க்கப்பட்டு வருகின்றன. ஆசிய பசுபிக் நாடுகள் பலவற்றின் கல்வியியலாளர்களுக்கு இவைபற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில் இலங்கையின் நாலாபக்கங்களிலுமுள்ள தமிழ் சிங்கள இனத்தவர்களும் இந்தக் கல்வி முறைமையில் பயிற்சி பெற்றுள்ளனர்.

நீடித்தசமாதானம்நல்லாட்சிநிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை அடைய கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டிய புது மைகளைப் புகுத்த இத்தகைய பயிற்சி பெற்ற எம் நாட்டுக் கல்வியியலாளர்களையும் ஒன்றிணைத்து எம் நாட்டுக்கு ஏற்றவிதத்தில் அவற்றில் பொருத்தமான இயைபாக்கம் மேற்கொண்டுகொண்டுசெல்லப்படவேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும். நல்லிணக்கத்துக்காக1.7மில். டொலர் நிதியை வழங்குகிறது அமெரிக்கா.

**மதங்கள் ஊடாக நல்லிணக்கம்**

சமயங்களின்ஊடானநல்லிணக்கம்காண சர்வமதத் தலைவர்களை உள்ளடக்கி மன்னாரில்கலந்துரையாடல்என ஆங்காங்கே நல்லிணக்கம்பற்றியசெய்திகள்வந்தவண்ணமுள்ளன. இவை மேலும் பயனளிக்க கல்வியும் இவற்றுடன் இணைக்கப்பட்டாலன்றி அனைத்தும் விழலுக்கு இறைத்த நீரேயாகும்.

**கல்வி**

அல்லாமலும் வெறும் மந்திரத்தால் மாங்காய் விழுத்த நினைக்கும் செயற்பாடல்ல நல்லிணக்கம். நல்லிணக்கமென்பதனை உளதார விரும்பி, அதற்காக முழுவீச்சில் இறங்கினாலன்றி நல்லிணக்கம் வயப்படாது. வெறும் ஏமாற்றுச் செயலாகவே அமையும். பலமான அத்திபாரம்அமைக்கப் படுவதுடன், இனங்காணப்படும் தடைகளும் அகற்றப்பட வேண்டும்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் 14ஆம்திகதிவரைதேசிய ஒருங்கிணைப்பு மற்றும்நல்லிணக்கவாரமெனப்பிரகடனப் படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் இது கொண்டாடப்படுமென்வும்அறிவிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்றகாலத்தினடிப்படையில்இந்தத் திகதிகள் அமைகின்றன. பாடசாலைகளை மையப்படுத்தியும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களை மையப்படுத்தி அதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துதல் போன்ற இன்னோரன்னசெயற்பாடுகள்அறிவிக்கப்பட்டிருந்தன. மாற்றத்தின் முகவர்களாக இவர்களைப்பயன்படுத்தவுள்ளதாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வேலைத்திட்டங்கள்எவ்வளவுதூரம்வெற்றிபெற்றதென்பது போகப் போகத்தான் தெரியவரும்.

இதேவேளை, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரத்தில் கொழும்பில் நடைபெற்றநிகழ்வொன்றில்நல்லிணக்கம் சார்ந்த விடயங்களைப் பாடவிதானத்தில் உள்ளடக்க வேண்டுமெனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருந்தார். இது தொடர்பில் தமது தலைமையில் இயங்கும் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலகம், கல்விஅமைச்சுடன்பேச்சுநடத்துமெனவும் தெரிவித்திருந்தார்.

எப்போது பேச்சு நடத்தப்படும், பேச்சு நடத்தப்பட்டதன் அடிப்படையில்தான் புதிய கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்படப்போகின்றதா என்பன பற்றி ஒரு அசுமாத்தத்தையும் காணவில்லை. எது எவ்வாறாயினும். ஆசிய பசுபிக் பிராந்திய யுனெஸ்கோ முன்னெடுத்த செயற்பாடுகளையும் இவ்விடயம் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளலாம். முதற்கட்டமாக அங்கு பயிற்றுவிக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் வளவாளர்களை கல்வியியலாளர்களை ஒன்றுதிரட்டி நிலைபேறான அபிவிருத்திக்கான வழிவகைகளைப் பாடவிதானத்தில் சேர்ப்பது தொடர்பாக ஆலோசிக்கவும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கூட்டமைப்பு மறுபரிசீலனை செய்யவேண்டிய நேரம் இது

இறுதிப் போரின்போது வன்னியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில்அரசு வழங்கிய வாக்குறுதியில் இருந்து அது விலகிச் செல்வது உறுதியாகிவிட்டது.

போர்க் குற்றங்கள் என்ற வகைக்குள் அடக்கப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பததற்குக் கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொழும்பு இணங்கியிருந்தது. அது தொடர்பில் 2015ஆம் ஆண்டு சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு கொழும்பு இணை அனுசரணையும் வழங்கியிருந்தது. அது மகிந்தவை ஆட்சியிலிருந்து அகற்றிய சூட்டோடு நடந்து முடிந்த விடயம்.

ஆனால், அதன் பின்னர் வந்த காலங்களில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்குத் தான் ஒருபோதும் இணங்கிப் போக மாட்டார் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்து வந்தார். ஆனால், தெற்கில் உள்ள சிங்கள அடிப்படைவாதிகளையும், மகிந்ததரப்பினரையும் சமாளிப்பதற்காகவே அவர் அப்படிச் சொல்கிறார், ஐ.நாவில் இணங்கிக்கொண்ட விடயத்தில் இருந்து அவரால் ஒருபோதும் விலகிச் செல்ல முடியாது என்று ஒருசாரார் அப்போது சமாதானம் சொன்னார்கள். அவர்களில் தமிழ் அரசியல்வாதிகளும் உள்ளடக்கம்.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வு ஜெனிவாவில் ஆரம்பமாகியிருக்கும் நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்திருக்கிறார். வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தைத் தான் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இருவாரங்களிலேயே, கலப்பு நீதிமன்றத்தைத் தான் நிராகரித்துவிட்டார் என்பதையும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதன் பொருள், தீர்மானம் வந்தவுடனேயே நான் நிராகரித்துவிட்டேன் இப்போது என்ன அதைப் பற்றிய கேள்வி என்பதுதான்.

கலப்பு நீதிமன்றத்தை ஏற்கப்போவதில்லை என்று தலைமை அமைச்சர் நேற்று வரையில் வெளிப்படையாக அறிவிக்காத போதிலும், அரச தலைவரின் கருத்துக்கு இசைவான போக்கையே அவர் வெளிப்படுத்தி வந்தார். ஆனால், நேற்று சட்டத்தரணிகள் கூட்டம் ஒன்றில் பேசும்போது ''கலப்பு நீதிமன்றங்கள் இலங்கை அரசியலில் பொருத்தப்பாடற்றவை'' என்று தெரிவித்திருக்கிறார். கலப்பு நீதிமன்றத்திற்குப் பதிலாக வேறு மார்க்கங்களை ஆராயவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இரு தலைவர்களுமே திட்டவட்டமாகக் கலப்பு நீதிமன்றத்தை நிராகரித்திருக்கிறார்கள் என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது. இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் ஐ.நா மனித உரிமை கள் ஆணையாளர் தனது முழுமையான அறிக்கையை முன்வைத்துள்ளார். அதன் மீதான விவாதம், மார்ச் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இரு தலைவர்களுமே கலப்பு நீதிமன்றத்தை நிராகரித்திருப்பது தமிழ்த் தலைவர்களுக்கு, குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பலத்த அரசியல் பின்னடைவே!

தமிழர்கள் பன்னாட்டு குற்றவியல் நீதி விசாரணை ஒன்றை எதிர்பார்த்துக்கொண்டும், அதற்கு வலியுறுத்திக்கொண்டும் இருந்த போது கலப்பு நீதிமன்றம் ஒன்றை ஐ.நா. தீர்மானத்தின் ஊடாக ஏற்றுக்கொண்டிருந்தது கூட்டமைப்பு. வெளிநாட்டு நீதிபதிகளின் ஊடாக கிட்டத்தட்ட பன்னாட்டு விசாரணைக்கு நிகரான ஒரு விசாரணை நடத்தப்படும் என்றே கூட்டமைப்பு எதிர்பார்த்து வந்தது. இப்போது அது இல்லையென்றாகிவிட்டது. ஜெனிவாவில் இலங்கைக்கு, இன்னமும் இரண்டு வருடகால அவகாசம் வழங்கினாலும்கூட, கலப்பு நீதிமன்றம் உருவாகப்போவதில்லை என்பது தெளிவாகிவிட்டது.

முதலில் ஒப்புக்கொண்டுவிட்டு அதிலிருந்து பின்னர் விலகி ஓடுவது சிங்களத் தலைமைகளுக்குப் புதிதல்ல என்பது தமிழர்களுக்குப் பாலபாடம் என்பதால், இந்த விடயம் அவர்களுக்கு ஆச்சரியம் தரப்போவதில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தான்செல்லும் அரசியல் பாதை சரியானதுதானா என்று மறுபரிசீலனை செய்யவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதையே இது காட்டி நிற்கிறது.

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுத் தடையை தாண்டுவோம்!

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் பிரதீபா மகாநாமஹேவ இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்துத்தெரிவித்த கருத்துக்களது தொகுப்பு

சிங்கள மூலம்
லங்காதீப
தமிழில் வீ.எஸ்.ரீ



தற்போது ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 22ஆம்திகதி முன்வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் சபை ஆணையாளர் செயித் ராத் அல் ஹுசைனால் முன்வைக்கப்படும் இந்த அறிக்கை குறித்த விவாதம் அடுத்த நாள் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இலங்கையில் போர் இடம்பெற்ற வேளையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கை 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதியன்று ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அதன் தலைவர் ஹுசைனால் முன்வைக்கப்பட விருந்த போதிலும், இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஆறுமாத கால அவகாசம் வழங்கி அந்த ஆண்டின் செப்ரெம்பர் மாதத்திலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதையடுத்து ஐ.நா. நிபுணர்கள் குழுவின் உதவியுடன் குறித்த யோசனைகள் தொடர்பாக தேசிய கட்டமைப்பொன்றை நடைமுறைப்படுத்தத் தாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவை மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றன. நாடொன்றின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும் அதற்கென உதவுவதும் மனித உரிமைகள் சபையின் பொறுப்பாகும். ஒருநாட்டில் மனித உரிமை மீறல்கள் பாரதூரமான விதத்தில் இடம்பெறுமானால், தீர்மானமொன்றை மேற்கொண்டு அவை தொடர்பான, தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கவும் சபையால் முடியும். அதே வேளை மனித உரிமைகள் சபையால் ஒரு நாட்டின் மீது தடைவிதிக்கவோ தண்டனை வழங்கவோ இயலாது. ஆரம்ப விசாரணைகளை மட்டுமே மனித உரிமைகள் சபை மேற்கொள்ளும். அத்தகைய விசாரணை அறிக்கை ஐ.நாவின் பாதுகாப்புச் சபையிடமே கையளிக்கப்படும்.

### அரசுக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அங்கம் வகிக்கும் வாய்ப்பு

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மற்றொரு விசேட அம்சம், அரசுக்கள் போன்றே அரச சார்பற்ற அமைப்புக்களும் அதில் அங்கம்வகிப்பதாகும். ஒருநாட்டின் வெளியுறவு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்ட நாட்டின் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை, பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அவற்றுக்கு ஆதரவான தரப்புக்கள் மற்றொரு தரப்பாகச் செயற்படுவர். இதன் மூலம் ஒரு நாட்டின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் விரிவான விதத்தில் விவாதிக்கப்படும். அந்த வகையில் ஒரு நாடு தன் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளது வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டியிருக்கும். அந்த வகையில் இலங்கை அரசுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், குறித்த பிரேரணையை அமெரிக்கா முன்னின்று சமர்ப்பித்தமையால், தற்போதைய 34 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விடயம் முக்கியத்துவம் பெறும். போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்ய நீதிமன்றமொன்றை நிறுவும் விடயம் தேசிய மற்றும் பன்னாட்டு ரீதியில் முக்கிய விடயமாக ஆகியுள்ளது. அதுமட்டுமன்றி பன்னாட்டு ரீதியில் இலங்கை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றும் இருப்பது முக்கியத்துவம்பெறுகிறது. இதுவரை வெளியிடப்படாத அந்த அறிக்கையைப் பன்னாட்டுத் தரப்புக்கள் அவசியமானவேளையில் இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்த இடமுண்டு. 2014 ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகளைப்பாதுகாப்பதற்குப்பதிலாக நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தும் விடயத்துக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

அரசின் தலைமைத்துவ மாற்றத்தையடுத்து இலங்கைக்கான உதவிகள் பெருமளவில் கிட்ட ஆரம்பித்தன. உலக அரசியல் மாற்றம் என்ற வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவர முன்னின்று செயற்பட்ட அமெரிக்க அரசின் இருமுக்கிய அதிகாரிகள் அமெரிக்காவின் புதிய ஜனா



திபதியால் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர். அதேபோன்று தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவு, கிலாரி கிளிங்டன் ஊடாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் விடுக்கப்பட்ட சவால்கள் குறைவடைந்தமை, புதிய அமெரிக்க ஜனாதிபதியின் நிலைப்பாடு என்பவற்றால் இலங்கையில் பிரச்சினைகள் சுமுக நிலைக்குத் திரும்பி விட்டதாகப் பலர் எண்ணினர். ஆயினும்அதுமுற்றுமுழுதானஉண்மை அல்ல.

> இலங்கையில் போர் இடம்பெற்ற வேளையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கை 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதியன்று ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அதன் தலைவர் ஹீசைனால் முன்வைக் கப்பட விருந்தபோதிலும், இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஆறுமாத கால அவகாசம் வழங்கி அந்த ஆண்டின் செப்ரெம்பர் மாதத் திலேயே ஐ.நா.மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது

**தொடரும் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்புக்களது அழுத்தங்கள்**

பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்புக்களால் இலங்கைக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள் குறைவடைந்ததாக இல்லை. இந்த 34 ஆவதுகூட்டத்தொடரிலும் இலங்கை தொடர்பாக முக்கிய மூன்று விடயங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடும். இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளபொது மக்களது காணிகளை மீண்டும் அவர்களிடம் கையளிப்பது, 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை நீக்குதல், போரின்போதும் போர்முடிவடைந்த பின்னரும் கூட தமிழ் மக்களது உரிமைகள் இராணுவத்தினரால் மீறப்படுவதான குற்றச்சாட்டு என்பவையே அந்த மூன்று முக்கிய விடயங்களுமாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் பன்னாட்டு ரீதியில் இலங்கை மீது மென்போக்கு அணுகுமுறை கைக்கொள்ளப்படுமென எண்ண இயலாது. இதனை உணர்ந்துராஜதந்திர ரீதியில் தவறுகளைத் திருத்திக் கொள்ள அரசு நடவடிக்கை மேற்கொண்டாக வேண்டும். கடந்தகாலத்தில் மனித உரிமை மீறல்களைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன, இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம், ஒற்றுமை என்பவை தொடர்பாக அரசு பல செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தது. ஆயினும் 2015 ஆம் ஆண்டு முதல் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் பன்னாட்டுநீதிபதிகளை அனுமதிக்கப் போவதில்லை என்ற கோசமே அரச தரப்பிலிருந்து உரத்து ஒலித்து வந்துள்ளது; ஒலித்து வருகிறது. அரச தரப்பைச் சேர்ந்தவர்கள் இதனை மந்திர உச்சாடனமாகத் தெரிவித்து வருகின்றனர். ஆகக் குறைந்தது உள்நாட்டு நீதிபதிகளை உள்ளடக்கியாவது விசாரணை ஆணைக் குழுவொன்றை நியமிக்க இயலாது போனது ஏன்? உலகில் அதிக அளவிலான விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்த நாடு இலங்கையே என எண்ணத்தக்க நிலையில், இது விடயத்தில் மற்றுமொரு விசாரணை ஆணைக் குழுவை நியமித்து அரசு தனது விசுவாசத்தன்மையைவெளிப் படுத்தியிருக்கலாமே?

ஆனால் அதிகாரத் தரப்பினர் அத்தகைய செயற்பாட்டைத் தவிர்த்து மேற்குலக நாடுகளது அரசியல் விருப்பை விளம்பரப்படுத்துவதில் அக்கறை காட்டுகின்றனர். அதற்காக மேற்குலக நாடுகள் இது விடயத்தில் வாளாவிருந்து விடப்போவதில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் இலங்கை அரசின் செயற்பாடுகள் குறித்து திருப்தியடைவதாகக் கூறினாலும், மனித உரிமைகள் தொடர்பான அரசின் செயற்பாடுவேகமற்றுக்காணப்படுவதாகக் குற்றம்சாட்டியுள்ளார். எனவேதமிழ் மக்களது நிலங்களை அவர்களிடம் திருப்பிக் கையளித்தல், பயங்கரவாதத்தடைச்சட்டத்தைநீக்குதல்போன்றவற்றுக்கான நடவடிக்கைகளை அரசு ஊக்கம் காட்டிச் செயற்படுத்த வேண்டும்.

**கலப்பு நீதிமன்ற விசாரணை யோசனை ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஒன்றே**

போர்க்குற்றங்களுக்கான விசாரணைக்கு கலப்பு நீதிமன்றம் குறித்த அமெரிக்காவின் யோசனையை நாம் விரும்பாவிட்டால் இடையிட்ட விதத்திலான யோசனையொன்றை முன்வைத்தல் அவசியம். அது அவ்வளவுஇலேசானதொன்றல்ல. ஏனெனில் கலப்பு நீதிமன்ற விசாரணை யோசனை ஏற்கனவே நிறை வேற்றப்பட்டு விட்டமையாகும். அவ்வாறானால், அதில் திருத்தம் மேற்கொள்ளும் யோசனையொன்றை முன்வைத்தல் வேண்டும். ஆனால் அத்தகைய நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படுவதாகத் தோன்றவில்லை. சகல தரப்பினருமே அடுத்த தேர்தலை இலக்குவைத்தே செயற்பட முனைகின்றனர். நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை ஒழித்து விடுவது தொடர்பான விடயத்தில் அரச தரப்பினர் மத்தியிலேயே பல தரப்பட்ட சாதக பாதகமான கருத்து நிலைப்பாடுகள் நிலவுகின்றன. இரண்டாண்டுகள்ஆட்சிமுடிவடைந்த நிலையில் புதிய அரசமைப்பு உருவாக்கம், மக்கள் கருத்துக் கணிப்பு போன்ற முக்கிய விடயங்களில் அரசுத்தலைவர் அச்சமின்றி உறுதியான தமது நிலைப்பாட்டை, அரசின் கொள்கை நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டியது அவசியமாகும்.

லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விடயத்தில் நாம் பின்னடைவு கண்டுள்ளோம். இது எதிர்பாராத ஒன்றான போதிலும், அரசுதான் மாறியுள்ளதே தவிர நிலைமை மாறவில்லையே என பன்னாட்டுத் தரப்புக்கள் விமர்சிக்க நாம் இடம் அளித்தலாகாது. மக்களது பங்களிப்புடன் கூடிய ஆட்சியே நல்லாட்சி எனக் கொள்ளப்படுகின்ற போதிலும், எமது நாட்டில் தேர்தல்களின் போது மட்டுமே மக்களது பங்களிப்பு இடம்பெறுகிறது எனக் கருத வேண்டியுள்ளது. இவற்றின் மத்தியில் சமஷ்டிமுறை, கூட்டாட்சி என்ற தலைப்புக்களில் கருத்துக்கள் ஒருபுறம்வெளிப்படுத்தப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி மகிந்த எந்தவொரு வெளிநாட்டவரும் இலங்கையில் எந்தவொரு விசாரணை மேற்கொள்ளவும் தமது அரசு அனுமதிக்காதென திடமாகக் கூறி வந்தார். ஆட்சி மாற்றமொன்றுக்கான பன்னாடுகளது ஆதரவு கிட்டியமைக்கு இதுவே காரணமாயிற்று. புதிய அரசு புரிந்துணர்வுடனும் சகல தரப்புகளுடன் இணக்கப்பாட்டுடனும் செயற்படப்போவதாக உறுதியளித்தது. அந்த வகையில் இதுவரை நல்லாட்சி அரசால்சாதகமானசிலமுயற்சிகள்முன்னெடுக்கப்பட்டுள்ளமை உண்மையே. ஆயினும் பன்னாட்டுத் தரப்பு நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் குறித்து திருப்தி தெரிவித்ததில்லை. ஆனால் தற்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தற்போதைய கூட்டத் தொடரில் இலங்கை அரசு பன்னாட்டு முத்தரப்புக்களது திருப்தியையும் ஆதரவையும் பெறத் தக்கவிதத்தில் செயற்படத் தக்க வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதனை அரசு உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுமா?



# வாசகர் திருமுகம்

## இத்தகையோர் திருந்துவது எப்போது?

அரசபணி புரியும் பெண்மணியான எனக்கு, கடந்த 28.02.2017 ஆம் திகதியன்று முற்பகல் 9 மணியளவில் அளவெட்டி-யாழ்ப்பாணம் 768 ஆம் இலக்க வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்ஸொன்றில் பயணித்த வேளை ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அளவெட்டியிலிருந்து குறித்த மினிபஸ் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட போது பஸ்ஸில் பயணிகள் சிலரே இருந்தனர். போதிய அளவு ஆசனங்கள் வெறுமையாக இருந்தன. பஸ்புறப்பட்டு சில நிமிடங்களில் ஓரளவு வயது முதிர்ந்த பெண்மணியொருவரும் சுமார் 80 வயது மதிக்கத்தக்க முதியவரொருவரும் பஸ்ஸை மறித்ததும் பஸ்சாரதி அவர்களை ஏற்றத் தயாராவது போன்று வேகத்தைத் தணித்தார். குறித்த பெண்மணி ஏறத் தயாரான போது சாரதி திடீரென பஸ்ஸைக் கிளப்பியதால் அந்தப் பெண்மணி நிலைதடுமாறி சிரமப்பட்டார். அவர்களை ஏற்றாமலே பஸ் பயணத்தைத் தொடர்ந்தது. இதைக்கண்டு ஆத்திரமடைந்த நான் எதற்காக அவர்களை ஏற்றாமல் வந்தீர்கள் என பஸ் நடத்துநரிடம் வினவினேன். "அந்த வயதான ஐயாவை ஏற்றி இறக்க விடிந்து விடும்" என்று அலட்சியமாகப் பதிலளித்தார் அந்த பஸ்ஸின் நடத்துநர். நானோ "அவர்கள் என்ன அவசர அலுவலாகப் பயணம் மேற்கொள்ள முயன்றார்களோ தெரியாது. பாவம் அவர்கள், நீங்கள் அவர்களை ஏற்றி வந்திருக்க வேண்டும்" எனக் கூற "அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. நாங்கள் சரியான நேரத்துள் போய்ச் சேர வேண்டும்" எனப் பதிலளித்தார் அந்த நடத்துநர். தொடர்ந்த பயணத்தின்போது சுன்னாகத்தில் பயணிகள் ஏறிய பின்னரும் அனாவசியமாக மூன்று நிமிடங்கள் வரையிலும், மருதனார் மடத்தில் பயணிகளை எதிர்பார்த்து மேலதிகமாக ஐந்து நிமிடங்கள் வரையிலும் குறித்த பஸ் நிறுத்தி வைக்கப்பட்ட பின்னரே பயணத்தைத் தொடர்ந்தது. வசதி குறைந்தவர்களே இத்தகைய பொதுப்போக்குவரத்துச் சேவைகளை நாடுகின்றனர். வயதானவர்கள் என்று கூடப் பார்க்காது, மனிதாபிமானம் அற்ற விதத்தில் குறித்த மினிபஸ் சாரதியும் நடத்துநரும் குறித்த அந்த இரு பயணிகள் விடயத்தில் நடந்து கொண்டமை கண்டிக்கத்தக்கது. பொறுமையும், பொது மக்கள் குறித்து கருணை உணர்வு அற்றவர்களுமான இத்தகையோர் பொது மக்களுக்கான சேவை வழங்கலில் ஈடுபடத் தகுதியற்றவர்கள். தனியார் பஸ் போக்குவரத்துத் துறையைக் கண்காணித்து நெறிப்படுத்த அதிகாரம் உள்ள தரப்புக்கள் இது போன்ற சம்பவங்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. செய்வார்களா?

*நா.ரா, அளவெட்டி*

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** திகைப்பு தந்த பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் போட்டியில் வெற்றிக் காண்பர்.

**இடபம்:** கடந்த கால சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவை. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர்.

**மிதுனம்:** குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** பேச்சில் வசீகரம் உண்டாகும். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். பெண்கள் குடும்ப வளர்ச்சிக் கண்டு மகிழ்ச்சி கொள்வர்.

**சிங்கம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேற தாமதம் உண்டாகும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கன்னி:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். நல்லோரின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பெண்களுக்கு குடும்பத் தேவை தாராள செலவில் பூர்த்தியாகும்.

**துலாம்:** உற்சாக மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர்.

**விருச்சிகம்:** சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.

**தனுசு:** தொழில், வியாபாரத்தில் குளறுபடி உருவாகி மறையும். லாபம் சீராக இருக்கும். பெண்கள் சிக்கனம் மூலம், சேமிக்க முயல்வர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**மகரம்:** திட்டமிட்டு செயற்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** குடும்பநலனில் அக்கறை கொள்வீர்கள். உழைப்பின் மூலம், தொழிலில் ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், கணவரின் குறிப்பறிந்து நடப்பர்.

**மீனம்:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. லாபம் சீராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செலவழிப்பர்.



இவர்கள் இருவரும் வளர்ந்த பிறகு விளையாடுவது தான் ஏறுதழுவல்!

# நடிகர் கமல்ஹாசன் எலிசபெத் ராணியுடன் சந்திப்பு



லண்டனில் நடைபெற்ற இந்தியா-இங்கிலாந்து இடையிலான கலாசார விழாவில், இந்தியா சார்பில் பங்கேற்ற நடிகர் கமல்ஹாசன், ராணி எலிசபெத்தைச் சந்தித்தார்.

இந்தியா- இங்கிலாந்து இடையேயான கலாசார ஆண்டு வரவேற்பு விழா லண்டனில் உள்ள பக்கிங்காம் அரண்மனையில் அண்மையில் நடந்தது. இந்த விழாவை இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் தொடக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் இந்தியா சார்பில் நடிகர் கமல்ஹாசன் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டார். விழாவில் அவர் ராணி எலிசபெத்தைச் சந்தித்தார். அப்போது இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர்.

சரித்திர கதையம்சத்தைக் கொண்ட கமல்ஹாசனின் லட்சியப் படமான மருதநாயகம் படப்பிடிப்பு 1997ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்தபோது, அதனை ராணி எலிசபெத் தொடக்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. போர்க் காட்சிகளுடன் இதன் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்த நிலையில், நிதி நெருக்கடியால் பட வேலைகள் திடீரென்று நிறுத்தப்பட்டன.

மருதநாயகத்தைத் தொடர்ந்து படமாக்கும் முயற்சியில் கமல்ஹாசன் ஈடுபட்டு வருகிறார். ராணி எலிசபெத்தைச் சந்தித்தபோது மருதநாயகம் படப்பிடிப்பில் கலந்து கொண்டதை கமல்ஹாசன் நினைவூட்டினார். இந்த நிகழ்ச்சியில் இங்கிலாந்து இளவரசர்கள் உள்ளிட்ட அரச குடும்பத்தினர் பலர் கலந்துகொண்டனர்.

மேலும் இந்தியா சார்பில் மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, சுரேஷ் கோபி, கிரிக்கெட் பிரபலம் கபில் தேவ், பாடகரும் நடிகருமான குர்தாஸ் மன், ஆடை வடிவமைப்பாளர் மணீஷ் ஆரோரா, மணீஷ் மல்கோத்ரா மற்றும் அனோஷ் காங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து கமல்ஹாசன் தனது கீச்சகத்தில் (ருவிற்றர்) பதிவிட்டுள்ளதாவது:

கலாசார விழாவில் ராணி எலிசபெத்தைச் சந்தித்தேன். அவர் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு இருக்கிறார். மன்னர் எடின்பரோவும் ஆரோக்கியமாக இருக்கிறார். ராணி எலிசபெத் இந்தியாவுக்கு வந்தபோது எனது படப்பிடிப்பு அரங்குக்கு வந்திருந்தார். அது குறித்து அவரிடம் நான் நினைவுபடுத்தினேன். ராணி எலிசபெத் தனது வாழ்நாளில் கலந்து கொண்ட ஒரே படப்பிடிப்பு என்னுடைய படப்பிடிப்புதான். கூட்டம் அதிகமாக இருந்ததால் எங்கள் உரையாடல் சிறியதாகவே இருந்தது. இவ்வாறு கமல்ஹாசன் பதிவிட்டுள்ளார்.

பதவிப் பிரமாணத்துக்கு ஆளுநரை வர வைக்க 130 எம்எல்ஏக்களும் டெல்லி பயணம்: செய்தி



இந்தப் பொறுப்பு உணர்வு காவிரி நீர் வாங்கி தர்ரதில இருந்திருந்தா அவ்வளவு விவசாயிகள் ஏன்டா செத்துருக்க போறாங்க?



ஓபிஎஸ்: நான் பொட்டு வெச்சுகிட்டு மிக்சர் சாப்பிட்டிடு... சசிகலா "பன்னீரு"ன்னு கூப்பிட்டவுடன் ஓடி போயி குனிஞ்சு சொல்லுங்க சின்னம்மான்னு சொல்லுவேன்னு நினைச்சீங்களாடா....
பன்னீரு டா...

சில நேரங்களில் வாழ்வில் தேவையென எதிர்பார்ப்பவை எல்லாம் தேவையில்லாத நேரத்தில்தான் கிடைக்கிறது....!

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | | 6 | | | 8 |
| 2 | | 1 | | | 7 | | | |
| | 7 | | | | | 4 | | |
| | 3 | | 6 | | 8 | | 5 | |
| | | | 5 | 3 | 9 | | | |
| | | 9 | | 7 | | | | |
| 3 | | | | | | | 6 | |
| | | | | | | 5 | 8 | 9 |
| | 6 | | | 5 | | 7 | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 6 | 9 | 3 | 2 | 7 | 1 |
| 3 | 9 | 1 | 8 | 2 | 7 | 4 | 5 | 6 |
| 2 | 7 | 6 | 4 | 5 | 1 | 8 | 3 | 9 |
| 1 | 4 | 2 | 9 | 3 | 8 | 5 | 6 | 7 |
| 7 | 3 | 8 | 5 | 1 | 6 | 9 | 4 | 2 |
| 6 | 5 | 9 | 2 | 7 | 4 | 1 | 8 | 3 |
| 9 | 2 | 4 | 7 | 6 | 5 | 3 | 1 | 8 |
| 8 | 1 | 7 | 3 | 4 | 9 | 6 | 2 | 5 |
| 5 | 6 | 3 | 1 | 8 | 2 | 7 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# மன அழுத்தமும்... தடுக்கும் வழிமுறைகளும்

ஒவ்வொரு பெண்களுக்கும் அழுத்தத்தை பொறுத்துக் கொள்ளும் தன்மை வெவ்வேறு அளவில் உள்ளது. சிலருக்கு சிறு எரிச்சல் காரணமாக மன அழுத்தம் குறைவாகவும், சிலருக்கு பெரிய பிரச்சினைகள் காரணமாக அதிக மன அழுத்தமும், சிலர் மன அழுத்தத்தை உணராதவர்களாகவும் இருக்கிறார்கள்.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், என்னென்ன பிரச்சினை களுக்கு எவ்வாறு சகித்து கொண்டீர்கள், அந்த பிரச்சினைகளினால் உங்களுக்கு ஏற்பட்ட வருத்தம் எவ்வளவு கடினமான அனுபவங்கள், அதை எப்படி எதிர் கொண்டீர்கள்? இவை அனைத்தையும் ஒதுக்கித்தள்ளுங்கள். இவை அனைத்திற்கும் ஒரு தீர்வு உள்ளது. வாழ்வின் அனைத்து ஆதாரங்களையும் இயங்க வைக்க பெண்களால் முடியும்.

முகத்தில் முடி, அடர்த்தி குறைவான முடி, ஒழுங்கற்ற மாதவிடாய், மாதவிடாய் தள்ளிப் போகுதல், வராமல் இருத்தல், உடல் வலி, எடை கூடுதல், தோல் வறண்டு காணப்படுதல் இவை போன்ற அறிகுறிகளுடன் ஒவ்வொரு நாளும் நிறைய பெண்களை சந்திக்க முடிகிறது. ஹார்மோன் பாதிப்பு, குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி, தூக்ககோளாறு, எடை அதிகமாவது போன்ற பிரச்சினைகள் மன அழுத்தத்தை கொடுக்கிறது. உணர்வு நீக்கம் பெறுதல், உடற்பயிற்சி வகுப்பில் சேர்தல் (வாரத்திற்கு 5 மணி நேரம்)

உடலில் சிறு பாதிப்பு என்றாலும் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். சிறிய பிரச்சினை தானே என்று அலட்சியம் காட்ட வேண்டாம்.

தினமும் 4 லிற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். உணவில் கார்போஹைடிரேட் அளவைக் குறைக்க வேண்டும்.

குறைந்தது 78 மணி நேரம் தூங்குதல். சமூக வலைதளங்களில் செலவிடும் நேரத்தைக் குறைத்தல். இவை அனைத்துப் பெண்களுக்கும் சுகாதார திறனை அடைவதற்கும் மற்றும் ஒரு அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கும் ஒரு நம்பிக்கையைத் தரும். பெண்கள் அனைவரும் தங்கள் வாழ்வை மன அழுத்தத்திடம் விட்டுக் கொடுக்க வேண்டாம்




# வரலாற்றில் இன்றைய தினம்

1351-சியாமின் அரசரானார் ராமாதிபோதி

1665-ஆங்கிலேய அரசர் இரண்டாம் சாள்ஸினால் நெதர்லாந்து மீது போர்ப்பிரகடனம் செய்யப்பட்டது

1681-இரண்டாவது சாள்ஸால், வில்லியம் பென்னுக்கு ஒரு பகுதி நிலம் சட்டபூர்வமாக வழங்கப்பட்டது. பின்னாளில் இது பெனிசில்வேனியா ஆகியது.

1882- பிரித்தானியாவின் முதலாவது மின்சார றாம் வண்டி கிழக்கு லண்டனில் ஓடவிடப்பட்டது.

1908-கொலின்வூட் பாடசாலை தீ விபத்தில் 174 பேர் உயிரிழந்தனர்.

1962- கலோடியன் விமான சேவை விமானம் டி.சி 7 புறப்பட்டு சில நிமிடங்களில் விபத்துக்குள்ளாகி 111 பேர் உயிரிழந்தனர்.

1966- டோக்கியோ பன்னாட்டு விமான நிலையத்தில் தரையிறங்கும் வேளையில் கனடிய பசுபிக் விமான சேவை விமானம் விபத்துக்குள்ளாகி 64பேர் உயிரிழந்தனர்.

1970-பிரான்சின் நீர்மூழ்கிக் கப்பல் நீருக்கடியில் வெடித்ததில் 57 மாலுமிகள் உயிரிழந்தனர்.

1980-சிம்பாப்வேயின் தேசியத் தலைவர் றொபேட் முகாபே தேர்தலில் பெரு வெற்றிபெற்று அந்த நாட்டின் முதல் கறுப்பின பிரதமரானார்.

1986-சோவியத்தின் வெகா-1 விண்கலம் ஹேய்லிஸ் வால் நட்சத்திரத்தின் படங்களை அனுப்பத் தொடங்கியது.

1988-இந்திய அமைதிப்படையை வெளியேறக் கோரி தென்னிலங்கையில் பல்கலைக் கழக மாணவர் பகிஷ்கரிப்புத் தொடர்கிறது.

1995-பேச்சுக்கள் தோல்வி கண்டால் போருக்குத் தயாராக வேண்டும் என இராணுவத்தைப் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த உஷார்படுத்துகின்றார்.

1995-பூநகரி முகாம் தவிர்ந்த ஏனைய பிரச்சினைகளைப் பரிசீலிக்க அரசு தயார் என மூத்த அதிகாரி தெரிவிப்பு.

1996-அமெரிக்க விஸ்கொன்சில் ரயில் தடம் புரண்டு அதில் சிக்கிய 2300 பேரை அவசரமாக மீட்க 16 நாள்கள் ஆகின.

2002- ஆப்பானிஸ்தான் ஷாகு கொட் பள்ளத்தாக்கிலிருந்து அல்கொய்தா போராளிகளை துரத்தும் நடவடிக்கையின்போது 7 அமெரிக்க சிறப்பு நடவடிக்கைப் படையினரும் 200 அல் கொய்தா போராளிகளும் உயிரிழந்தனர்.

2002-ஒப்பந்தம் பற்றி நாடாளுமன்றில் விளக்கம்; பிளவுபட்டுள்ள நாட்டை ஐக்கியப்படுத்த வாருங்கள். நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் அழைப்பு.

2002-எல்லா அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்கும் அதிகாரம் தம்மிடமுள்ளதாகக் கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.

2007-வவுனியாவில் 2 பேர் சுட்டுக்கொலை

2007-வல்வையில் இளம் தம்பதிகள் மீது சூடு. மனைவி சாவு, கணவன் வைத்தியசாலையில்.

2008 -வான் பாதுகாப்பு வலு இலங்கையில் மேலும் அதிகரிக்க இந்தியா உதவும் எனத் தகவல்.

2008 - தட்சணாமருதமடு கிளைமோர் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உயிரிழப்பு.

2015-எரிவாயு கசிவினால் உக்ரைனில் 34 வரையான சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

2016-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் தேசியக் கொடி ஏற்றினார் விக்கி.

2016 சித்திரைப் புதுவருடத்துக்கு முன் சொந்த இடம் செல்ல வேண்டுமென வலியுறுத்தி வலி. வடக்கு மக்கள் உணவு தவிர்ப்பு.

## நாளை

மாசி-21

ஞாயிற்றுக்கிழமை -05.03.2017

திதி: அட்டமி பி.இ. 06.07

நட்சத்திரம்: ரோகிணி மு.இ.11.04

சுபநேரம்:09.26-10.56 வரை

ராகுகாலம்:04.56-06.26 வரை

2017

# மார்ச் மாதப் பலன்கள்




## கடகம்

புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்

கடகராசிநேயர்களே! எந்தவொரு செயலிலும் 'துணிந்த பின் துயரம் இல்லை' என்று கூறுவதற்கேற்ப நண்டு பிடி போட்டு செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு சனிபகவான் 6இல் சஞ்சரிப்பதால் தொழில் வியாபாரத்தில் இலாபகரமான பலன்களை அடைவீர்கள் என்றாலும் மாத முற்பாதியில் சூரியன் 8இல் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக்கொள்வது நல்லது. 2இல் ராகு இருப்பதால் மற்றவர்களின் விடயத்தில் தலையிடாமல் இருப்பது உத்தமம். எதிர்பாராத திடீர் தன வரவுகள் உங்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை சிறப்பாக இருக்கும் என்றாலும் நெருங்கியவர்களிடையே விட்டுக் கொடுத்து நடந்துகொள்வது மிகவும் நல்லது. உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வுகள் கிடைக் கப்பெறும். பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் அனுகூலப்பலன்களும் உண்டாகும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு இலாபம் அதிகரிக்கும். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தி செய்ய நினைக்கும் காரியங்களில் கவனமாக இருப்பது நல்லது.

பரிகாரம்:

சிவ வழிபாடு, அம்மன் வழிபாடு மேற்கொள்வது உத்தமம்.



# இது புதுசு



ஆண்களுக்கு அதி உயர்ந்த தரத்திலான லெதர் அமைந்த கை மணிக்கூடுகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இந்தவகையான லெதர், பாவனைக்காலம் கூடியதாகவும் இருக்கும். இதன் விலை 2 ஆயிரத்து 950 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

பிராந்திய பெறுகைகள்குழு தகுதியான தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் வாகன வாடகைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை விவரம் | கேள்விப்பத்திர பணம் |
|---|---|---|
| RDHS/RC/VH/2017/01 | வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | 200 |

* ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 200/=

01) தலைவர் திணைக்கள பெறுகைக்குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணி மனை யாழ்ப்பாணம் பயணிகள் (8பயணிகள் பயணிப்பதற்கான) வான்களை வாடகைக்கு அமர்த்தும் முகமாக அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளை கோருகின்றார்.
02) தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 222 2278 / 4557. ext 20) பிராந்திய சுகாதார சேவை கள் திணைக்களம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 08.03.2017 இலிருந்து 17.03.2017 வரையிலான நாள்களில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளமுடியும்.
03) முழுமையாக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் 08.03.2017 இலிருந்து 17.03.2017 வரையிலான நாள்களில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை அலுவலக நாள்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.
4) கேள்வி ஆவணமானது கடித உறையில் இடப்பட்டு அதன் இடதுபக்க மூலையில் வான் வாடகைக்கு அமர்த்துதல் என எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடி யாகவோ அல்லது தபால் மூலமாகவோ பணிப்பாளர் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 20.03.2017 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். காலதாமதாக கிடைக்கப்பெறும் ஆவணங் கள் நிராகரிக்கப்படும். கேள்வி ஆவணங்கள் 20.03.2017 திகதி மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமுகமளிக்கலாம்.

வைத்திய கலாநிதி க. நந்தகுமாரன், தலைவர்
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி ரெட்ணம்மா சிவலிங்கம்



தோற்றம் . 06.09.1931
மறைவு . 02.03.2017

யாழ்.சரவணையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ரெட்ணம்மா சிவலிங்கம் 02.03.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும் இராஜட்டினம் (கனடா). காலஞ்சென்ற செல்வரெட்டினம். விஜய லெக்ஸ்மி (ராணி,கனடா),சிவச்சந்திரன் (கிளி).பாஸ்கரன்(சிறி).தவயோகநாதன் (நாதன் ,பிரான்ஸ்).இரவீந்திரராசன் (ராசன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற கனகம்மா, தியாகராசா, இரத்தினசபாபதி, மதியாபரணம், மங்கையர்க்கரசி(ராசாத்தி).பாலசுப்பிர மணியம் (தவம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராணி (மஞ்சு, கனடா),சித்திரா,சிவநாதன்(கனடா),அகிலாண்டேஸ்வரி,கௌரி (பிரான்ஸ்).உமா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வர்களான பொன்னுத்துரை, சரஸ்வதி,செல்லையா மற்றும் சறோயா தேவி, சிவபாக்கியம், சோதிமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கவிதா, ஜெயந்தன், பிரதீபன், நிரூபினி, சங்கீதா அருணன்,அனுஷா மயூரன், அருணன் தர்சினி, அனுசன்,சிவப்பிரியா லவதீபன், தீவ்வியா அருண்ராஜ், லக்ஸ்மணன்,மதுரா ராசன், சரவணன், காலஞ்சென்ற நித்தியா, பிரதீப், தர்சிகா, ரம்சிகா,சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்ஸ்மி, ஐஸ்வரியா,Abinay Arjun சஞ்சேய், அஞ்சலி, ஆதவன்,லதிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை கிழக்கு புன்னங்கன்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சி.சிவச்சந்திரன் (கிளி ,மகன்) 076 6752 038
சி.பாஸ்கரன் (சிறி,மகன்) 076 6653 832,
சி.ரவிந்திர தாசன் (ராசா ,மகன்) 076 6521 851
செ.அருணன் (பேரன்) 077 4440 199

தகவல்:
குடும்பத்தினர்.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications are invited by me up to 31st March, 2017 from suitably qualified persons for the following posts.

**1. WORKSHOP ENGINEER GRADE III (University of Jaffna - Kilinochchi Premises)**

**Qualifications:**

a) Should possess a B.Sc. Engineering Degree specializing in Mechanical/ Production Engineering from a recognized University/ HEI.

**OR**

b) Should possess a National Diploma in Technology specializing in Mechanical/ Production Engineering or equivalent qualification, with at least seven (07) years of experience in Mechanical workshop of a recognized establishment.

**NOTE:** The in-plant training period shall not be counted for the period of experience.

**Salary Scale**: U-EX 1(II)
-Rs. 35,556 – 3x801 – 37,959 (EB) 38,842; 12x883; – 49,438 p.m. as at 01.01.2017
-(Rs. 49,860 – 3x1,125 – 53,235 (EB) 54,475; 12x1,240; – 69,355 p.m. as at 01.01.2020)

**Selection** : By Structured Interview.

**2. CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

1.Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U-EX 1(II)
-Rs. 35,556 – 3x801 – 37,959 (EB) 38,842; 12x883; – 49,438 p.m. as at 01.01.2017
-(Rs. 49,860 – 3x1,125 – 53,235 (EB) 54,475; 12x1,240; – 69,355 p.m. as at 01.01.2020)

**Selection** : By Structured Interview.

**3. POST OF SUB WARDEN (FULL TIME) GRADE II –FEMALE(Vavuniya Campus)**

**Qualifications :**
A graduate of a recognized University. Preference will be given to those with experience in administration and management of hostel.

**Salary Scale** : U-MN 3 (II)
- Rs.30,380-18x438-38,264 p.m as at 01.01.2017
- (Rs.42,590-18x615-53,660 p.m as at 01.01.2020)

**Selection** : By Interview

**SERVICE CONDITION**

Full-time Sub-Wardens shall reside in the halls of residence to which they are appointed. A sum to be stipulated by the Higher Educational Institution will be recovered from their salaries to meet the cost of Board.

**4. PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**

**Qualifications:**
Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (IIIA)
- Rs. 22,571 – 7x213; 10x253 -26,592 p.m. as at 01.01.2017
- (Rs. 31,625 – 7x300; 10x355 -37,275 p.m. as at 01.01.2020)

**Selection**: By Interview

**5. NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**
(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA)
- Rs. 22,571 – 7x213; 10x253 -26,592 p.m. as at 01.01.2017
- (Rs. 31,625 – 7x300; 10x355 -37,275 p.m. as at 01.01.2020)

**Selection**: By Aptitude Test and Interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**
***Note:Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University **or** the forms available in the University website ( www.jfn.ac.lk ) annex with the Money Order/ Postal Order to the value of Rs.100/-. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please attach copies of relevant documents)**

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

REGISTRAR
03/03/2017

*மழைக்கு...*

காலை 8.30 மணிக்கு உரியவர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியைச் சுவீகரித்து இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

மக்களின் தொடர் அறவழிப் போராட்டத்தின் பயனாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரு மான இரா. சம்பந்தன் அரசுத் தலைவருடன் நடத்திய பேச்சின் பயனாக இந்தக் காணிகள் விடுவிக்கப்படும் என உறுதி வழங்கப்பட்டது. மூன்று படிநிலைகளில் காணிகளை விடுவிப்பதாக முல்லை த்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மாவட்டச் செயலாளருக்கு அறிவித்திருந்தார். இதற்கமைய இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு முதல் படிநிலையாக 7.75 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது.

எங்கள் காணிகளுக்குள் சென்ற பின்னரே அறவழிப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனக் காணி உரிமையாளர்கள் கூறியதற்கு அமைய போராட்டம் இன்று முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருமாத காலத் தொடர் அறவழிப் போராட்டத்துக்குப் பின் கடந்த முதலாம் திகதி பிலக்குடியிருப்புக் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (த-7)

*கலப்பு...*

வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இதற்குப் பதிலாகப் பன்னாட்டுச் சமூகத்தின் எதிர் பார்ப்பை எப்படி நிறைவேற்றமுடியும்? கலப்பு நீதிமன்றத்துக்குப் பதிலாக, சாத்தியமான மாற்று வழி பற்றிச் சிந்திக்கவேண்டும். சாத்தியமான மாற்று வழியைக் கண்டறிவதற்குச் சட்டநிபுணர்கள் அரசுக்கு உதவ வேண்டும் என்றார். இதேவேளை நேற்று முன்தினம் கொழும்பில் கருத்துத் தெரிவித்திருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்ப தற்காகத் தொடர்ச்சியாக முன் நிற்கின்றேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பன்னாட்டு நீதிபதிகளை நாட்டுக்குக் கொண்டு வருவதற்குத் தயாரில்லை. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட் டுக்களுக்கு அமைவாக பன்னாட்டு நீதிபதிகளை நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஆலோசனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தெரிவித்தார். அதற்கு ஒருபோதும் பன்னாட்டு நீதிபதிகளை நாட்டுக்கு வரவழைப்பதற்குத் தயாராக இல்லையென அவருக்கு 24 மணித்தியாலங்களுக்குள் பதிலளித்தேன் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி லக்ஷி நந்தகுமார்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லக்ஷி நந்தகுமார் நேற்று (03.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நந்தகுமாரின் (சின்னத்துரை சிற்பாலயம்) அன்புமனைவியும் கணேசலிங்கம் - மல்லிகாதேவி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் அன்ன தேவி தம்பதியரின் அன்புமருமகளும் யோதீஷன் (கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை), ரெஸ்மி ஆகியோரின் அன்புத் தாயும் சஜீத், திலக், டெய்சி ஆகியோரின் சகோதரியும் நிருஜா, சரண்ஜா, சுதர்சன், ஜெயக்குமார், ஜெயா, வரதா, கௌரி ஆகியோரின் மைத்துனியும் கிரிகரன், சயந்தன், சுரேன், தயாழினி ஆகியோரின் உடன்பிறவாத சகோதரியும் ஆவார்.

பிறப்பு 29.04.1984 — இறப்பு 03.03.2017

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.**
077 616 8761

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை தங்கேஸ்வரன் (கிளி)

(ஆவரங்கால் அம்பாள் மரக்காலை, அம்பாள் அரிவு காலை உரிமையாளர்)



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை தங்கேஸ்வரன் (கிளி) நேற்று (03.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் பிரசாத் (அம்பாள் மரக்காலை), சந்திரிக்கா, ஜன்சாத்(அம்பாள் மரக்காலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரதாசின் (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆவரங்கால்.**
077 257 7688

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அந்தோனிமுத்து அன்ரனிவின்சன்

### (துரைமணி)

(அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் பங்குத்தந்தை பளை, அவர்களின் தந்தை)



செம்பியன் பற்று வடக்கைப் பிறப்பிடமாகவும், அதே இடத்தையும், பருத்தித்துறை VM வீதியையும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து அன்ரனிவின்சன் (துரைமணி) நேற்று (03.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து - மதலேனம் தம்பதியரின் அன்புமகனும் தேவசகாயம் ஜெபமேரி பற்றிமாவின் (மணி) அன்புக் கணவரும் ஜேம்ஸ்சில்வெஸ்ரர் (இத்தாலி), றோசலின் (இத்தாலி), வில்சன் ஜெறின் (சமுர்த்தி முகாமையாளர் உடுப்பிட்டி ), அருட்தந்தை சில்வெஸ்ரர் தாஸ் (பங்குத்தந்தை, பளை), சில்வெஸ்ரர் ஜெகதாஸ் (பெல்ஜியம்), சில்வெஸ்ரர் ரேனுதாஸ் (லண்டன்), மேரிஜக்குலின் (பிரான்ஸ்), மேரிசெபோஜினி (லண்டன்), ஜெயரோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பவுலினப்பு, தார்சியஸ் (கனடா), தார்சில்டா ஆகியோரின் அன்புச்சகோதரரும் இளவரசி, நிக்ஷன், ரவிச்சந்திரன், லக்சனா, நந்தன், ரொனால்ட் ஆகியோரின் மாமனாரும் விதுஷா, திரிஷா, டிலக்சனா, அபிஷாந், திரிஷாந், ஜெசிக்கா, அர்வினா, றொபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் அருட்தந்தை தா. றெஜிக்குமார் அமதி (உப அதிபர் - புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை) அடிகளாரின் சிறிய தந்தையும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் பருத்தித்துறை VM வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஞாயிற்றுக்கிழமை (05.03.2017) மு.ப. 10 மணிக்கு செம்பியன்பற்று வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் (06.03.2017) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை அ. சில்வெஸ்ரர்தாஸ்
(பங்குத்தந்தை - பளை) 077 24 87 600

## முதலாம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு 31 . 05 . 1930



இறப்பு 14 . 02 . 2016

### செல்லையா பாலசிங்கம்

திதி:சப்தமி

பாசங்கள் பற்றுக்கள் வளர்த்திட்ட தலைவரே!
பிரியங்கள் பொறுமையாய் காத்திட்ட தந்தையே!
பொக்கிஷமான புழுகங்கள் தந்திட்ட தாத்தாவே!
சொந்தங்கள் பந்தங்கள் கூடிட்ட மாமாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நந்தாவில்
கொக்குவில்.

குடும்பத்தினர்.

---

யா/கொழும்புத்துறை சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்

## பழையமாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

திகதி : 19.03.2017 நேரம் : பி.ப. 2.30

இடம் : பாடசாலை பிரதானமண்டபம்

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர்**
**யா/கொழும்புத்துறை சென்ஜோசப்ஸ் வித்தியாலயம்.**

## வெளியீட்டு விழா

நீர்வேலி, வாய்க்காற்தரவை மூத்தவிநாயகர் தேவஸ்தான
ஆதீனகர்த்தா அமரர் சிவஸ்ரீ **சு. ஆபதோத்தாரணக் குருக்கள்**
அவர்களின் ஞாபகார்த்த விழாவும்

**"ஆபதோத்தாரணம்"**
நூல் வெளியீடும்

காலம் :05.03.2017 ஞாயிறு மாலை 4.00 மணி
இடம் :மேற்படி ஆலய மண்டபம்.
தலைமை: கலாநிதி பிரம்மஸ்ரீ **ம.பாலகைலாசநாதசர்மா**
(சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**வாய்க்காற்தரவைப் பிள்ளையார் கோயில்,**
**நீர்வேலி.**

குடும்பத்தினர்.

## Jaffna Medical Association Annual General Meeting - 2017

### NOTICE OF MEETING

Notice is hereby given to that the **Annual General Meeting (AGM)** of the Jaffna Medical Association will be held on **Thursday, 6th April, 2017 at 2.00 p.m. at the conference Hall of Teaching Hospital, Jaffna** for following purpose;

To receive and consider the Statement of Accounts for the year ended 31st December 2016 and the report of the Auditors thereon.

**By order of the Committee of Management,**
**Hon.Secretary**
**03rd March, 2017**

(ajacs/1580)(11,17,18)

## கல்லூரிச் சமூகம், கொக்குவில் இந்துக் கல்லூரி

பெற்றோர்கள்/பழைய மாணவர்கள்
அன்புடையீர்,

**அதிபர் நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல்**

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலை அதிபர் நியமனம் தொடர்பாக **கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கான** அவசர கலந்துரையாடல்.

- **இடம் : பஞ்சலிங்கம் கேட்போர்கூடம், கொக்குவில் இந்துக்கல்லூரி**
- **காலம் : 05.03.2017 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் : முற்பகல் 10.00 மணி**

குறித்த நேரத்திற்கு தவறாது சமுகமளித்து தங்களது ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**"தங்களின் ஒத்துழைப்பு தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தினை தீர்மானிக்கும்"**

**கல்லூரிச் சமூகம்,**
**KHC OSA's, KHC SDC, KHC TRUST**

## மந்தம்...

இலங்கை நல்லிணக்கத்துக்கும் நீதிக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். அரசமைப்பு உருவாக்க முயற்சி இலங்கையில் முன்னேற்றம் கண்டுள்ளது. பரந்துபட்ட மனித உரிமை நிகழ்சி நிரலிலும் இலங்கை சாதகமான சில மாற்றங்களை வெளிப்படுத்தியுள்ளது.

மிக முக்கியமாக நிலைமாறுகால நீதியை நிறுவும் செயற்பாடு கவலையளிக்கும் வகையில், மந்த கதியில் முன்னெடுக்கப்படுகின்றது. எமது அறிக்கை ஆய்வுக்கு உட்படுத்திய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புக்கள் மற்றும் நடவடிக்கைகள் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குப் போதுமானதல்ல.

கட்சி அரசியலும், அரசமைப்புச் சீர்த்திருத்தத்துக்கு முன்னதாக கூட்டுஅரசில் உள்ள பல்வேறு தரப்பினரையும் சமப்படுத்த - சமரசப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும், பொறுப்புக்கூறுதல் தொடர்பான கடினமான விடயங்களுக்குத் தீர்வு காண்பதில் தாமதத்தை - தயக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கூட்டு அரசின் அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் ஒருமித்த நிலைப்பாடு வெளிவருவதற்குத் தவறியுள்ளது. நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் தொடர்பில் தெளிவற்ற முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் வெளிவருவதற்கும் காரணமாகியுள்ளது. நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் செய்திகளும் பொதுவாகக் குழப்பத்தை ஏற்படுத்துபவையாகவும், முரணானவையாகவும் காணப்படுகின்றன.

இலங்கை மனித உரிமை பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு விடயத்தில் பல வழிகளில் மாற்றம் கண்டு வருகின்றது. எனினும் முழுமையான வலுவான தந்திரோபாயம் இல்லாத சந்தர்ப்பத்தில், மிகவும் கடினமான முயற்சிகள் மூலம் ஏற்படுத்தப்பட்ட இந்த மாற்றங்கள் கனவாகப் போய்விடலாம். இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடமுடியாது. கடந்த கால பயங்கரங்களை உறுதியாகக் கையாண்டு அவை மீண்டும் ஏற்படாததை உறுதி செய்வதற்காக இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும், மக்களையும் நல்லிணக்கத்துடன் நீதிக்கும் முன்னுரிமையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (த-5)

## 2நாள்களில்...

மாக இருக்குமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள தொற்று நோய்த் தடுப்பு மருத்துவ அதிகாரி கோ.றஜீவ் தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் 600 இற்கும் மேற்பட்டோரும், கடந்த பெப்ரவரியில் 300 இற்கும் மேற்பட்டோரும், கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் மட்டும் 20 பேருமாக இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் டெங்குத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. சுற்றுச் சூழலைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். டெங்கு பெருகும் வகையில் தண்ணீர் தேங்கியிருக்க இடமளிக்கவேண்டாம். நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பாக இருங்கள் என்று சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## திருகோணமலையில்...

பரிசோதனைக்குப் பின்னர், பெண்ணின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைத்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுத் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவோரில் கடந்த நான்கு தினங்களுக்குள் மூவர் உயிரிழந்துள்ளனர். கிண்ணியாப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தோரின் தொகை நான்காக உயர்ந்துள்ளது.

சுமார் 400க்கு மேற்பட்டோர், டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு மாதங்களில் 1,421 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் 824 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 510 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 87 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது. (த-ய-40)

## முன்னர்...

செயலாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் பிலக்குடியிருப்புப் பகுதியில் மக்களுக்குச் சொந்தமானதும் பொதுப் பயன்பாட்டுக்குமானதுமான 42 ஏக்கர் நிலங்கள் படையினரின் பயன்பாட்டில் இருந்தன. இதனால் வீடுகளை இழந்திருந்த 54 குடும்பங்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டதோடு நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

இருப்பினும் குறித்த பகுதி மக்கள் தமக்குப் பூர்வீக நிலமே வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததை அடுத்து அந்த நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளில் அவர்களுக்கான இருப்பிட வசதிகளையும் அடிப்படைத் தேவைகளையும் ஏற்படுத்துவதற்காக 6 மாத கால அவகாசம் வழங்கி அவற்றை ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் முன்பு வழங்கிய காணியையும் வீட்டையும் மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு மீளப்பெறப்படும் வீட்டு வசதிகளுடன் கூடிய காணிகளை மாவட்டத்தில் காணி வசதிகளற்று அல்லலபடும் ஏனைய குடும்பங்களுக்கு உரிய முறையில் பகிர்ந்தளிக்க ஆவன செய்யவேண்டும்என்றுள்ளது. (த-1017)

## பெற்றோரை...

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான். கடந்த மாதம் மிருசுவில், உசன் பகுதியில் பெற்றோர் தங்கியிருந்த வீட்டினுள் அத்துமீறிச் சென்ற மகன் அங்கிருந்தவர்களைக் கெட்ட வார்த்தைகளால் ஏசியதுடன் வீட்டின் கதவு மற்றும் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்துச் சேதப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்துப் பொலிஸார் இவரைக் கைது செய்து கடந்த ஐந்தாம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் இவரை உளநல மருத்துவரிடம் காண்பித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். மேலும் உளநல மருத்துவரின் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

மருத்துவரின் அறிக்கையில், இவர் கோபம் ஏற்பட்டால் மூர்க்கத்தனமாகச் செயற்படுவதுடன் மற்றோருக்குத் தீங்கு விளைவிக்கும் அபாயத்தன்மையுள்ளவர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான், காணிக்குள் அத்துமீறி உட்சென்றமை, அங்குள்ளவர்களைக் கெட்ட வார்த்தைகளால் ஏசியமை மற்றும் வீட்டின் கதவு, ஜன்னல் ஆகியவற்றின் கண்ணாடிகளை உடைத்துச் சேதம் விளைவித்தமை ஆகிய குற்றங்களுக்காக தலா ஒரு குற்றத்துக்கு இரண்டு வருடச் சாதாரண சிறைத் தண்டனைப் படி மூன்று குற்றங்களுக்கும் ஆறு வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்தார்.

சாவகச்சேரி நீதிமன்றில் அண்மைக்காலமாக வழங்கப்பட்ட அதியுயர் சிறைத் தண்டனையாக இந்தத் தீர்ப்பு உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## காணாமற்போனோர்...

அமைக்கப்படவில்லை. இந்த நிலையில், அந்த அலுவலகம் நிறுவப்படுவதைத் தடுக்கும்வகையில்தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் சட்டத்தரணி விஜித அல்விஸ் என்பவரே மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த அலுவலகம் உருவாக்கப்படுவதன் ஊடாகப் படையினர் காட்டிக் கொடுக்கப்படுவதாகவும், இந்த அலுவலகத்துக்கான அதிகாரிகளை நியமிப்பதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 13 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (த-5)

## ஐ.நா. மனித...

வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை ஜெனீவாவில் நேற்று வெளியாகியது. 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி விளக்கும் வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 17 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் இலங்கைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

### காணிகள் விடுவிக்கப்படவேண்டும்

இராணுவம் ஆக்கிரமித்துள்ள அனைத்துத் தனியார் நிலங்களையும் முன்னுரிமை அடிப்படையில் மீளக் கையளிக்க வேண்டும். வர்த்தக மற்றும் பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத்தின் தலையீடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் பரிந்துரைகளைத் தழுவி, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைவாக, நிலைமாறுகால நீதி தொடர்பாகக் கடப்பாடுகளைக் கால வரம்புடன் நிறைவேற்றுவதற்காக விரிவான ஒரு மூலோபாயத்தை வகுக்கவேண்டும். ஐ.நா மனித உரிமை ஆணையாளர் சபைக்குச் சமர்ப்பித்துள்ள முன்னைய அறிக்கைகள் மற்றும் தற்போதைய அறிக்கையின் பரிந்துரைகள் உள்ளடக்கப்படவேண்டும். இந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அல்லது தனியாக ஐ.நா மனித உரிமைகள் பொறிமுறைகளின் முக்கியமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தெளிவான திட்டம் தயாரிக்கவேண்டும்.

### ஐ.நா. பிரதிநிதிகளை இலங்கைக்கு அழைக்க வேண்டும்

நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை வடிவமைக்கும் செயல்முறை, விடயத்தில் பொதுமக்கள், பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஏனைய பங்காளர்களுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட வேண்டும். உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தும், சிறப்பு அறிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, இந்தச் செயல்முறையில் அவருடன் தொடர்ந்து இணைந்து செயற்படவேண்டும். சம்பந்தப்பட்ட சட்டவரைவுகளுக்கான ஆலோசனை பெறுவதற்குச் சம்பந்தப்பட்ட, ஐ.நா பொதுச்செயலரின் சிறப்பு பிரதிநிதிகளை இலங்கைக்கு அழைக்க வேண்டும்.

சமூக செயற்பாட்டாளர்கள் மீதான எல்லா வகையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்களையும், பாதுகாப்புப் படைகள் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இராணுவம், புலனாய்வுப் பிரிவு, பொலிஸூக்குத் தெளிவான உத்தரவுகள் பகிரங்கமாக விடுக்கப்பட வேண்டும்.

### பாதுகாப்பு மறுசீரமைப்பு வேண்டும்

முழு அளவிலான ஆய்வு செயல்முறையை உருவாக்கி, மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய பாதுகாப்புப் படையினர் மற்றும் சிவில் அதிகாரிகளை பணியில் இருந்து நீக்கவேண்டும். பொறுப்புக்கூறலை வலுப்படுத்த, பாதுகாப்புத் துறையில் ஏனைய மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தவேண்டும். ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் பங்கேற்க விண்ணப்பிக்கும் படைப்பிரிவுகள், மற்றும் தனிநபர்கள் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

### ரோம் பிரகடனத்தில் இணைந்து கொள்ளவேண்டும்

ஜெனிவா பிரகடனங்கள், மற்றும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் குறித்த ரோம் பிரகடனம் ஆகியவற்றில் இணைந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட கட்டளை அல்லது பொறுப்பான உயர்நிலையினர் எந்தத் தடைகளும் இல்லாமல் பொறுப்புக் கூறத்தக்க வகையில், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிராக குற்றங்கள், இனப்படுகொலை, மற்றும் காணாமலாக்கப்படுவது தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

### கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும்

பன்னாட்டு மனித உரிமைச் சட்ட மற்றும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்ட மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு, பன்னாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய, கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கும் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அதன் பொறுப்பை திறம்படச் செயற்படுத்துவதற்குத் தேவையான வளங்களை வழங்க வேண்டும். மரபணுப் பரிசோதனை, தடயவியல் மற்றும் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களை உறுதிப்படுத்தியதாக, பொலிஸ் மற்றும் நீதித் துறையின் தடயவியல் திறனை வலுப்படுத்த வேண்டும்.

### பயங்கரவாதச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்

சிறந்த பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரின் வழக்குகளும் மீளாய்வு செய்யப்பட்டு, அவர்களை விடுவிக்க வேண்டும் அல்லது உடனடியாகச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

சித்திரவதைகள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாகச் சரியான விசாரணைகளை நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். போதிய வளங்கள் மற்றும் ஆணையை முன்னெடுப்பதற்கான தொழில்நுட்பங்களுடன் கூடிய உண்மையைக் கண்டறியும்பொறிமுறையை வடிவமைத்து, உருவாக்கி, நடைமுறைப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ஆதரவை வலுப்படுத்தும் வகையில், தேசிய இழப்பீட்டுக் கொள்கையை அரசு விருத்தி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## புதிய...

புதிய அரசமைப்பு முயற்சிகளை விரைவுபடுத்துவது தொடர்பில் சிவில் அமைப்புக்களுக்கும், கூட்டு அரசின் அமைச்சர்களுக்கும் இடையில் பெப்ரவரி மாத ஆரம்பத்தில் சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. இதன் பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சிவில் அமைப்புக்களுக்கும் இடையில் கடந்த வாரம் இந்த விடயம் தொடர்பில் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இந்த நிலையில் புதிய அரசமைப்பை விரைவாக நிறைவேற்றுவதற்கு பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளைச் சிவில் அமைப்புக்கள் ஆரம்பிக்கவுள்ளன. இந்தச் செயற்றிட்டத்தில் 49 சிவில் அமைப்புக்கள் கைகோர்த்துள்ளன.

இலங்கை மன்றக் கல்லூரியில் எதிர்வரும் 15 ஆம் திகதி இதன் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படாது என்றும், பொதுவாக்கெடுப்பு நடத்தப்படாது என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ச்சியாகத் தெரிவித்து வரும் நிலையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்வில் கலந்து கொண்டு, சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## குடாநாட்டிலும்...

அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டபோது 3 நாள்களாகத் தனியார் வைத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளார். அது பயனளிக்காத நிலையில் நேற்று மற்றொரு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சென்றுள்ளார். பின்னர் அவர் அம்புலன்ஸ் மூலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அந்தப் பெண் உயிரிழந்தமை மருத்துவப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் டெங்குத் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. டெங்குத் தொற்றுத் தீவிரமாக இருப்பதால் பொதுமக்கள் சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதாரத் துறையினரால் அறிவுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்திலும் பெண் ஒருவர் டெங்குத் தொற்றினால் பீடிக்கப்பட்டு நேற்று முன்தினம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## ஒத்த ஓசைச் சொற்களை எழுதுவோம்

**மரம்**
வ ______
த ______
ப ______
க ______
ச ______

**பட்டம்**
வ ______
ம ______
த ______
ந ______
ச ______

**வடை**
கு ______
ந ______
ப ______
ச ______
க ______

**கடி**
ந ______
பி ______
ம ______
த ______
கு ______

**சாலை**
மத ______
சோ ______
வே ______
கா ______
பா ______

**ஆடு**
வீ ______
நா ______
கூ ______
பா ______
ஏ ______

## நவீன முயலும் முட்டாள் ஆமையும்


ஆமையும் முயலும் போட்டிக்குத் தயாராகின. பார்வையாளர்களாக இருந்த காட்டு மிருகங்கள் "முயலின் பாய்ச்சலின் முன் உன் மெதுவான நகர்வு எம் மாத்திரம் பேசாமல் போட்டியில் இருந்து பின் வாங்கி விடு" என்று ஆமைக்கு அறிவுரை கூறின. சில மிருகங்கள் "யாருடன் போட்டிக்குச் செல்வது என்று ஒரு வரையறையே இல்லையா?" என்று தமக்குள் பேசிக் கொண்டன. ஆமையோ " நீங்கள் அமைதியாக இருந்து நடப்பதைக் கவனியுங்கள். முன்னர் ஒரு தடவை எனது தாத்தா முயலோடு போட்டி போட்டு வென்றவர். இது உங்களுக்குத் தெரியாது" என்றது. "எப்படி வென்றார்" என்று கேட்டது ஒரு மிருகம். "முயல்களுக்கு தமது ஓட்டவேகம் பற்றி கர்வம் உண்டு. அதனால் ஓட்டத்தின் நடுவில் பாதி வழியில் முயலார். தூங்கி விட எங்கள் தாத்தா வென்று விட்டார். அந்தக் காலத்தில் அது ஒரு பெரிய கின்னஸ் சாதனையாகக் கூறப்பட்டது என்று தாத்தா எனக்குக் கூறியுள்ளார். அந்த வழியில் நானும் வெற்றி பெற்றுக் காட்டுகிறேன் பொறுத்திருங்கள்" என்றது முயல்.

போட்டி ஆரம்பமானது வேகமாக ஓடிய முயல் சற்றுத் தூரம் சென்று திரும்பிப் பார்த்தது. ஆமையின் வருகைக்கான சாத்தியம் எதுவும் முயலுக்குத் தென்படவில்லை. "அட சரிதான் இந்த ஆமைகளோடு எவரும் போட்டிக்குப் போவார்களா? ஆமையார் வருவது எப்போது? போட்டி முடிவது எப்போது? "என தனக்குள்ளே பேசிக் கொண்டு" நான் அதற்குள் சிறிது வேளை இவ்விடத்தில் தூங்கி எழப் போகிறேன் என்று ஒரு மரத்தடியில் அமர்ந்து தூங்கத் தொடங்கியது முயல்.

ஒரு வழியாக அந்த மரத்தடியை ஆமை வந்தடைந்த போது முயல் அயர்ந்து தூங்குவதைக் கண்டது. "ஆகா! இந்த முயல்களே இப்படித்தான். என் தாத்தா காலத்திலும் சரி, இக் காலத்திலும் சரி கர்வம் பிடித்தவர்களேதான். மாற்றமே இல்லை. இவர்களைத் திருத்தவே முடியாது" என்று எண்ணி மனதுக்குள் சிரித்தபடி தொடர்ந்து ஓடத் தொடங்கியது ஆமை.

ஓடுவதும் திரும்பி நின்று பார்ப்பதும் மீண்டும் ஓடுவதுமாக இருந்தது ஆமை. ஆனால் முயலோ வருவதாக இல்லை. ஆமை மனதுக்குள் "சரிதான் என் தாத்தா போலவே எனக்கும் இன்று வெற்றிதான்" என்று எண்ணியபடி வெற்றிக் கம்பத்தை நெருங்கிய போது புயல் போல பாய்ந்து வந்த முயல் வெற்றிக் கம்பத்தை ஒரே பாய்ச்சலில் தாண்டியது.

ஆமை அதிர்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் சந்தேகத்துடனும் முயலைப் பார்த்தது. ஆமையின் குறிப்பை அறிந்து கொண்ட முயல் சிரித்துக் கொண்டே" நண்பா, எல்லா நேரத்திலும் எல்லோரும் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள். எனது தாத்தா ஏதோ ஒரு தப்புக் கணக்குப் போட்டு அப்போது தூங்கியதால் உனது தாத்தாவிடம் தோற்றுப் போனார்.




நீயும் அதே தப்புக் கணக்கை இன்று போட்டு தோற்றுப் போனாய். நான் இக்காலத்துப்பிள்ளை. நேரத்தை சரியாக கணக்குப் பண்ண எனக்கா தெரியாது? உன் வேகத்தையும் ஓட வேண்டிய தூரத்தையும் கணக்குப் பண்ணி அதற்குத் தகுந்த மாதிரி இடையே ஓய்வு எடுத்தேன். எப்படி சரியான நேரத்துக்கு விழித்தேனென யோசிக்கிறாயா? இதோ பார் என் கைக் கடிகாரத்தில் நேரம் குறித்து 'அலாரம் வைத்திருந்தேன் அவ்வளவுதான்" என்றது சிரித்தபடி.

"மன்னிக்கவும் நண்பா, நான் உன்னைத் தவறாக எடை போட்டு விட்டேன். உன் வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்" என்றது ஆமை.

**யாரையும் எப்போதும் தப்புக் கணக்குப் போடக் கூடாது முன் ஒருவரது அனுபவம் பின் ஒருவருக்குப் பாடமாக அமையும்.**

## புள்ளிகளை இணைத்து படம் வரைவோம்



## இணைந்து தழைப்போம்

பள்ளிப் பிள்ளைகள் நாமெல்லோரும்
ஒன்று கூடுவோம்
பாரில் உள்ளோர் வியந்திடவே
பணிகள் புரிவோம்

எம் மதமும் நம் மதமாய்
எண்ணிப் போற்றுவோம்
எல்லோரும் நம் சொந்தமென
உரிமை கொள்ளுவோம்

மனிதர் தம்மை மனிதர் கொல்லும்
மடமையை அழிப்போம்
புனிதமான மனித உயிர் அதைப்
போற்றி வளர்ப்போம்

திறமைக்கேற்ப அவரவர்க்கு
தொழிலையும் தருவோம்
தேவைக் கேற்ப வசதிகளை
பெருக்கியும் அளிப்போம்

கூட்டுறவே நாட்டு நலன் என
கூடி உழைப்போம்
ஈட்டியதைத் தினம் பகிர்ந்துண்டே
இணைந்து தழைப்போம்



## நான் பறவையானால்

- நான் பறவையாக உருமாறிப் பார்க்கிறேன்.
- எனது உலகம் அழகானது.
- அதனைச் சுற்றிப் பார்க்க ஆசையாக இருக்கிறது.
- எனது சிறகுகளை விரிக்கிறேன்.
- கால்களை உள்ளிழுத்துப் பறக்கிறேன்.
- எனக்குக் கீழ் உலகம் அற்புதமாக இருக்கிறது.
- மரக்கிளைகளைத் தொட்டு அளைகிறேன்.
- கனிகளை எனது கூரிய அலகினால் கோதி உண்கிறேன்.
- இலை தளிர்கள் சுவையாக இருக்கின்றன.
- எனது குரலிலும் வித்தியாசத்தை உணர்கிறேன்.
- எனக்கு அழகிய தோகை போன்ற வாலிருக்கிறது.
- பறக்கும் போது வாலை அசைத்தால் வேண்டிய பக்கம் போகலாம்.
- அலகினால் மரங்களின் சுள்ளிகளை எடுத்து கூடு கட்டுகிறேன்.
- சமைக்கத் தேவையில்லை
- காசு பணம் தேவையில்லை
- சொத்து சுகம் எனக்குத் தேவையில்லை.
- களவு, பொய் இல்லாத வாழ்க்கையை அனுபவிக்கிறேன்.
- போட்டி பொறாமையில்லாத உலகத்தில் பறக்கிறேன்.
- அதிகாலையில் எழுந்து விடுகிறேன்.
- என் நண்பர்களுடன் சேர்ந்து வானில் சிறகடித்துப் பறப்பது அற்புதமானது.
- வானில் இருந்து பூமியைப் பார்க்கிறேன். மரங்களும் மலைகளும் ஆறுகள், அருவிகள் ஓடைகள், நீர்நிலைகள் கண்கொள்ளாக் காட்சிகள்.
- உண்பதோடு உல்லாசமாய் இருப்பதற்கு நீங்களும் பறவையாகுங்கள்.



## ஆலங்கட்டி மழை

சிறு சிறு பனிக் கட்டிகளாக மழை பொழிவது ஆலங்கட்டி மழை எனப்படுகின்றது. இந்தப் பனிக் கட்டிகளின் அளவு 5 மில்லிமீற்றருக்கு மேல் இருக்கும். இடியுடன் கூடிய மழையின் போது இப்படி பனிக் கட்டிகள் விழக் கூடும். மழைத்துளிகள் மிகவும் குளிர்ந்து போகும் போது தூசுகள் போன்றவற்றுடன் சேர்ந்து உறைந்து ஆலங்கட்டி மழையாகப் பொழிகின்றன. முதலில் மிகச் சிறியதாக இருக்கும் பனிக் கட்டித் துண்டுகள் கீழே வர வரப் பெரிதாகி சற்று பெரிய துண்டுகளாக பூமியை அடைகின்றன. காற்றினால் அடித்துச் செல்ல முடியாத அளவில் அவை பெரிய அளவை அடையும்போது தரையில் விழுகின்றன. இவ்வாறு பெரிய அளவான பனிக்கட்டிகள் விழும்போது வீடுகள், பயிர்கள் சேதப்படும். ஏன் மனிதர்கள் விலங்குகளைக் கூட படுகாயம் அடையச் செய்யும். அமெரிக்காவில் கான்சாஸ் மாநிலத்தில் காவி வில்லி பகுதியில் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் விழுந்த ஆலங்கட்டி மழைப் பனிக்கட்டிதான் இதுவரை பூமியில் விழுந்தவற்றில் பெரியதாகும். இதன் எடை ஏறக்குறைய முக்கால் கிலோ வாகும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டமொன்றில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதவுள்ளது. (ம-23)

## ஐக்கிய அணி சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 4
பருத்தித்துறை பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய அணி சம்பியனானது.
வல்வை சிவகுரு வித்தியாலய பூப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியமும் வல்வை விளையாட்டுக் கழகமும் மோதின. இரண்டு தனிநபர் ஒரு இரட்டையர் ஆட்டங்களைக் கொண்ட இறுதி அமைந்தது. இரு தனிநபர் ஆட்டங்களையும் கைப்பற்றிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-108)

# யங்ஹென்றிஸ்-ஞானமுருகன் இறுதியில் இன்று பலப்பரீட்சை





யாழ்ப்பாணம், மார்ச் 4
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி இன்று மோதவுள்ளது.
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இந்த இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது. இளவாலை யங்ஹென்றிஸ் அணி தனது அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியைத் தோற்கடித்தும் மயிலங்காடு ஞானமுருகன் அணி தனது அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் ஜோசவாஸ் அணியைத் தோற்கடித்தும் இறுதிக்குத் தகுதிபெற்றன.
முன்னதாக இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மன்னார் ஜோசவாஸ் அணி மோதவுள்ளது. (ம-23-108)

# துணைவி செனிஸ்ரார், வட்டுக்கோட்டை வி.க. அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 4
அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் துணைவி செனிஸ்ரார், வட்டுக்கோட்டை வி.கழக அணி ஆகியன வெற்றிபெற்றன.
அராலி மாவத்தையில் உள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் துணைவி செனிஸ்ரார் அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் செனிஸ்ரார் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி பாரதி அணி மோதியது. இதில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## சந்திரமௌலீச வித்தி. கரப்பந்தில் சாதித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 4
தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய அணியை எதிர்த்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய அணி மோதியது. இதில் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய அணி 25:16, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. மூன்றாமிடத்தை மிருசுவில் அ.த.க. பாடசாலை அணி பெற்றது. (ம-422)

## சமநிலைத் தவிர்ப்பில் வைத்து வென்றது விக்னேஸ்வரா அணி

யாழ்ப்பாணம், மார்ச் 4
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் புத்தூர் விக்னேஸ்வரா அணி சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது விக்னேஸ்வரா. (ம-23)

# கற்கோவளம் மெ.மிசன் சம்பியன்



யாழ்ப்பாணம், மார்ச் 4
வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கபடித் தொடரில் 17 வயது ஆண்கள் பிரிவில் கற்கோவளம் மெதடிஸ்த மிசன் பாடசாலை நடப்பு வருட வலயச் சம்பியனானது
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயமும் கற்கோவளம் மெதடிஸ்த மிசன் பாடசாலையும் மோதின. ஆரம்பம் முதல் இறுதிவரை தனித்து ஆதிக்கம் செலுத்திய கற்கோவளம் அணி 29:12 என்று முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதியிலும் தனது வெற்றிநடையை நிலைநாட்டிய அந்த அணி முடிவில் 69:22என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. மூன்றாமிடத்தை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம் தனதாக்கியது. (ம-422-108)

## இன்று இறுதி

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது.
முடிவடைந்த 4 ஆட்டங்களில் இரு அணிகளும் தலா இரு ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளன. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்பதால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக மாறியது. (ம)

## யங்ஸ்ரார் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், மார்ச் 4
வவுனியா பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
வவுனியா நகரசபை மைதானத்தில் அண்மையில் இந்த இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன. தடகளம் மற்றும் பெரு விளையாட்டுக்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 111 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனானது. 58 புள்ளிகளைப் பெற்று அண்ணா விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும், 30 புள்ளிகளைப் பெற்று விவேகானந்தா விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. (ம-23)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் குழுநிலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான குழு நிலைப் போட்டிகள் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
இதன்படி, பெண்களுக்கான வலைப் பந்து போட்டிகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மைதானத்திலும் ஆண்களுக்கான எறிபந்துப் போட்டிகள் வரணி மத்திய கல்லூரி மைதானத்திலும் இன்று நடைபெறவுள்ளன.
இருபாலாருக்குமான துடுப்பாட்டத் தொடர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நாளையும், நாளை மறுதினமும், இருபாலாருக்குமான சதுரங்கத் தொடர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் ஏழாந் திகதியும் நடைபெறவுள்ளன.
இருபாலாருக்குமான பூப்பந்தாட்டத் தொடர், அரியாலை சரஸ்வதி உள்ளக விளையாட்டரங்கிலும், இருபாலாருக்குமான கடற்கரை கரப்பந்தாட்டம் கச்சாய் அ.த.க. பாடசாலை கடற்கரைப் பிரதேசத்திலும் எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளன. (ம-9)

# டெஸ்ட் அணியில் குப்திலுக்கு இடமில்லை

நியூசிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியில் அதிரடி வீரர் குப்திலுக்கு இடம்கொடுக்கப்பட மாட்டாது என்று அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் மைக் ஹசன் தெரிவித்தார்.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது தென்னாபிரிக்க அணி. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இறுதி ஒருநாள் ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது. அடுத்ததாக மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. ஒருநாள் தொடரில் குப்தில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். குறிப்பாக நான்காவது ஆட்டத்தில் 180 ஓட்டங்களை விளாசினார். இதனால் டெஸ்ட் அணியில் அவர் உள்வாங்கப்படுவார் என்ற கணிப்புக்கள் நிலவின. ஆனால் அவர் டெஸ்ட் குழாமில் உள்வாங்கப்பட மாட்டார் என்று பயிற்சியாளர் மைக்சன் தெரிவித்தார்.

குப்தில் டெஸ்ட் அணியில் இடம் பெறமாட்டார். அவர் தற்சமயம் அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவித்ததால், அதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு வரலாம். ஆனால் உலகத்தரம் வாய்ந்த வீரர்களில் பலர் ஒரு வடிவிலான ஆட்டங்களில் சிறப்பாக செயற்பட்டு, இன்னொரு வடிவிலான ஆட்டங்களில் தடுமாறியதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு என அவர் மெலும் தெரிவித்தார்.

குப்தில், கடைசி 10 டெஸ்ட் இன்னிங்சில் ஓர் அரைச்சதம் மட்டுமே பதிவுசெய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# பெங்களூரில் இந்தியாவை தோற்கடிப்பது மிகக் கடினம்

## என்றார் கிளார்க்

பெங்களூர் மைதானத்தில் வைத்து இந்திய அணியைத் தோற்கடிப்பது மிகவும் கடினம் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க் தெரிவித்தார்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் பெங்களூரில் இன்று ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே கிளார்க் நேற்றுமுன்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

புனே டெஸ்டில் (இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட்) இந்தியா நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியிருந்தால் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றிருக்குமா என்று தெரியவில்லை. ஆனால் பெங்களூரில் இந்திய அணியை தோற்கடிப்பது மிகவும் கடினமானதாக இருக்கப்போகிறது. நாணயச் சுழற்சியில் வென்றாலோ அல்லது தோற்றாலோ ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸிற்காக 450 ஓட்டங்களைக் குவிக்க வேண்டியது கட்டாயம். கோக்லி, அஸ்வின் எனும் இரண்டுதூண்களைச் சமாளிக்கும் முறையை ஆஸ்திரேலிய வீரர்கள் அறிந்திருக்க வேண்டும். புனேயில் நடந்ததை வைத்து இந்திய அணியை எடைபோட வேண்டாம் என்று கிளார்க் மேலும் தெரிவித்தார். (ம)

# சச்சின் செய்யாததை சாதித்தார் கோக்லி

## கங்குலி புகழாரம்

புனே டெஸ்ட் தோல்விக்குப் பிறகு இந்தியா நிச்சயம் வெற்றிப்பாதைக்குத் திரும்பும், கோக்லியின் தலைமைத்துவத்தின் மீது தனக்கு அபார நம்பிக்கை இருக்கிறது என்று முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணி கடந்த ஒன்றரை வருடங்களாக சிறப்பாகத் திகழ்ந்தது. அனைத்தையும் வென்றனர். ஆனால் இப்போது மீண்டு வந்து கடினமாக விளையாட வேண்டும். இந்திய அணி கவலைப்படவேண்டியதில்ல, அஸ்வின், ஜடேஜா இந்திய அணிக்கு வெற்றி பெற்றுத் தருவார்கள். இந்திய அணிக்கு இப்போது தேவை நடுவர் முடிவை பரிசீலனை செய்யும் வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்துவதே.

கோக்லி நிச்சயம் பதிலடி கொடுப்பர். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அவரது ஆட்டம் நம்பமுடியாதது. ஆஸ்திரேலியாவில் அவர்களுக்கு எதிராக 4 டெஸ்ட் சதங்களை எடுத்தது நம்ப முடியாத ஆட்டம், சச்சின் டெண்டுல்கர் கூட இதனைச் செய்து நான் பார்த்ததில்லை என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

# ஜோகோவிக்கை திணறடித்து அரையிறுதியில் கிர்ஜியோஸ்

மெக்சிக்கோ ரென்னிஸ் தொடரில் ஜோகோவிக்கை தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் ஆஸ்திரேலிய வீரரான நிக் கிர்ஜியோஸ்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீரரான ஜோகோவிக்கும், 17 ஆம் இடத்தில் உள்ள வீரரான ஆஸ்திரேலியாவின் கிர்ஜியோஸும் பலப்பரீட்சை நடத்தினர்.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 7:5, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் கிர்ஜியோஸ். (ம)



# நிதுசாந், துவாரகன் அரைச்சதம்; பதிலடி கொடுக்கிறது யாழ். இந்து

கொழும்பு, மார்ச் 4

'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில் இரு அணிகளும் சீரான ஆதிக்கத்துடன் உள்ளன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக யதுசன் 63 ஓட்டங்களையும், ஹரிகரன் 43 ஓட்டங்களையும், மதுசன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். ப்ந்துவீச்சில் நிதுசன், சிவலக்சன், அபிநயன், லிங்கேஸ் நால்வரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணி நேற்றைய நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அதிகபட்சமாக நிதுசாந் 52 ஓட்டங்களையும், துவாரகன் 51 ஓட்டங்களையும், சந்தோஸ் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கஜேந்திரன் 5 இலக்குகளையும் சரோன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டத்தின் இறுதி நாள் இன்றாகும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி இன்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடவுள்ளது. (ம-422)



# இலக்கு காப்பிலிருந்து ரகிம் விடுவிப்பு

பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் தலைவரான ரகிம், இலக்குக் காப்பாளர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

பங்களாதேஷ் அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முதலாவது ஆட்டம் காலியில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் ரகிம் இலக்குக்காப்பாளராகச் செயற்படமாட்டார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்தது.

அந்த அணி அண்மையில் இந்தியாவுக்குச் சென்று ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடியது. ரகிம், இலக்குக் காப்பில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார். குறிப்பாக சகாவுக்கு தவறவிட்ட இலகுவான ஸ்டம்பிங் வாய்ப்பால் அவர் மீது விமர்சனங்கள் குவிந்தன. இதனையடுத்தே அவர் இலக்குக் காப்பில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

லிட்டன் தாஸ் இலக்குக் காப்பாளராகச்செயற்படுவார் என்றும் குறிப்பிடப்பட்டது. (ம)

# மழை காரணமாக கைவிடப்பட்டது 'நண்பர்களின் போர்'





'நண்பர்களின் போர்' என வர்ணிக்கப்படும் முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் (ஸ்ரான்லிக் கல்லூரி) இடையிலான கிரிக்கெட் ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. நடப்பு வருடத்துக்கான ஆட்டம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வித்தியானந்தாக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி அணி 29-3 என்ற நிலையில் இருந்தபோது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது. மழையைத் தொடர்ந்து மைதானத்துக்குள் வெள்ளம் பெருக்கெடுத்ததை அடுத்து நடப்பு வருடத்துக்கான ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ம-23)

# இறுதி நிமிடங்களில் ரொனால்டோ அதிரடி

## தோல்வியைத் தவிர்த்தது மட்ரிட்




ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான பழைமை மிகுந்த தொடரான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ரியல் மட்ரிட், லொஸ் பல்மாஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில்முடிவடைந்தது.


ஆட்டம் ஆரம்பித்து 8 ஆவது நிமிடத்தில் இஸ்கோ ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவு செய்தார். 10 ஆவதுநிமிடத்தில் பதிலடி கொடுத்தார் ரனா. 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 56 ஆவதுநிமிடத்தில்ஜொனதன், 59 ஆவது நிமிடத்தில் போட்நெக் இருவரும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது லொஸ் பல்மாஸ். முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் காரணத்தால் சிவப்பு அட்டைகாட்டப்பட்டுவெளியேற்றப்பட்டார்பேல். ஆட்டத்தில் இறுதி 5 நிமிடங்கள் இருக்கும்வரை மட்ரிட் பின்தங்கியே இருந்தது. அந்த அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோ 86 ஆவது மற்றும் 89 ஆவதுநிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார். இதனால் ஆட்டம் 3:3 என்றானது. மேலதிகமாற்றங்கள் ஏதும் ஏற்படாததை அடுத்து ஆட்டம் சமநிலை கண்டது.

(ம)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை பேரம்பலம்



மீசாலை வடக்கு, வேம்பிராய், கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பேரம்பலம் நேற்று (03.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சிதம்பரநாதனின் பாசமிகு சகோதரனும் சுகந்தி, கங்கா, யமுனா ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலநாதன், சுரேன், மன்மதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சன்சிகா, ஆருஷ், ஆன்சியா, அக்ஷயா, ஆரோன் ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, வேம்பிராய், கொடிகாமம்.**

தகவல்: **குடும்பத்தினர்.**

### சின்னத்தம்பி மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற இ.போ.ச பொறியியல் ஊழியர்)



சிவன் கோயிலடி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகாலிங்கம் நேற்று (03.03.2017) மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் மூத்த மருமகனும் பாக்கியலட்சுமியின் பாசமிகுகணவரும் காலஞ்சென்ற சுரேஸ்குமார், நந்தகுமார் (நந்தன்), ஆதவன் (தாதிய உத்தியோகத்தர் தெல்லிப்பழை, ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் மகாதேவன், மகானந்தம், அரசலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரரும் சந்திரவேணியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயில் வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**

தகவல் **குடும்பத்தினர்.** 075 041 3020

### நல்லதம்பி வடிவேலு

**தோற்றம்.03.03.1934** **மறைவு.03.03.2017**



நக்காவீதி,சுண்டுக்குளி (யாழ்ப்பாணம்) யை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட நல்லதம்பி வடிவேலு நேற்று (03.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான நாகநாதன் தெய்வானை தம்பதி யரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக்கணவரும் சந்திரசேகரன்(லண்டன்), ஞானசேகரன் (ஜேர்மனி), சாமேஸ்வரி(லண்டன்), சதாநந்தி, சாந்தேஸ்வரி, யசோதினி,மனோரஜனி ஆகியோரின் பாசமிகுதந்தையும்வேந்தனார் (லண்டன்), வசந்தாதேவி(லண்டன்), சுபாஜினி(ஜேர்மனி), காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் அரசரெட்ணம்,கஜேந்திரகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2017)ஞாயிற்றுக் கிழமைமு.ப10.00மணிக்கு அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.10, றக்கா வீதி, சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.**

தகவல் **ஞானசேகரன் (மகன்)**

## கைதடி வீட்டுத்திட்டச்சங்கம்

**சித்தம் வீட்டுத்தோட்டம்**

**பதிவு இல. 2434 - 13.04.1974**

### 43 ஆவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

**காலம்** - 05.03.2017 ஞாயிறு பி.ப. 3 மணி

**இடம்** - மாகாணசபைக்கு முன்னால் சங்க மைதானம்

**இக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்க இருப்பதால் சங்க உறுப்பினர்களும், பயனாளிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**புலவர் செ.து. தெட்சணாமூர்த்தி**
**தலைவர்.**

**சு.பிரகலாதன்(மண்கும்பான் பிரபு)** **செயலாளர்.**

**பொ. இ. மயூரன்** **பொருளாளர்.**

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
03.03.2017 | 2103 | சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 25 35 53 60
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி ரூ 11, 556, 501/=
2017.03.05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சீட்டிழுப்பு திகதி: 03.03.2017
வெற்றி இலக்கங்கள் 10 29 40 48 U
ரூ. 23,311,819/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சீட்டிழுப்பு வாரம்: 107
சீட்டிழுப்பு திகதி: 03.03.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 77,959,372/-
Q 23 50 58 65
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**வேலைவாய்ப்பு**
வத்தளையில் இயங்கும் நிறுவனத்துக்கு சிங்களம் பேசக்கூடிய கணினி அறிவுடைய ஆண் ஒருவர் தேவை. சிறந்த சம்பளம், சாப்பாடு, தங்குமிட வசதியும் இலவசம்.
077 069 6816 / 077 027 7365

**காணி வீடு விற்பனைக்கு**
தபால்நிலைய வீதி, சாவகச்சேரியில் 17 பரப்புக் காணியும் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.
077 986 5761

**காணி விற்பனைக்கு**
யாழ். 21ஆம் வட்டாரம், புன்னாலை வீதியில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 058 5766

**விற்பனைக்கு**
புறோயிலர் சுத்தம் செய்தது 1kg 400/= அத்துடன் ஊர்ச்சேவல், கல்பேட், பேரன்ஸ், முட்டை என்பன விற்பனைக்குண்டு.
தாசன் பாம்
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
076 709 3847

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification: G.C.E. O/L 6Passes with 5 credits
கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Courses**
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification: G.C.E. A/L 3 Passes
Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382 /
021 222 9149

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.